




# அறிவின் தேட்டம்



அமரர் திருமதி சிவனேஸ்வரி
ஸ்ரீவிக்கினேஸ்வரன் அவர்களின்

நினைவஞ்சலி மலர்





# அறிவின் தேட்டம்

அமரர் திருமதி சிவனேஸ்வரி ஸ்ரீவிக்கினேஸ்வரன் அவர்களின்
நினைவஞ்சலி மலர்

# அறிவின் தேட்டம்

அமரர் திருமதி சிவனேஸ்வரி ஸ்ரீவிக்கினேஸ்வரன்
அவர்களின்
நினைவஞ்சலி மலர்

## நூலியல் தகவல்


| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | அறிவின் தேட்டம் |
| உப தலைப்பு | : | அமரர் சிவனேஸ்வரி ஸ்ரீவிக்கினேஸ்வரன் நினைவஞ்சலி மலர் |
| தொகுப்பாசிரியர் | : | என்.செல்வராஜா, லண்டன். |
| வெளியீட்டாளர் | : | வைத்திய கலாநிதி எஸ்.கேதீஸ்வரன்<br>இல. 96, முதலாம் குறுக்குத் தெரு<br>யாழ்ப்பாணம் |
| பதிப்பு | : | 30.12.2018<br>(அமரர் சிவனேஸ்வரி ஸ்ரீவிக்கினேஸ்வரனின் அந்தியேட்டி தினம்) |
| அச்சகம் | : | குமரன் புத்தக இல்லம்<br>39, 36ஆவது ஒழுங்கை<br>கொழும்பு-6 |
| பக்கங்கள் | : | viii+114 |
| விலை | : | அன்பளிப்பு |
| அட்டை வடிவமைப்பு | : | கௌதமன் செல்வராஜா |

**Arivin Thettam: Sivaneswary Sri Vickneswaran Memorial Volume**

| | | |
|---|---|---|
| Compiler | : | N.Selvarajah, London |
| Publishers | : | Dr.S.Ghetheeswaran<br>96, First Cross Street<br>Jaffna |
| Edition | : | First Edition, 30 December 2018 |
| Printers | : | Kumaran Book House<br>39, 36th Lane<br>Colombo 6 |
| Pages | : | viii+114 |
| Price | : | Free |
| Cover Design | : | Gauthaman Selvarajah |


© Copy Right 2018 by Dr.S.Ghetheeswaran

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publishers.

உ

சிவமயம்



## அமரர் சிவனேஸ்வரி ஸ்ரீவிக்கினேஸ்வரன்

தோற்றம்
01.11.1941

மறைவு
30.11.2018

### திதி வெண்பா

ஆண்டது நல்விளம்பி அவைகார்த் திகையபரம்
பூண்டதிதி அட்டமியில் புவியிழந்து - நீண்டபுகழ்
சிவனேஸ் வரிமங்கை சிற்பரன்தாள் சென்றடைந்தாள்
தவமதுவோ தனியென்று தெரி.

# பொருளடக்கம்


அமரர் சிவனேஸ்வரி ஸ்ரீவிக்கினேஸ்வரன் அவர்களின் நினைவாக...

1. யாழ்ப்பாணத்துச் சமையல் 73

2. முருகப் பெருமானின் விரதங்களும் விழாக்களும் 89

3. கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தானம்: ஒரு வரலாற்றுக் குறிப்பு 106

அமரர் சிவனேஸ்வரி ஸ்ரீவிக்கினேஸ்வரன்
அவர்களின் நினைவாக...

# பஞ்ச புராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தினை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

மந்திர மாவதுநீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவதுநீறு துதிக்கப் படுவதுநீறு
தந்திர மாவதுநீறு சமயத்தி லுள்ளதுநீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

## திருவாசகம்

பால்நினைந்(து) ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்(து) அருளுவ(து) இனியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலுகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநெறி தழைத்துஓங்க
மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப்
புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலி
திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு
திருத்தொண்டு பரவுவாம்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவோனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## வாழ்த்து

வான் முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

# சிவபுராணம்



## திருச்சிற்றம்பலம்

**தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி**
**அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவா சகமென்னுந் தேன்**

நமச்சிவாய வாழ்க நாதன் றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா றுண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க

ஈசனடிபோற்றி எந்தையடிபோற்றி
தேசனடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்ப றுக்கு மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்ச் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தன்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## கந்த சஷ்டி கவசம்



சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்களன் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரரரரர
ரிஹண பவச ரிரிரிரிரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந் தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுங் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுடிகு டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வா!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினைஅருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க

எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுளநேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்கநோக்கநொடியில் நோக்கத்
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகைஅகல
வல்லபூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுத் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைந்தவஞ்சனைதனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட

வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலைவெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் புரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கு மொருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணைபருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரஹணபவனே சைலொளி பவனே
திரிபுரபவனே திரழ் ஒழிபவனே
பரிபுரபவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாகவேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன்கடன்
பெற்றவன் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுஉன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி

நேச முடன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத் தாட்கொள எந்தனுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## திருப் பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூப நல்தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டி சைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற் திருச்சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடு வகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்(து) உடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எம்கோன் எம்கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மை ஆளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே.

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி எடுமின்
அந்தரர்கோன் அயன் தன்பெருமான்
ஆழியான்நாதன் நல்வேலன் தாதை
எந்தரம்ஆள் உமையாள் கொழுநற்(கு)
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

காச ணிமின்கள் உலக்கை எல்லாம்
காம்ப ணிமின்கள் கறை உரலை
நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

அறுகெ டுப்பார் அயனும் அரியும்
அன்றி மற்று இந்திரனோ டமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
நம்மிற் பின்ப ல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி
முறுவற் செவ்வாயினீர் முக்கண் அப்பற்
காடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

உலக்கை பல ஓச்சுவார் பெரியார்
உலகமெலாம் உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும்நாமே.

சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாம் எழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நம்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

வாள் தடங்கண் மட மங்கை நல்லீர்
வரிவளை ஆரப்பவண் கொங்கை பொங்கத்
தோள் திருமுண்டம் துதைந்தி லங்கச்
சோத்தெம்பிரான் என்று சொல்லிச்சொல்லி
நாள்கொண்ட நாண்மலர்ப் பாதம் காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

வையகம் எல்லாம் உரல தாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய் யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டினம் ஆட ஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆட ஆடச்
செங்கயற் கண்பனி ஆட ஆடப்
பித்தெம் பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொ டாட ஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

மாடு நகைவாள் நிவாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்ட வாறும்
பணிகொண்ட வண்ணம் பாடிப் பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை ஐயர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொ டித்தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்க ருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்ம கட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்ற கப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராவிரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்க ழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயி னானைச்
சித்தம் புகுந்துதித் திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே.

தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்ச டைமேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உரும்பரும் இரும்பரும் உய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே.

அயன்தலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்கண் எயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே.

வட்ட மலர்க்கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லை பாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே.

வேதமும் வேள்வியும் ஆயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயி னார்க்குச்
சோதியு மாயிருள் ஆயி னார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயி னார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயி னார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயி னாருக்
காதியும் அந்தமும் ஆயி னாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே.

## வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு
### அமரர் சிவனேஸ்வரி ஸ்ரீ விக்கினேஸ்வரன்

வல்லிபுரம் நடராஜா (P.W.D. Overseer) - சிவபாக்கியம் நடராஜா தம்பதிகளின் மூன்றாவது பிள்ளையாக 01.11.1941இல் தென்னிலங்கையில், நீர்கொழும்புக்கு அண்மையில் உள்ள திவுலப்பிட்டிய என்ற ஊரில் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் மீன ராசியில் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை நீர்கொழும்பு புனித மரியாள் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை நீர்கொழும்பு ஆவே மரியா கொன்வென்ட் பாடசாலையிலும் தொடர்ந்தார். கல்லூரியில் மனையியலை (இல்லப் பொருளியல் Home Science) சிறப்புப்பாடமாக விரும்பிக் கற்றார்.

திருமணம் ஆகும்வரை நீர்கொழும்பு நகரத்தில் தாய் தந்தையருடனும் ஐந்து சகோதரர்களுடனும் வாழ்ந்திருந்தார்.

4.11.1966 ஆம் ஆண்டு முதல் ஆனைக்கோட்டை, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள ஈஸ்வர இல்லத்தில் வாழ்ந்துவந்தார்.

28.11.1966இல் கொக்குவில் மேற்கு, முத்துத்தம்பி-கண்மணி தம்பதியினரின் மூத்த மகனும், கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி மின்னியல் விரிவுரையாளருமான ஸ்ரீ விக்கினேஸ்வரனை திருமணம் செய்தார்.

11.02.1969 அன்று நகுலேஸ்வரன் என்ற மூத்த மகனைப் பிரசவித்தார்.

19.08.1971 அன்று கேதீஸ்வரன் என்ற இளைய மகனைப் பிரசவித்தார்.

சிறந்தொரு குடும்பத் தலைவியாக இருந்து குடும்பத்தைச் சிறந்த முறையில் வழிநடத்திச் சென்றார்.

தனது கணவர் அவரது பணியைச் சிறப்பாக மேற்கொள்வதற்காக குடும்பப் பொறுப்பினைத் தனது முழுநேரப் பணியாக ஏற்றுக் கொண்டு குடும்பத்தைச் சிறப்பாக நிர்வகித்து வந்தார்.

தனது இரு புத்திரர்களையும் வைத்தியத்துறையில் ஈடுபடவைத்து மகிழ்ந்தார்.

19.01.2000 அன்று தனது மூத்த மகன் நகுலேஸ்வரனுக்கு திரு.திருமதி. இராஜராஜேஸ்வரன் தம்பதியினரின் மகள் பிருந்தாவை மணம்முடித்து வைத்து மகிழ்ந்தார்.

03.09.2000 அன்று தனது இளைய மகன் கேதீஸ்வரனுக்கு வைத்திய கலாநிதி சின்னையா சிவசுப்பிரமணியம்-ஜெகசோதி தம்பதியினரின் மகள் பவானியை மணம்முடித்து வைத்து மகிழ்ந்தார்.

14.11.2000 அன்று தனது முதலாவது பேரனான அபிஷேக்கை நகுலேஸ்வரன்-பிருந்தா தம்பதியரின் மூலம் கண்டு மகிழ்ந்தார்.

01.02.2004 அன்று தனது முதலாவது பேர்த்தியான வைஷ்ணவியை கேதீஸ்வரன்-பவானி தம்பதியரின் மூலம் கண்டு களித்தார்.

03.04.2007 அன்று அவரது இரண்டாவது பேர்த்தியான அப்சராவை நகுலேஸ்வரன்-பிருந்தா தம்பதியரின் மூலம் கண்டு மகிழ்ந்தார்.

17.02.2010 அன்று அவரது இரண்டாவது பேரனான சர்வேஸ், கேதீஸ்வரன்-பவானி தம்பதியரின் மூலம் அவரைக் களிப்புற வைத்தான்.

22.4.2016 இல் தனது அன்புக் கணவரை இழந்தார்.

22.11.2018 பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

30.11.2018 அன்று அதிகாலை 04:45 மணியளவில் தனது 77ஆவது வயதில் (கார்த்திகை மாத கிருஷ்ணபட்ச அட்டமி திதியில்) இறைவனடி சேர்ந்தார்.



## ஜென்மம் நிறைந்தவர் வாழ்க

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போலொரு பழையதும் இல்லை
இரண்டுமில்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே
தேசம் அளாவிய கால்களும் எங்கே
தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்றும் இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போலொரு மாமருந்தில்லை

கடல்தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரைதொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதிமழை போன்றதே விதியென்று கண்டும்
மதிகொண்ட மானுடர் மயங்குவதென்ன

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திடில் செடிவந்து சேரும்

பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதியென்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்.

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக்கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க

**கவிஞர் வைரமுத்து**

## ஈஸ்வரன் தாள் சேர்ந்தார் ஈஸ்வரி

ஆனைக்கோட்டையை பூர்வீகமாகக் கொண்டுவாழ்ந்துவந்த சிவனேஸ்வரி விக்கினேஸ்வரன் அவர்கள் கடந்த 30.11.2018 அன்று ''வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்'' என்பதனை வலியுறுத்துவது போல, மண்ணுலகு நீத்து விண்ணுலகு புக்கார் என்ற துயரச் செய்தி கேட்டு வருந்தாதவர் எவரும் இல்லை எனலாம்.

அமரர் அவர்களின் குடும்ப பரம்பரை சைவத்தில் ஊறித் திளைத்து, சமய அனுஷ்டானங்களை கைக்கொண்டு வருகின்ற இறைபக்தி மிகுந்த குடும்பம் என்றால் அது மிகையாகாது. அதற்கேற்றவாறே அவருக்கு கணவனும் வாய்த்தார். இறைபக்தி உள்ள குடும்பம் ஆனபடியால் இறைவனும் அமரர் அவர்களின் முற்பிறப்பு தொடர்பாகவோ, என்னவோ இந்த சிவனேஸ்வரிக்கு 'ஈஸ்வரன்' என்ற நாமம் இறுதியில் அமையும்படியான கணவனைக் கொடுத்திருந்தார். இவர்களின் இனிய இல்லற வாழ்வில் தோன்றிய இரு முத்துக்களான நகுலேஸ்வரன், கேதீஸ்வரன் ஆகிய இருவருக்கும் இறைவன் திருநாமத்தினையே சூட்டி மகிழ்ந்தார். பிள்ளைகளும் பெற்றோருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் வைத்திய நிபுணர்களாகி பெற்றோரின் விருப்பத்திற்கமைய இல்லற வாழ்வினை மேற்கொண்டனர். பெற்றோரும் பேரப்பிள்ளை களைக் கண்டு களித்து வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் மகிழ்வைக் கண்டு பொறுக்காத காலனவனும் கடந்த 2016ஆம் ஆண்டு இந்த ஈஸ்வரியிடமிருந்து கணவனாகிய (விக்கினே) ஈஸ்வரனைக் கவர, அமரர் அவர்களின் உள்ளம் தளர்ந்தது. அதனால் உடலும் தளர்ந்தார். எனினும் அவர்தம் இரண்டு பிள்ளைகளும் அமரர் அவர்களை தமது இரண்டு கண்களாக, எதுவித குறையும் இல்லாது பாதுகாத்ததுடன் பணிவிடையும் செய்து வந்தனர். ஆயினும் அமரர் இறைமீது நாட்டம் கொண்டு கணவன் சென்ற வழியில் தாமும் சென்று கணவனுடன் நீங்காது வாழ வேண்டும் என்று வாழ்ந்து வந்தார். அவரின் தீராத பக்திக்குக் கட்டுப்பட்டோ என்னவோ இறைவன் கணவன் மறைந்த இரண்டரை ஆண்டுக்குள் கணவன் ஈஸ்வரனிடம் இந்த ஈஸ்வரியைச் சேர்த்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

அமரர் அவர்கள் தாம் வாழும் காலத்தில் தமது குலதெய்வமான கரைப்பிரான் பிள்ளையார் மீது பேரன்பு பூண்டு தனது தாயார் காட்டிய வழியில் பெருமானுக்கு அபிஷேகங்கள், உற்சவங்கள் யாவற்றையும் பக்தி சிரத்தையுடன் தவறாது மேற்கொண்டு வாழ்ந்தவர். இவரின் இழப்பு ஆலயத்திற்கு மட்டுமல்ல கிராமத்து மக்கள் அனைவருக்கும் ஈடுசெய்யமுடியாத ஒன்று என்பதில் ஐயமில்லை.

அன்னாரைப் பிரிந்து வாடும் அவரது பிள்ளைகள், குடும்பத் தினருக்கும் மற்றும் குடும்ப உறவுகள் உற்றார் உறவினர் அவர்மீது பாசம் கொண்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் பிரிவு தரும் வேதனையை காலம்தான் மாற்ற வேண்டும், ஆற்றவேண்டும். இதைக் கூறுவது எளிது அதன் வலியின் தாக்கத்தை சம்பந்தப்பட்டவர்கள் தான் உணர்வார்கள், அறிவார்கள். எனினும் அமரரின் ஆன்மா அவர் விரும்பியவாறே, கணவன் ஈஸ்வரனிடம், இந்த ஈஸ்வரியின் ஆன்மா சேர்ந்துவிட்டதை எண்ணி நாம் ஆறுவோமாக, தேறுவோமாக.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**சோம.சிவகுமாரக் குருக்கள்**
ஆனைக்கோட்டை



## தங்கையாய் தாயுமானவள் .....

எனது தங்கை அமரர் திருமதி சிவனேஸ்வரி ஸ்ரீவிக்னேஸ்வரன் எல்லோராலும் பெரியபேபி என அன்பாக அழைக்கப்பட்டவள். 01.11.1941 இல் பிறந்த எனது தங்கை 28.11.1966 இல் அவளது திருமணம்வரை நீர்கொழும்பில் வாழ்ந்தவள்.

அந்தக் காலத்தில் எங்கள் நீர்கொழும்பு வீடு ஒரு பல்கலைக் கழகமாகவே இருக்கும். எங்களின் ஒரு சகோதரி மிகச்சிறிய வயதில் இறைவனடி சேர்ந்துவிட்டார். நாங்கள் நான்கு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளுமாக அறுவரானோம். நான் குடும்பத்தில் மூத்த மகன். எனது அத்தனை சகோதரர்களுக்கும் பாசமான, கண்டிப்பான அண்ணன். இன்றுவரை அண்ணா என்ற வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாதவர்கள்; என் சகோதரர்கள்.

பெரியபேபிக்கு என்னில் அளவுகடந்த பிரியம். மருத்துவ பீடத்தில் நான் படித்துக்கொண்டிருந்த காலங்களில் விடுமுறைக்கு வீடு செல்லும் போது எனக்கு விருப்பமான உருளைக்கிழங்கு பொரியல் கண்டிப்பாக இருக்கும். இப்போதும் எனது தம்பிமார் அண்ணா கிழங்கு பொரியல் சாப்பிட்டுத்தான் உங்களுக்கு சலரோகம் வந்திருக் கிறது என்பார்கள்.

அவளது 10 - 12 வயதிலேயே அம்மாவுடன் சேர்ந்து குடும்ப பொறுப்புகளை ஏற்று நடத்தியதை நான் பார்த்திருக்கிறேன். எனக்கும் எனது தம்பி தங்கையருக்கும் அவள் இன்னொரு தாயாகியவள்.

எங்கள் நீர்கொழும்பு வீடு எங்களால் மட்டுமன்றி எங்கள் அம்மா, அப்பாவின் சகோதரர்கள், அவர்களது பிள்ளைகள், இனத்தவர்கள், நண்பர்கள், அப்பாவின் பணியாளர்கள் என பலரால் நிறைந்திருக்கும். அத்தனை பேரையும் பெரியபேபி அன்பாகக் கவனித்தவள். பாட சாலையில் சமையல்கலையை ஒரு பாடமாக கற்றதன் காரணமாக அவளிற்கு பலவிதமான சமையல், வீட்டு நிர்வாகம் என்பன இலகுவாக இருந்தது. சிறு வயதில் இருந்தே குடும்ப கணக்குகள் எழுதுவது அவளின் பழக்கம், இது அவள் இறப்புவரை தொடர்ந்தது.

சிறுவயதிலிருந்து பெரிய குடும்பத்தை பராமரிக்கின்ற திறனை வளர்த்துக் கொண்டதாலோ என்னவோ அவள் திருமணமாகி ஆனைக் கோட்டை வீட்டிற்கு வந்தபோது தனியாக தனது குடும்பத்தையும்

தனது கணவரின் குடும்பத்தையும் மனம் கோணாது பராமரிக்க முடிந்தது.

வீடு நிறைந்த உறவுகளுடன் நீர்கொழும்பில் இருந்தவள் 1966 திருமணத்தின் பின்னர் ஆனைக்கோட்டை பெரிய வீட்டில் தனி ஒருத்தியாக வாழத் தன்னை தயார்படுத்தினாள். எனது மைத்துனர் தொழில்நுட்பக்கல்லூரி உபஅதிபராக பணியாற்றியவர். பொறுப்பான பதவி, காலை கடமைக்குச் சென்றால் மாலைதான் திரும்புவார். அவ்வளவு நேரமும் தனித்து தனது வீட்டைப் பூட்டிக்கொண்டு வீட்டுக் கடமைகளை முடித்து, பிள்ளைகளைப் பராமரித்து திறமைமிக்க ஒரு குடும்பத் தலைவியாக இருந்தவள். அவளது ஆரம்பகால பழக்கத்தி னாலோ என்னவோ இறுதிவரை அவளதுவீடு பூட்டியபடியே இருந்தது.

எனது தங்கையின் இரண்டு ஆண் குழந்தைகளும் இன்று நல்ல நிலையில் இருப்பதற்குப் பின்னால் அவளின் தன்னலமற்ற தியாகம், அன்பு, அர்ப்பணிப்புடனான குடும்ப வழிநடத்தல் போன்றவையே காரணங்களாகின்றன.

போர்காலச்சூழலில் வயதுவந்த இரண்டு ஆண்பிள்ளைகளை வைத்திருப்பது எவ்வவளவு கடினமானது என்பதை நாங்கள் அனை வரும் அறிவோம். அந்த இக்கட்டான நேரங்களிலும் தனது பிள்ளை களை கண்ணாகக் காத்து, வளர்த்து, கல்வி கொடுத்து திறமை வாய்ந்த வைத்திய நிபுணர்களாக்கியது எனது தங்கை தனது கணவருடன் சேர்ந்து செய்த அளப்பரிய பணி என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

எனது மைத்துனரின் பார்வைக் குறைபாட்டால் அவரின் இயக்கங்கள் மட்டுப்படுத்தப்பட்டது. அப்போதெல்லாம் பெரியபேபி தாயாக, தந்தையாக, சகோதரியாக, தோழியாக தனது கணவரையும் பிள்ளைகளையும் உறவினர்களையும் காத்துக்கொண்டார். மைத்துனர் காலமானபின்பும் மனம்தளராது தன்நம்பிக்கையுடன் அவரது வீட்டில் தனது இறுதிக்காலம்வரை சிறப்பாக வாழ்ந்தவள்.

கிழமைக்கொருதரம் முச்சக்கரவண்டியில் என்னையும் எனது இளைய சகோதரியையும் பார்க்க வருவாள். தினமும் மாலை 6 - 7 மணிக்கு தொலைபேசி மணி அடித்தால் பெரியபேபி என்று நிச்சயமாகத் தெரியும். நான் இயல்பாகவே நிறைய கதைக்க மாட்டேன் என்று அவளுக்குத் தெரியும். சில நிமிடங்கள் கதைத்தபின்னர் மலைஅரசியுடன்

கதைப்பாள். அந்தக்கதையிலும் முக்கிய கதாபாத்திரம் நான்தான். சாப்பாட்டில் இருந்து படுக்கைவரை சகல கதைகளும் கதைக்கப்படும்.

நாங்கள் ஆனைக்கோட்டை வீட்டுக்கு அவளிடம் போனால் அது எந்தநேரமாக இருந்தாலும் சாப்பிட்டுத்தான் திரும்பலாம். திரும்ப விடைபெறும்போது எங்கள் இருவரையும் முத்தமிட்டு கேற்வரைவந்து காரில் ஏறிப்போகும்வரை நின்று வழிஅனுப்புவாள். அந்தப்பொழுது களில் என் அம்மாவை அவளில் காண்பேன்.

தனது சுகயீனங்களை பாராது எனது நோய்நிலைமைகளில் கவன மெடுத்து தனது இளைய மகன் கேதீஸ்வரனிடமும் அடிக்கடி சொல்லி அவனையும் என்னை பராமரிக்கச் செய்வாள்.

77 வருடங்கள் நிறைவான வாழ்வை வாழ்ந்த பெரியபேபி தனது குடும்பத்தை மட்டுமல்லாது உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரதும் நன்மை தீமைகள் என ஓடிக் களைத்து, மகிழ்ந்து, மகிழ்வித்து தனது நேரத்தையும், சக்தியையும் உள்ளன்போடு அர்ப்பணித்ததை எவராலும் மறக்கமுடியாது. அவள் என்றும் எங்களுடன் தோன்றாத் துணையாக இருப்பாள்.

எனது தங்கை ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையாரில் அளவுகடந்த பக்தி கொண்டவள். அவளது ஆன்மா பிள்ளையாரின் பாதங்களில் நிச்சயம் அமைதி பெறும்.

அண்ணா
**வைத்திய கலாநிதி நடராஜா சிவராஜா**
சமுதாய மருத்துவ நிபுணர்



## என்றும் பிரியமுடன் பெரியபேபி...

என் ஒற்றை சகோதரிக்கு, என் பிரியமான தோழிக்கு, இறுதியாக இதை எழுதும் வேளையில் ஆயிரம் நினைவுகள் மனதில் தோன்றி மறைகின்றன.

ஏழு தசாப்த வாழ்க்கையை வெறும் நான்கு வரிகளுக்குள் அடக்கிவிட முடியாதுதான். ஆனாலும் நாங்கள் வாழ்ந்த வாழ்க்கை... சிந்திய சிரிப்புகள்.. அழுகைகள்.... சிறு கோபங்கள்... சிறு சண்டைகள் என்று ஏராளம் நினைவுகள் இன்று நெஞ்சில் எழுந்து அடங்குகின்றன.

அம்மாவின் கடுமையான இராணுவக் கண்காணிப்பிற்குள்ளும் 'கடத்தப்பட்டு' வீட்டிற்குள் கொண்டுவரப்படும் குமுதம், ஆனந்தவிகடன் புத்தகங்களை நாமிருவரும் பகிர்ந்து வாசித்த காலங்கள் இன்றும் இளமையாகவே இனிக்கின்றன.

கொழும்பில் இருக்கும் குமாரசிங்கம் மாமாவிற்கு, அம்மாவிற்குத் தெரியாமல் இரகசியமாக நீர்கொழும்பின் திரையரங்குகளில் அவ்வார இறுதியில் ஓடும் திரைப்படம் பற்றிய செய்திகளுடன் அனுப்பும் கடிதங்கள், அதனைக் கண்டதும் அந்த வார இறுதியில் கொழும்பில் இருந்து மூன்று டிக்கட்டுகளுடன் அம்மாவின் கேள்விக்கணைகளுக்கு எதுவுமே தெரியாததுபோன்ற பாசாங்குடன் வெள்ளையாய்ச் சிரித்தபடி வந்து சேரப்போகும் மாமாவிற்கான காத்திருப்புகள் என்று வாழ்ந்த அந்த வாழ்க்கை அருமையானது தான்.

திருமணம், அதன் பின் குடும்பம் என்று ஆரம்பத்தில் சற்று தொலைவில் வாழ நேர்ந்தாலும், பிள்ளைகளின் பாடசாலை விடுமுறை களில் யாழ்ப்பாணம் வரும்போது விட்ட இடத்திலிருந்து தொடரும் எங்கள் நட்பு அபாரமானது.

ஐயா எம்மைப் பிரிந்து அமரத்துவம் அடைந்தபோதும், அதன்பின் பல வருடங்கள் கழித்து அம்மா எம்மை விட்டுப் பிரிந்தபோதும் ஆறுதலாகக் கதைக்க, பழைய நினைவுகளை மீட்க நீங்கள் அருகில் இருந்தமையானது அந்தக் கவலைகளுக்குள்ளும் ஒரு சிறு ஆறுதலாகவே இருந்தது.


இறுதியாக 2016இல் பெரிய அத்தான் எம்மை விட்டுச் சென்ற போது உங்களிடம் இருந்த பக்குவமும் திடமும் என்னிடம் ஏனோ இருக்கவில்லை.

அதன் பின்னரான நாட்களில் எமது நீண்ட தொலைபேசி உரை யாடல்கள் பல பழைய நினைவுகளை வருடிப்போகும். இடையிடையே எமது சந்திப்புகளில் எங்கள் கவலைகளை, சந்தோஷங்களை, எம்மிடையே பகிர்ந்துகொள்ளவும் அதனால் ஆறுதலடையவும் முடிந்தது.

எத்தனையோ பேருக்கு நல்ல சகோதரிகள் கிடைத்திருக்கலாம். ஆனால் அந்த சகோதரியே நல்ல நண்பியாய் இருந்ததில் நான் இரட்டிப்பு அதிர்ஷ்டசாலியே. என் கவலைகளை பகிர்ந்துகொள்ள அருகில் இருந்ததொரு நல்ல இதயம் இன்று நிரந்தரமாய் நின்றுபோனது.

இனி ஒரு பிறப்பு எனக்கு வேண்டாம் என்ற போதும் அப்படி ஒன்று இருந்தால் எங்கள் அம்மாவிற்கு மகளாகவும், உங்களுக்கு சகோதரியாகவும் மீண்டும் ஒருமுறை பிறந்து வாழ்க்கையை வாழ்ந்து முடிக்கவே மனம் தவிக்கிறது.

என்றும் அன்புடன்
**சின்னபேபி**



# தாயினும் சிறந்ததொரு தெய்வமில்லை

தாயிலும் சிறந்ததோர் தெய்வமில்லை. இன்று நான் எனது அன்பு தெய்வத்தை இழந்து தவிக்கின்றேன். என்னைப் பத்து மாதங்கள் கருவறையில் காத்து, ஈன்றது முதல் எனது வாழ்க்கையின் முன்னேற்றப் பாதையின் ஒவ்வொரு படிக்கட்டினையும் பக்குவமாகச் செதுக்கியவர் என் அன்னை.

அவரது கடைசி மூச்சுவரை, எனது வாழ்வின் முக்கியமான ஒவ்வொரு முடிவினையும் அவரைக் கலந்தாலோசிக்காது நான் எடுத்த தில்லை. எனக்கும் அவருக்கும் சில குணாதிசயங்கள் ஒன்றாக இருப்ப தால், நாங்கள் இடைக்கிடையே கருத்து வேறுபாடுகளால் சண்டை போட்டுக்கொள்ளவும் தவறுவதில்லை. ஆனால் அந்த சிறு சலசலப்புக் கள் எப்போதுமே எமது அன்புப் பிணைப்பை மேலும் உறுதிப்படுதினவே யன்றி ஒருபோதும் அதனைத் தளர்த்தவில்லை.

யாழ். மருத்துவ பீடத்தில் எனது பட்டப்படிப்பு முடியும்வரை, அதாவது எனது முப்பது வயதுவரை, நான் எனது அம்மா - அப்பா வோடுதான் பெரும்பாலும் வாழ்ந்துவந்தேன். எனது திருமணத்தின் பின்னரும்கூட சிலகாலம் அவர்களுடனேயே வாழ்ந்திருந்தேன். பின்பு 2000ஆம் ஆண்டில் எனது தம்பி கொழும்பு மருத்துவ பீடத்திற்கு அனுமதிக்கப்பட்ட பின்னர், அவர்கள் தம்பியுடன் தங்க கொழும்புக்குச் சென்றுவிட்டனர்.

பின்பு 2001 தொடக்கம் நான் நுவர எலியாவில் மருத்துவராகப் பணியாற்றிய வேளையில், அவ்வப்போது அவர்கள் அங்கு வந்து என்னுடன் தங்கி தங்கள் மூத்த பேரனுடன் அகமகிழ்ந்திருந்தனர். 2004ம் ஆண்டு மார்கழியில் நான் இங்கிலாந்து புறப்பட்டபோது, மனதுக்குள் பிரிவுத் துயரில் மூழ்கியிருந்தாலும், என்னை வாழ்த்தி அனுப்பிவைத்து, எனது நல்வாழ்வுக்காக உளமாரப் பிரார்த்தித்தனர்.

எனது கஷ்டமான நேரங்களில் அன்பு மொழியால் என்னை ஆசுவாசப்படுத்தி, அரவணைத்து உறுதுணையாக நின்றவர் எனது அம்மா. அம்மாவும் அப்பாவும் இங்கிலாந்துக்கு இரு தடவை வருகை தந்திருந்தனர். அப்போது எனது குடும்பத்துடன் சேர்ந்து மகிழ்ச்சியுடன் விடுமுறை நாட்களைக் கழித்தார்கள்.

எனது அன்னையார் தனது பிள்ளைகளுக்கும் கணவருக்கும் மட்டுமல்லாது, அவரது சகோதரர்கள், அப்பாவின் சகோதரர்கள், நெருங்கிய உறவுகள், தூரத்து உறவுகள், நண்பர்கள் எனப் பாரபட்சம் பாராது அன்பு செலுத்தி, பெறுமதிமிக்க அறிவுரைகளையும் சதுர உதவிகளையும் தேவைப்படும்போதெல்லாம் சலிக்காது அள்ளி வழங்கி எல்லோராலும் ஒரு அன்னையாகவே மதிக்கப்பட்டவர்.

அவர் தனது அன்புக்குரிய அன்னையின் இறுதிக் காலத்திலும், நோய்வாய்ப்பட்ட தன் மாமனாரின் கடைசி மூன்று வருடங்களிலும் அவர்களைப் பராமரித்து அவர்களது மரணம்வரை அவர்களுக்கு ஆதரவளித்து தனது கடமைகளைச் செய்து முடித்தவர். அவரது கணவரை (எமது அப்பா) அவர் நோய்வாய்ப்பட்டிருந்த சுமார் எட்டு வருட காலங்களும் அயராது பராமரித்து அவரது இறுதிமூச்சு அடங்கும் வரை யாருடைய உதவியுமின்றி கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தவர். அப்பா இல்லாத, அவரின் கடைசி இரண்டரை வருடங்களும் தனது மனதுக்குள் பதுக்கிவைத்திருந்த பிரிவுத்துயருடனேயே கழிந்தன என்பதை நாம் அறிவோம். எனது அப்பாவும் அம்மாவும் மிகவும் அந்நியோன்னியமானவர்கள். ஒருவருக்கு மற்றொருவர் ஆதரவாகவே அவர்களின் திருமண வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் இணைந் திருந்தனர். அதனால் இறுதிக்காலத்தில் அப்பாவின் இழப்பு அம்மாவுக்கு ஈடுசெய்யமுடியாததொன்றாயிருந்தது.

நானும் எனது தம்பி மற்றும் உறவினர்களும் பல தடவை அவரிடம் தனியாக ஆனைக்கோட்டையில் இருப்பதைத் தவிர்க்குமாறு வேண்டு கோள் விடுத்தோம். அவரை என்னுடன் லண்டனில் அல்லது தம்பியுடன் யாழ்ப்பாண நகரத்தில் தங்குமாறு ஆலோசனை தெரிவித்திருந்தோம். அவர் வைராக்கியமாக அதனை மறுத்துவிட்டார். தான் வாழ்ந்த வீட்டை விட்டு வெளியேறுவதன் மூலம் தான் பொக்கிஷமாகப் பேணிய தன் மலரும் நினைவுகளையும், தனதும் அப்பாவினதும் குடும்பத்தினதும் மூச்சுக்காற்றால் நிறைந்திருந்த தனது வீட்டையும் துறக்க அவரால் முடியவில்லை. அவர் தனது ஆனைக்கோட்டை வீட்டிலேயே கடைசி வரை வாழ்ந்து இறுதி மூச்சை விடும் வைராக்கியத்துடனேயே இருந்தார். பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டு அவரது இறுதி ஒருவருட காலத்தில் தவித்தபோதும் தனது முடிவை மாற்றவேயில்லை.

அவர் ஒருபோதும் மற்றவர் தயவில் வாழ விரும்பவில்லை. அவரின் கடைசி வேண்டுதலும் அதுவாகவே இருந்தது. நான் கடைசியாக 2018ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இலங்கை வந்திருந்தபோது அவருடன் இரு வாரங்கள் தங்கியிருந்தேன். அவர் பழைய கதைகள் பலவற்றையும் நினைவூட்டி மகிழ்ச்சியாகப் பொழுது போக்கினார். தனது 77ஆவது பிறந்ததினத்தை என்னுடன் கொண்டாட (பத்து வருடங்களின் பின்னர்) ஆசைப்பட்டார். அவ்வேளையில் அதுதான் அவருடைய கடைசிப் பிறந்ததினக் கொண்டாட்டமாக அமையும் என்று நான் கனவிலும் எண்ணவில்லை.

அப்போது அதிசயிக்கத்தக்க வகையில் அவரது உடல்நிலையும் முன்னேறியிருந்ததை அவதானிக்கமுடிந்தது. அவரின் தன்னம்பிக்கையும் அதிகரித்திருந்ததை அவதானிக்கமுடிந்தது. ஆனால் அது அணைவதற்கு முன்னதாகப் பிரகாசிக்கும் விளக்கின் பிரகாச ஒளி என்பதை என்னால் உணரமுடியவில்லை.

எம் அன்னையை பாரிசவாதம் ஆட்கொண்ட தினத்திற்கு முதல் நாளிரவு கார்த்திகை 21ஆம் நாள் (இலங்கை நேரப்படி இரவு 11:30) அம்மா எனது தொலைபேசிக்கு Face Time மூலமாக ஒரு அழைப்பை மேற்கொண்டார். அவ்வழைப்பிற்கு முன்னதாக அவரது வாழ்வின் இறுதிக்கட்டத்தை முன்கூட்டியே உணர்ந்துகொண்டாரோ என இன்று எண்ணத் தோன்றுகின்றது.

அன்றைய இரவு எம்முடன் தொடர்புகொண்டதும் அவர் மிகவும் மகிழ்ந்து ''நல்லவேளை இணைப்பு கிடைத்துவிட்டது'' என்று கூறி எனது குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரையும் விசாரித்து, அவர்களுடன் நீண்டநேரம் உரையாடினார். பிள்ளைகளிடம் அவர்களின் படிப்பு விடயங்களைக் கேட்டறிந்தார். அவர் விடாமல் நீண்டநேரம் கதைத்த படியால் கடைசியில் எனது வேண்டுகோளுக்கு இணங்க தொலைபேசி இணைப்பைத் துண்டித்துவிட்டுப் படுக்கைக்குச் சென்றார். அது தான் எனது ஆருயிர் அன்னையுடனான இறுதி உரையாடல் என்பதை நான் அப்போது அறிந்திருக்கவில்லை.

அவரின் இழப்பு எனக்கும், எனது தம்பிக்கும் மற்றும் அம்மாவின் அனைத்து உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். எனது அன்னை ஒரு மனவலிமை மிக்க, மிகவும்

புத்திசாதுரியம் மிக்க அன்பானதொரு குணவதி. தனது கடமைகளை அடி பிசகாது செய்து முடித்தவர். அதீத கடவுள் பக்தி மிக்கவர். பல வருடங்களுக்குப் பிறகு இம்முறை அவரது பிரியமான கந்த சஷ்டி விரதத்தை ஆச்சாரமாகக் கடைப்பிடித்தவர். அவனருளாலோ அவன்தாழ் வணங்கிய எனது அன்னைக்கு எந்தவிதமான நோவையும் கொடுக்காது தன்னுடனேயே விரைவில் சேர்த்துக் கொண்டார். நாம்தான் இங்கு அன்பு அன்னையை இழந்து தவிக்கின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைவதற்குப் பிரார்த்திப்போம்.

**Dr. ஸ்ரீ நகுலேஸ்வரன் (பாபு)**



# அன்னை ஓர் ஆலயம்

உலகின் மிக உன்னதமான உறவு தாய், பிள்ளை உறவுதான் என்பார்கள். தாய் தன்பிள்ளைமீது காட்டும் அன்பும் அக்கறையும்போல வேறொருவரும் காட்டுவதில்லை. தாய்மார்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாய் விளங்கியவர் எனது அம்மா.

அவர் ஒரு சிறந்த தாயாக மட்டுமில்லாது தனது பெற்றோருக்குச் சிறந்த மகளாகவும், எம் தந்தைக்கொரு சிறந்த மனைவியாகவும், எமது குடும்பத்தை இக்கட்டான காலகட்டத்தில் துணிச்சலுடனும், உறுதியுடனும் வழிநடத்திய சிறந்ததொரு குடும்பத் தலைவியாகவும், எமது உறவினர்களுக்குச் சிறந்த அக்காவாகவும், சிறந்த தங்கையாகவும், வாழ்நாள் முழுவதும் பிரகாசித்தவர்.

அவர் தன் வாழ்க்கையில் எப்பொழுதும் சிக்கனத்தைக் கடைப் பிடித்துவந்தார். எமக்கும் சிறுவயதுமுதல் அதனைப் புகட்டிவந்தார். அவர் தனக்கென்று எதையும் விரும்பி வாங்கியதை நான் அறியவில்லை. சிறுவயது முதல் எனது கல்விக்கு உறுதுணையாக இருந்துவந்தார். கல்வியே எமது வாழ்வை உயர்த்தும் ஏணி என்பதை எமக்கு அடிக்கடி வலியுறுத்தி வந்தார்.

எனது மனதில் இன்றும் நினைவில் நீங்காது நிற்கும் ஒரு சம்பவத்தை இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்வது பொருத்தமாகும். அப்பொழுது நான் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தேன். அக்காலகட்டத்தில் வட பிரதேசத்தில் மின்சாரம் இல்லை. மண்ணெண்ணையும் இல்லை. இரவில், தேங்காய் எண்ணெய் விளக்கின் ஒளியில் தான் படிக்கவேண்டிய நிலையில் நான் இருந்தேன். நீண்டநேரமாக கைவிளக்கு வெளிச்சத்தில் படித்ததால் என் கண்கள் இரண்டும் காலப்போக்கில் சிவந்து நோகத் தொடங்கிவிட்டன. அப்போது எனது அம்மா என்னை ஆசுவாசப்படுத்தி, கண்களில் சுடு தண்ணீர் ஒத்தடம் கொடுத்து எனது நோவை ஆற்றிவந்தார். எனது கல்விக்குத் தடங்கல் எந்த உருவில் வந்தாலும் அதனை எதிர்கொள்ளும் நிலையிலேயே அவர் இருந்தார். அதனை என்றும் என்னால் மறக்கவே முடியாது.

சிறுவயதில் நான் நோய் வாய்ப்பட்டபோதெல்லாம் கண்ணுறங்காது என்னைப் பராமரித்துவந்தார். எனது அம்மா சமையலில் கெட்டிக்காரி. பலவிதமான உணவுவகைகளை, சிற்றுண்டிவகைகளை வாய்க்கு ருசியாகத் தயாரிப்பார்.

நான் கொழும்பு மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவாகி முதன் முறையாக பெற்றோரைப் பிரிந்து, தனியாகக் கொழும்புக்குச் செல்ல வேண்டி நேர்ந்தபோது, தனது கவலைகளை மறைத்து, என்னை உற் சாகப்படுத்தி வழியனுப்பி வைத்தார். நான் மருத்துவக் கல்லூரியில் படிக்கும்போது தனியாகக் கஷ்டப்படுவதை அறிந்து என்னுடன் தானும் கொழும்பில் வந்து நின்று எனக்கான சமையல் பொறுப்பை ஏற்றதுடன், இடைஞ்சல் இல்லாதவாறு எனது உயர் கல்விக்கு உறு துணையாக இருந்துவந்தார்.

எனது அன்னை மிகுந்த இறைபக்தி மிக்கவர். அவரது இஷ்ட தெய்வமான கரைப்பிரான் பிள்ளையாரை வணங்கிவந்தவர். தினமும் எமது கல்விக்காகவும், உடல் நலத்திற்காகவும் பிரார்த்திப்பார். வளரும் பருவத்தில் நாம் நோய்வாய்ப்பட்ட போதெல்லாம் எமக்காக அவ்வப் போது நேர்த்திக்கடன்களை வைத்து அவற்றைச் செவ்வனே நிறை வேற்றுவார்.

பின்னாளில் எனது தந்தையார் ஞாபக மறதி நோயினால் (Dementia) பாதிக்கப்பட்டு பலவருடகாலம் இயலாமல் இருந்தபோது எந்தவித சலிப்பும் இல்லாமல் அன்றாடம் அவரைப் பராமரித்துவந்தார். அது மட்டுமல்லாது எமது அம்மம்மா, அப்பப்பா ஆகியோரை அவர்களது முதுமைப் பராயத்தில் பராமரித்துத் தன் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றிவந்தார்.

எனது அம்மா இரக்க குணம் உடையவர் என்று பொதுவாக அறியப்பட்டவர். குறிப்பாக மிருகங்களில் மிகுந்த பற்றுக் கொண்டவர்.


அவர் எப்பொழுதும் இன்முகத்துடனேயே அனைவருடனும் அன்புடன் பழகுவார். சாதி, மத வேறுபாடின்றி அனைவருடனும் அன்புடன் பழகுவார். சகலரையும் தம்பி, ராசா, என்று அன்பொழுக அழைப்பார். ஊரவரும் உறவினரும் அவரை ‘‘பெரியக்கா’’, ‘‘பெரிய பேபி’’ என்றே எப்போதும் அன்புடன் அழைத்தனர். இளவயதில்

நீர்கொழும்பில் வளர்ந்ததால் அவருக்குச் சிங்களமொழியில் நல்ல பரிச்சயமுண்டு.

அம்மாவுக்குத் தையற்கலையிலும் அதிக ஈடுபாடு உண்டு. வீட்டுக்குத் தேவையான தையல் வேலைகளை அவரே செய்து முடிப்பார்.

அன்பும் பாசமும் மிக்க எங்கள் அம்மா இன்று எம்முடன் இல்லை என்பதை நினைக்கும்போது நெஞ்சு பதைபதைக்கின்றது. அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**வைத்திய கலாநிதி எஸ்.கேதீஸ்வரன்**



## My Appamma

My Appamma was a loving, considerate and very hard-working person who always looked to create the best environment for her family to live in. During my life, she has always been invested in my studies and pushed me to work hard in order to achieve my dreams, as she did with her own sons. I remember always, the last thing we talked about was whether I had received an invite for an interview at Oxford University. Although I was unable to tell her at the time as I had not received it yet, I did go on to get an interview. And from this, I know she was looking down on me and guiding me throughout my interview process. Furthermore, she will continue to look after me and help me make right decisions, as she has done throughout my whole life, since I was a child.

As well as caring for me and supporting me, she was always accommodating and worked hard in order to please others. During the Summers when my family and I would visit her in Sri Lanka, she would always put the maximum effort into making amazing meals that we all loved. Even when I was a picky



eater and did not want a specific food, she would still do everything in her power to make something especially for me, so that I could still have a lovely home-cooked meal. One thing I remember was that even when she was not as well, the last time we visited her in Sri Lanka, despite my efforts to tell her to rest, she made me an omelet and a cup of Nesta malt (knowing it was my favourite) so that I would not be hungry. Whilst living in Nuwara Eliya as a child she always had time to play with me and tell stories which kept me entertained for hours on end; a memory of better times that will always stick in my head.

With all of this, I will dearly miss my Appamma as she was someone who always provided me with support, love and wanted the best for me. But, I know that although she may not be here physically, she will always be watching over me spiritually and making sure that I can do as well as she knew I could. Rest in Peace Appamma.

Loving Grandson
**Abishek**

# My Grandmother

I've always loved my grandmother. I have always been the spitting image of her. I've always loved the masculine vibe that she gave off whenever she completed duties: whether it was taking care of my grandfather or catering food. She had this fiery yet feminine attitude that I have always liked. Also, she has always cared for me and my family whenever we came over to stay in Sri Lanka.

During one of the last times that I ever spoke to her in person, I remember her telling me a story: she said that once when she was around my age, her father asked her to bring some tea because it was one of her "womanly" duties and she declined. Afterwards, her mother and father became extremely angry and forced her to bring the tea for the guests. When she came over, with a thud, she purposefully dropped the tea all over the hard flooring and the tea cups shattered into small shards. To be honest, I found that story extremely shocking yet tremendously relatable.

She was an amazing woman; she put thought and care into everything that she performed and remembered all of the miniscule details. Without a doubt, she was an extremely intelligent and intuitive woman, who cared for my family so much.



Many people have always compared me to her as we have a similar appearance and because of our seditious nature. I remember her icy hand caressing my cheek when we talked for hours under the light of a million stars: each star representing a reason why I treasured her so much. They were like splats of silvery paint on a raven canvas.

Even though she was so depressed after the unfortunate passing of my grandfather, she still made sure to keep me happy during us staying over at her house during my puberty ceremony; she had always supported me during the tough times and comforted me when I felt crestfallen. I exceedingly adored spending time with her because she had empathy for me and understood my problems (because of our many similarities).

When I last saw her (on FaceTime), I played the magical piano song, 'Comptine d'un autre été' and, at the time, I was truly happy because she was happy. She sincerely liked the song as much as I do. The lyrics swam through my cerebral cortex like a wakeful dream, the notes relaxing me and my loving grandmother. Music could never be something superfluous to her, it is medicine delivered in the most divine way.

As time goes on, eventually everything must die; whether it is materialistic objects with no conscious or the living creatures that we treasure the most. I know that my grandmother will be watching over me with my grandfather and God beside her but I'd rather her be in peace "up there" than her stay on Earth and suffer; I know that this is how she would have wanted events to go.

The most important currency presently is not money nor power: it is time. We can never get back time that we spend (like we can earn money or achieve power). Time is an essence that we can never increase (no matter how hard we try) so if I were you, I would spend the rest of your day caring for those who you treasure the most instead of working late hours earning money that you can never have time to enjoy. We only have one life so we better make the most of it.

**By Apsara Naguleswaran**
Loving Granddaughter

## என் பிரியமான அப்பம்மா

என் அன்பான அப்பம்மா!

நீங்கள் எனக்குத் தந்த இனிய நினைவுகள் என் வாழ்வில் மிகவும் அற்புதமானவை. அப் பொன்னான நினைவுகளை ஒருபோதும் என்னால் மறக்க முடியாது. நீங்கள் எனக்கு ஒரு சிறந்த அப்பம்மாவாக மட்டுமல்லாது உற்ற தோழியாகவும் வாழ்ந்துள்ளீர்கள். சிறுவயதில் என்னுடன் சேர்ந்து சிறுவர் பாடல்களுக்கு நடனம் ஆடுவதும், குழந்தைப் பாடல்கள் பலவும் பாடி என்னை மகிழ்விப்பதும் மறக்க முடியாத நினைவுகளாக எனது இதயத்தில் பதிந்துள்ளன.

ஒவ்வொரு விஷேட நாட்களிலும் எமக்குப் பிடித்தமான பரிசுப் பொருட்களுடன் தவறாமல் வருகைதந்து, பாசத்துடன் கட்டி அணைத்து முத்தமிட்டு அவற்றை எம்மிடம் வழங்கும் அந்த இனிய நினைவுகளை மீட்டுப் பார்க்கின்றேன்.

இருப்பவன் தொலைப்பதும் இழந்தவன் தேடுவதுமான பாசத்தை விதிவிலக்காக அனைவருக்கும் வாரி வழங்கிய கொடை வள்ளல் நீங்கள். நெருங்கிய உறவினர்களுடன் மட்டுமல்லாது, அனை வருடனும் அன்பான மனதுடனும் அழகான புன்சிரிப்புடனும் நீங்கள் பழகிடு வீர்கள். அது மட்டுமல்லாது உயிர்கள் மீது பேரன்பு உடையவர் நீங்கள். வீட்டில் அழகான பூமரங்களை நட்டு உங்கள் தோட்டத்தை



அழகுபடுத்தி மகிழ்வதுடன் அவற்றுக்கு அன்றாடம் நீரூற்றிச் சிறப்பாகப் பராமரிப்பீர்கள்.

எம்முடன் இணைந்து சுற்றுலாப் பயணங்களுக்குச் செல்லும்போது மிகுந்த சுறுசுறுப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதுடன் கூடவரும் அனைவருக்கும் உற்சாகமூட்டியபடி இருப்பீர்கள்.

நானும் எனது தம்பியும் சின்னச் சின்ன சண்டைகள் பிடிக்கும் போதெல்லாம் தகுந்த அறிவுரைகள் வழங்குவதோடு, ''இருக்கும்போது சந்தோஷமாக சேர்ந்து வாழவேண்டும்'' எனக் கூறி எம்மிருவரையும் ஒற்றுமைப்படுத்துவீர்களே அப்பம்மா. இத்தகைய ஒரு சிறந்த அப்பம்மாவைப் பெற்றிருக்க நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

எங்கள் அன்பான அப்பம்மா! நீங்கள் எனக்கு வழங்கிய அறிவுரைகளையும் கற்றுத்தந்த ஒழுக்கநெறிகளையும், சிறந்த பண்புகளையும் நான் எனது வாழ்வில் என்றென்றும் கடைப்பிடிப்பேன் என்பதை உறுதியுடன் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

'வைஷ்ணவி'' என்று மீண்டும் ஒருமுறை அன்பாக அழைத்து என்னை அணைத்துவிட மாட்டீர்களோ என்று ஏங்குகின்றேன். உங்கள் பூவுடலானது இவ்வுலகிலிருந்து விடைபெற்றாலும் உங்கள் அன்பான சிரிப்பும், கனிவான சொற்களும், அன்பும் பாசமும் நிறைந்த இனிய நினைவுகளும் எமது ஆழ்ந்த மனதிலே என்றென்றும் பொக்கிஷமாக நிலைத்திருக்கும்.

உங்கள் பிரிவினால் அனைவரும் ஆழ்ந்த துயரத்தில் உள்ளோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்புள்ள பேர்த்தி
**வைஷ்ணவி**

## அன்புள்ள அப்பம்மா

எனது அப்பம்மா என்மீது மிகுந்த அன்பு மிக்கவர். சிறிய வயதில் நான் அவரது வீட்டிற்குச் செல்லும்போது சுவை மிகுந்த இனிப்புப் பண்டங்களைத் தருவார். எனது அப்பம்மா சமையல் கலையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அவர் இறந்தது எனக்கு மிகவும் கவலையாக இருக்கின்றது.

அப்பம்மா நாங்கள் அனைவரும் உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்புள்ள பேரன்
**சர்வேஸ் கேதீஸ்வரன்**



# பெரியம்மா

அந்தப் பழைய பின்விறாந்தையில் இருத்தி இரவில் எங்கள் நாலுபேருக்கும் நீங்கள் உருட்டித் தரும் குழையல் சோறும் அப்போது எம்மிடையே நடக்கும் சிறு சிறு சண்டைகளும், நீங்கள் சொல்லும் பழைய கதைகளும் இன்னும் பசுமையாக நெஞ்சுக்குள் வந்து போகின்றன.

''அங்கல மாத்தயா'' என்று நீங்கள் கூப்பிட இரண்டு கைகளாலும் ''Cowcatcher'' என்று உங்களுக்கு (உங்கள் மிதந்த பல்வரிசையை கேலிசெய்யும் வகையில்) சைகையாகக் காட்டிவிட்டு அம்மம்மா வீட்டுக்கு ஓடுவதும் ஏதோ நேற்று நடந்தது போல் மனதில் ஈரமாகவே இருக்கின்றது.

சிறு வயதில் யாரோ ஒருவரின் பாட்டா, பாட்டி இறக்கும்போது எங்கோ தொலைவில் எமக்கு அந்நியமாக இருந்த ''மரணம்'' அப்போது பெரியப்பா, இப்போது நீங்கள் என்றானவுடன் அருகில் நெருங்கி வந்தவிட்டதோ என்ற ஒரு ஏக்கம்.

இது இயற்கையே என்று மூளை சொன்னாலும் ஏன் இப்போ... இன்னும் கொஞ்சக் காலம் பொறுத்திருக்கலாமே... என்று இதயம் இரங்கிக் கேட்பதை தவிர்க்கமுடியவில்லை.



அடுத்தமுறை இலங்கை வரும்போது ஒரு வெறுமை இருக்கும். வழமையாய் பார்க்கப் போகும் ஒரு உறவு இனி இருக்கப் போவ தில்லை. எதையாவது வாங்கிவைத்துக்கொண்டு ‘‘கட்டாயம் சாப்பிட வேணும் ராசா’’ என்று அடிக்கடி சொல்லும் ஒரு அன்புக் கட்டளையை இனிக் கேட்கப்போவதில்லை.

நீங்கள் இல்லாமல் நாங்கள் குழையல் சோறு சாப்பிட்ட அந்தப் பின் விறாந்தை இனி அந்நியமாய்ப் போகும். ஆனைக்கோட்டை சற்றுத் தூரமாய்ப் போய்விடும். ‘‘குளப்பிட்டி ரோட்’’ கூட மறந்து போய்விடும்... அம்மம்மா வீட்டைப் போல!


ஆனால் அம்மம்மா மாதிரி நீங்களும் எங்கள் நினைவுகளில் என்றும் வாழ்ந்துகொண்டுதான் இருப்பீர்கள்.

அன்புடன்
**பார்த்திபன்**

# அண்ணி என்ற அன்புத்தாய்

அண்ணி என்ற அன்புத்தாய் எங்கள் குடும்பத்திற்கு மூத்த அண்ணாவை மணம் செய்து அண்ணியாக வந்து அண்ணி என்ற சொல்லுக்கு அன்பு என்ற அர்த்தம் தந்தவர்கள். இன்று அவரின் நினைவுகள் தான் இருக்கின்றன. நாங்கள் இருக்கும் வரை அவரின் நினைவுகள் அழியாது.

அவர் பிறந்ததும் ஒரு பெரிய குடும்பத்தில் தான். அவர் தன் குடும்பத்தையும் எங்கள் குடும்பத்தையும் பொறுப்பாகப் பார்த்தவர். எங்கள் எல்லோரது திருமணங்களையும் அம்மா, அப்பா, அண்ணாவுடன் முன்நின்று நடத்தி வைத்தவர்.



அண்ணா, அண்ணி இருவரதும் வாழ்க்கை நிறைகுடம் மாதிரி. அவர்கள் அன்பான இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்து அவர்களை நன்றாகப் படிப்பித்து இருவரையும் வைத்தியர்களாக்கி இருவருக்கும் திருமணம் செய்துவைத்து அவர்கள் பிள்ளைகளையும் உயிருக்கு மேலாகப் பார்த்தவர்.

அவரின் பிறந்தநாள் கார்த்திகை 1ம் திகதி. தனது மூத்த மகனை லண்டனிலிருந்து கூப்பிட்டு அழகாக பிள்ளைகளுடன் பிறந்த நாளை மிகவும் சந்தோஷமாகக் கொண்டாடினார். அவரின் திருமண நாள் கூட கார்த்திகை 28ஆம் திகதியில் தான் அமைந்தது. அவர் இறைவனடி சேர்ந்ததும் கார்த்திகை 30ஆம் திகதி.

இனி எங்களுக்கு அன்பான அண்ணி இல்லை என்று நினைப்பதே எம்முள் பெரும் துயரத்தை ஏற்படுத்துகின்றது.

அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

**ரா.ஜெகதீஸ்வரி**

## A Tribute to Mrs. Vigneswaran (Periya Baby)

We are greatly shocked and deeply grieved over your demise. "Mamee!Mamee!" your sweet voice still echoes in my ears. But you have left us so suddenly without a whisper. Death is certain, but when it comes to our door steps, it is very hard to face it. The love and values we have for our dears and nears make it unacceptable.

Periya baby, you have been a very strong bond between the Nadarajahs and the Cumarasamy's for the last forty years. Your brother Wignarajah's marriage with our daughter was a big blessing for the families. We have shared our joys and sorrows amiably for so long.

We were so understanding and flexible and we never have had any differences even for four seconds, such was our mutual understanding.

You have been a good wife and I can recall how your husband calls you a "computer Lady". You were so precise in your words, thought and deed. You are a proud mother of two doctors, a kind, loving sister to all of us and a caring in-law who always had a concern for all your kins.

Time and tide wait for no man and we have to go with it, whether we like it or not. That is the law of nature and each and every one of us have to



succumb to it. Periya baby, you have been an example to all those who were around you. And none ever hesitated to approach you in any circumstances. Now and again have spent a few days with you and your hospitality was immense and I never failed to visit you whenever I was free. It was your habit to drop in to see us whenever possible. We are missing you so much and you have left a big vacuum in our family that never can be filled.

We cannot, but say farewell to you.

May your soul rest in peace at the feet of Lord Shiva eternally.

Farewell! Fare thee well! Periya Baby.

**The Cumarasamy's**
Kumaran Kaddam,
Vinasithambi Lane,
Chavakachcheri.

## எங்கள் அன்பான பெரியக்கா

*'ஜனனம் என்று ஒன்று இருந்தால் மரணமும் நிச்சயமாக இருக்கும்'*
*'உறவு இருந்தால் பிரிவும் வரத்தான் செய்யும்'*

மேற்கண்ட மன ஆறுதலுக்கான கருத்துரைகள் எல்லாம் தமக்கென்று ஒரு பிரிவுத்துயர் வரும்வேளையில் செல்லாக்காசாகி விடுகின்றன.

உறவைக் கண்டுகொள்ளும் பொழுது ஏற்படும் களிப்பு, பிரிவைச் சந்திக்கும் பொழுது ஓடியொளித்து விடுகின்றது. துயர்சூழ்ந்த அக் கணத்தில் உறவையும் பிரிவையும் சமமாகக் கண்டு மனதைத் தேற்ற முடிவதில்லை.

நாங்கள் அன்பின் உருவாகவும், பண்பின் உறைவிடமாகவும், பாசத்தின் வடிவமாகவும் கண்டு, பழகிக் களித்த உங்களை எப்படி பெரியக்கா பிரிய முடியும்?

''இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை'' என்ற முது மொழிக்கு அடையாளமாக நீங்கள் ஈஸ்வர இல்லத்தின் இல்லத்தரசியாக வீற்றிருந்து அன்றாடக் கடமைகளை செய்யும் பாங்கைத்தான் எங்களால் மறக்க முடியுமா?

உங்கள் கனிவான பேச்சும், மனஉறுதிமிக்க செயலும், இல்லம் நாடி வந்தோரை வரவேற்கும் அன்புக் குரலும் இன்றும் எம் காதில் ஒலித்த வண்ணம் உள்ளன. இனி எம் வாழ்வில் இதையெல்லாம் நேரில் காணவும் கேட்கவும் முடியாதே என்று எண்ணும்போது துக்கம் நெஞ்சை அடைக்கின்றதே!

உங்களுடைய கண்களிலிருந்து வெளிவரும் கருணை எங்கள் அனைவரையும் அடிமையாக்கியதை நினைக்காமல் இருக்க முடியுமா பெரியக்கா?

நீங்கள் உங்கள் குடும்பத்தைக் கொண்டு நடத்திய பாங்கு எம்மை பிரமிக்கச் செய்தது. ஒரு குடும்பத் தலைவி எப்படி இருக்கவேண்டுமோ அப்படி ஒரு உதாரணப் பெண் ஆளுமையாக எனக்கு மாத்திரமில்லாது எல்லோருக்குமே பெரியக்காவாக வாழ்ந்தீர்கள்.

என்னையும் என் கணவரையும் அக்கறையுள்ள ஒரு அன்னையாக அரவணைத்து அறிவுரைகளை வழங்கி வழிகாட்டினீர்களே!

'ஜீவா ஜீவா' என்று நீங்கள் என்னை அன்பொழுக அழைக்கும் விதத்தை இவர் கூட அடிக்கடி கூறி மகிழ்வார். ஏன் இவரையும் நீங்கள் 'தம்பி' என்று வாய்நிறைய அன்புடன் அழைக்கும் போதுகூட பாசம் பொங்குமே! இனி அக்குரலைக் கேட்கவே முடியாது என்று எண்ணும்போது நெஞ்சம் துடிக்கின்றது.

'இன்றிருப்பார் நாளை இங்கு இருப்பதில்லை' என்பது போல எம்மை விட்டும் பிரிந்து போய் விட்டீர்களே! எப்படி பெரியக்கா உங்களால் எங்களை விட்டுப் பிரிய முடிந்தது.

நாற்பதாண்டுக்காலம் உங்களுடன் வாழ்ந்து களித்த பெரியத்தான் உங்களைப் பிரிய நேர்ந்தபோது அவர் சொர்க்கத்தில் நீண்டகாலம் நீங்களின்றி வாழமுடியாதென்றுதான் உங்களையும் அவசரமாகத் தன்னிடம் அழைத்துக்கொண்டு விட்டாரா?

உங்கள் இழப்பு எங்களுக்கு தாங்கமுடியாத வேதனையை அளிக்கின்றது. காலம் தான் எங்களுடைய பிரிவுத் துயரை ஆற்றமுடியும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

உங்கள் அன்புத்தங்கை, தம்பி

**ஜீவா - ராம்**



## எமது அன்பு பெரியபேபி அக்காவுக்கு

அன்பின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய் அமைதியான புன்னகை யுடன் வந்தோரை பெரியோர் சிறியோர் என்று தரம்பாராது வாஞ்சை யுடன் அரவணைக்கும் பெரியக்கா!

என்னிடம் உள்ள வார்த்தைகள் போதாதே உங்கள் கதைசொல்ல.

என் மனமோ மறுத்துத் தவிக்கின்றது உங்கள் பிரிவினை ஏற்றுக்கொள்ள!

இன்று நீங்கள் இல்லை என்பது நிஜமாகிப் போனது என்னவோ உண்மைதான். ஆனால் அது கனவாகவே இருந்துவிடக்கூடாதா என்று என் மனம் ஏங்குகின்றது.

01.11.2018 அன்று உங்கள் 77ஆவது பிறந்தநாள் நிகழ்வின்போது திருக்கோணமலையிலிருந்து உங்களுடன் தொலைபேசி மூலமாக உரையாடி வாழ்த்துக்கள் கூறியமை தான் எமக்கிடையில் நடந்த கடைசி உரையாடல். அந்தக் குரலை நெஞ்சில் பத்திரமாகப் பேணு கின்றேன் - இனி ஒருபோதும் அக்குரலைக் கேட்க முடியாததால்!



காலங்கள் கடந்தாலும் ஆண்டுகள் கழிந்தாலும்

என்மனதில் என்றும் மாறாது நிலைத்திருக்கும் பெரியபேபி அக்கா,

உங்கள் நினைவுகள்.

ஆனைக்கோட்டைக்கு வரும்வேளையிலெல்லாம் உங்களைத் தரிசிக்காமல் நாம் திரும்பியதில்லை.

அன்னையே, இனிமேல் உங்கள் வீடுதாண்டும் வேளை காற்றில் கலந்துநிற்கும் உங்களின் உயிர்மூச்சே எம்மை ஸ்பரிசிக்கப் போகின்றன.

அன்புடன்
உடன் பிறவாத தம்பி
**சோதிராசா**
(எஸ்.சோதிராஜன், ஆனைக்கோட்டை)

## Dear Periya Athai

You never said you were leaving
We didn't get to say goodbye
The stroke came so suddenly
Now you're gone, and it makes us cry

You were an Athay to me and my sister
And a good sibling to our dad
You were kind and full of energy
And you always made us glad

Your love was unconditional
Your mind so very strong
These memories of you Periya Athai
Will forever to us belong

Memories of you are special
They will always make us smile
If we could only see you once again
Just for the tiniest little while

We would tell you how much we loved you
And how much we love you still
In our hearts you have a big place
That no one else could ever fill

We are truly lucky people
To have experienced your love
We hope you'll watch over us
As the brightest star from above

The fact that you are no longer
Causes heartache and tremendous pain
We will miss you every second
Until the day we meet again

We all know life isn't forever
That one day it will cease
We just hope you've found Athan-mama by now
And together rest in peace

Love
**Shobi and Rakshana**



## Memories never Die

Memories of our aunt are simple ones, but it is usually the simplest things in life we take for granted. To us we called her 'Periathai' as her siblings all called her 'Peria-baby'. She was seldom called by her birth name 'Sivaneswary' as such to call her 'Sivaneswary athai' seemed unusual and far to formal as though one was beckoning a stranger.

Throughout our lives she has always been present despite the miles and continents that separated us. Ever present in the stories that our parents recited to us of their younger days. In our minds she was always the strong-willed older sister: always defending and caring for her younger siblings. She was the strong sister that spoke her mind to anyone who cared to listen. She held onto such characteristics throughout the years, and it helped her to endure some of the darkest times in her life. Many a time we have discussed and admired her strength.

To us, her nephew and nieces, she was always the kind aunt. She painted our nails when we were toddlers and enjoyed sitting back to watch the joy spread on our faces. After years of living abroad when we paid visits to her, little had changed in her affections.

Each time we visited her she would welcome us into her home with warm hugs and kiss us on both cheeks. As we would sit down and talk of our lives in the UK she would listen to us keenly and gently stroke our backs or hair. She would always ask how our studies were going. Not a question was left unasked when it came to education, and she would always end by reminding us to study hard and do well in each of our lives.

No visit was left on empty stomachs either. An array of food was always made and when we would peep inside the dishes it was always evident how much thought had gone into preparing them. Appa's favorite fish curry or coconut rocks for the three of us would always be in the top contenders.

When the time would come to bid farewell to Periathai, she would always ask when we would come back, and walk us up to the main gate, holding our hands and not letting go until the very last second. Upon departing she would once again, give us hugs and kisses and stand by the gate waving to us until we were out of sight, never listening to our pleas to go inside.

To us Periathai will always be the strong, independent aunt. She will always be someone to admire and aspire to learn many of life's lessons from.

**Shaumia, Gauthaman and Maulia**
Luton, UK



## என் மீது ‘பட்சமுள்ள’ பெரியக்கா...

எனது பாசம் மிக்க பெரியக்காவுடனான தொடர்பினை மூன்று கட்டங்களாக வகுத்து இரைமீட்க எண்ணுகின்றேன். 1954இல் எனது பிறப்பிலிருந்து 1966 நவம்பர் 28இல் அவர் திருமணம் முடித்து ஆனைக்கோட்டையில் எமது பூர்வீக நிலத்தில் கட்டப்பட்ட பெரிய வீட்டில் ‘‘தனிக்குடித்தனம்’’ நடத்தப் புறப்பட்ட காலகட்டம் வரையானது முதலாவது காலப்பகுதி.

எமது தந்தையின் பிரிவின் பின்னர் 1970களில் நாம் நீர்கொழும்பைத் துறந்து எமது தாய்மண்ணான ஆனைக்கோட்டைக்குப் புலம்பெயர்ந்தது முதல் 1992 இல் நான் குடும்பத்துடன் லண்டனுக்குப் புலம்பெயர்ந்தது வரையிலான இரண்டாவது காலப்பகுதி.

இலங்கையிலிருந்து லண்டன் நோக்கிப் புலம்பெயர்ந்த 4.10.1992 முதல் இன்றளவிலான எமது புலம்பெயர்வாழ்வியல் வரையிலான மூன்றாவது காலப்பகுதி.

அன்னையின் மிகுந்த கட்டுப்பாடான குடும்பப் பிணைப்புக்குள் பழகிப்போயிருந்தவர்கள் நாங்கள். குடும்பத்தின் கடைக்குட்டியாக இருந்ததால் எனது இரு சகோதரிகளினதும் செல்லப்பிள்ளையாக வீட்டில் வலம் வந்தேன். பெரியக்காவுக்கும் (திருமதி சிவனேஸ்வரி ஸ்ரீவிக்னேஸ்வரன்) எனக்குமிடையே பதின்மூன்று வருட இடைவெளி யிருந்தது. குழந்தையான என்னை வளர்த்தெடுப்பதிலும் பராமரிப் பதிலும் சகோதரிகள் இருவரினதும் கணிசமான பங்களிப்பு தொடர்ந்து இருந்துவந்தது. அதனால் அவர்களிடமிருந்து தனித்துவமான தாய்மைக்குரிய ஸ்பரிசத்தை அன்றாடம் அனுபவித்துவந்துள்ளேன். 1966இல் பெரியக்காவின் திருமணத்தின் பின்னரும் தொடர்ந்த இப்பாச உறவு பின்னாளில் ‘எனது வில்லன்களான’ பாபுவும், கோபுவும் பிறக்கும் வரை நீடித்தது.

எனது சிறுவயதில் ‘நல்லதம்பி’ மாமா வீட்டில் நடக்கும் ரோகிணி டீச்சரின் சங்கீத வகுப்புகளுக்கு சகோதரிகள் இருவரையும் பாது காப்பாகக் கூட்டிச்சென்று வரும்(?) முக்கியமான பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர்களுடன் கூடவே அங்கிருந்தபடி கேள்விச் செவியனாக அவர்களோடு சேர்ந்து சங்கீதம் கற்ற அனுபவமும்

எனக்குண்டு. பின்னாளில் வீட்டில் பெரியக்காவுடன் இணைந்து சௌந்தரராஜன்-சுசீலா ஜோடியாகப் பாடும் பாசமலர், பாலும் பழமும் போன்ற படப் பாடல்களை வீட்டுக்குள் பாடிக்களிக்கும் வாய்ப்புகளும் இடைக்கிடையே கிட்டின.

ஒவ்வொரு மாதமும் எங்கள் ஐயா பெரியக்காவுக்கு Woman and Home என்ற ஆங்கிலச் சஞ்சிகையை வாங்கிக் கொடுப்பார். அதில் உள்ள 'கேக்' வகையறாக்களைப் பரிசோதனை முயற்சியாக சகோதரிகள் இருவரும் தயாரிப்பார்கள். அதனை ருசிபார்க்கும் வாய்ப்பும் எனக்கே அதிகம் கிட்டும். அவர்களின் செல்லப்பிள்ளை என்பதால் மற்றவர்களை விடக் கூடிய பங்கும் இறுதியில் எனக்கு இரகசியமாகக் கிடைக்கும்.

எங்கள் ஐயா ஒரு நல்ல வாசகராக இருந்திருக்கவேண்டும். அவரிடமிருந்த சிறிய நூலகத்தைப் பற்றிய மனப்படமொன்று என் நினைவில் அடிக்கடி வந்துபோவதுண்டு. அவருக்கு நேர் விரோதமான குணாதிசயம் கொண்டவர் அம்மா. (எனது நூலகக் கல்வியின் பின்னர் ஒரு தீவிர வாசகராக அவரை மாற்றியமைத்த பெருமையும் எனக்கு உண்டு). பாடப் புத்தகங்களைத் தவிர எந்தவொரு நூலும் வீட்டுக்குள் நுழைவதை அம்மா அனுமதிக்கமாட்டார். நீர்கொழும்பில் எங்கள் வீட்டுக்கு அருகாமையில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்ததொரு தமிழ்க் குடும்பம் குடியேறியிருந்தது. அவர்கள் வீட்டில் வாராந்தம் குமுதம், விகடன் ஆகிய தமிழகச் சஞ்சிகைகளை வாங்குவார்கள். காலக்கிரமத்தில் ஏற்பட்ட நட்பின் காரணமாக அவர்களிடமிருந்து அவற்றை இரவலாக வாங்கி, இரகசியமாக வீட்டுக்குள் கடத்திவந்து என் அருமைச் சகோதரி களிடம் அவற்றைக் கையளிக்கும் கைங்கரியத்தையும் நான் மேற் கொண்டு வந்தேன். பின்னர் திருப்பி எடுத்துச் சென்று மீளிப்பதும் எனது பொறுப்பாகும். 'கடைக்குட்டி'யாக இருப்பதில் உள்ள சௌகரியங்களில் ஒன்று அம்மாவின் சந்தேகப் பார்வையிலிருந்து இலகுவில் தப்பிவிடுவதாகும். பெரியக்காவும் சின்னக்காவும் இரகசியத்தைக் காப்பதில் அதீத முயற்சி எடுத்து வந்தார்கள்.

குமுதம் சஞ்சிகையை இரவலாகப் பெற்று அவர்களின் வீட்டி லிருந்து நடந்துவரும் வேளையிலேயே அதில் வரும் ரா.கி.ரங்கராஜனின் 'மறுபடியும் தேவகி' என்ற தொடர்கதையின் அத்தியாயத்தை வாசித்து முடித்துவிடுவேன். வீட்டில் வைத்து என்னால் இரகசியமாக குமுதம்,

விகடன் வாசிக்கும் வாய்ப்பு கிட்டுவதே இல்லை. ஒருநாள் அப்படி தொடர்கதையை வாசித்தபடி வீடுதிரும்பிய வேளையில் என்னை ஒருவர் இடைமறித்தார். நிமிர்ந்து பார்ப்பதற்குள் என் கையிலிருந்த புத்தம்புதுக் குமுதம் அவரின் கைக்கு மாறியது. அது வேறு யாருமல்ல. அம்மாவே தான். அந்தக் குமுதம் நேராகக் குசினிக்குக் கொண்டு செல்லப்பட்டு எரிந்துகொண்டிருந்த அடுப்புக்குள் சகோதரிகளின் முன்னிலையில் தகனம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து அயல்வீட்டி லிருந்து குமுதமும் வருவது தடைப்பட்டது. இதனால் சகோதரிகள் இருவரும் அம்மாவிடம் மாட்டிக்கொண்டது இன்றும் நினைவில் உள்ளது.

பெரியக்கா நீர்கொழும்பிலிருந்து திருமணமாகி யாழ்ப்பாணம் சென்றவேளை எனக்குப் பன்னிரண்டு வயது. சில காலங்களின் பின்னர் சின்னக்காவுக்கும் திருமணமாகிவிட்டது. திருமணமான சில காலங்களில் எமது தந்தையாரும் மறைந்துவிட்டார். தந்தையின் மறைவின் பின்னர், சின்னக்காவின் கணவரின் பணி யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகியதைத் தொடர்ந்து நீர்கொழும்பை விட்டு நாம் முற்றாக நீங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. 1971களில் நாம் அனைவருமே யாழ்ப்பாணத்திற்குப் புலம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்



பின்னர் பெரியக்காவுடன் மீண்டும் இணைந்துகொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

பெரியக்கா பற்றிய மனப்பதிவின் இரண்டாவது கட்டம் இதுவாகும். பாசத்தை அள்ளிவழங்கிய இளம் சகோதரிகளுள் ஒருவராக இருந்த பெரியக்கா காலமாற்றத்தால் ஒரு பொறுப்புள்ள குடும்பத் தலைவி யாகவும், பரிவும் பாசமும் கண்டிப்பும் மிக்க ஒரு அன்னையாகவும் புதிய பரிமாணமொன்றை விரைவிலேயே பெற்றிருந்தார்.

திருமணமான புதிதில் தனிக்குடித்தனம் புகுந்த வேளையில், அத்தான் வேலைக்குப் போனபின் யாராவது கதவைத் தட்டினால் கதவைத் திறக்காமல் தான் ஓடிச்சென்று உள்ளறையில் பதுங்கிவிடுவதாக அண்மையில் ஒருநாள் எனக்குச் சொல்லிச் சிரித்தார். திருமணம் என்ற பந்தத்தின் வழியாக காலம்காலமாக வாழ்ந்த தாய்வீட்டிலிருந்து கிளப்பி தனிக்குடித்தனம் என்ற பெயரில் 220 மைல்களுக்கு அப்பால் பெரிய வீடொன்றில் தனித்துவாழ நிர்ப்பந்திக்கப்பட்ட ஒரு சகோதரியின் மனம் அவ்வேளையில் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை எண்ணிய தால் அவரது சிரிப்பில் இணைந்துகொள்ள முடியவில்லை. தனிக் குடித்தனத்தின் மறுபக்கம் பற்றிய யதார்த்தங்களை தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தது.

அத்தகையதொரு அப்பாவியின் பிரமிக்கத்தக்க ஆளுமை வளர்ச்சியை நான் புலம்பெயர்வதற்கு முன்னான 1992 வரையான இரண்டாவது காலகட்டத்தில் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிந்தது. வீட்டின் குடும்பப் பொருளாதார நிர்வாகப் பொறுப்பை முழுமையாகத் தன் வசப்படுத்திக்கொண்டு, அத்தானை சுதந்திரமாகப் பணியாற்றவிட்டு தன் குடும்பத்தை சிக்கனமாகக் கொண்டு நடத்தியவர் பெரியக்கா.

அக்காலகட்டத்தில் எமது குடும்ப வைத்தியராக கூளாவடியில் டொக்டர் பொன்னம்பலம் இருந்தார். பெரியக்கா தனது குடும்பத்தினரின் சுகவீனங்களுக்கு மருத்துவ ஆலோசனைகளுக்கு அன்றாடம் அவரையே நாடுவதுண்டு. தனது இரண்டு பிள்ளைகளையும் கண்டிப் புடன் வளர்த்து வந்த அவர், சிறுவயதிலேயே அவர்கள் இருவரையும் பார்த்து 'நீங்கள் டொக்டர் பொன்னம்பலம் போல திறமையான டொக்டர்களாக படித்து வரவேண்டும்' என்று அழுத்திக் கூறியபடி

யிருந்தார். அவரது விருப்பப்படியே இறுதியில் இருவரையும் மருத்துவர்களாக்கி மகிழ்ந்தார்.

பெரியக்காவிடம் எனது கருத்தைக் கவர்ந்த மற்றொரு விடயம் அவர் வீட்டுக்கணக்கெழுதும் முறையாகும். எம்மில் பலர் கணக்கெழுதும் ஞானோதயம் பெற்று புதுக் கொப்பியில் வீட்டு வரவு செலவுக் கணக்கு எழுதத் தொடங்குவோம். ஆனால் தொடராமல் பாதியில் அதனைக் கைவிட்டு பிறிதொரு ஆண்டின் தொடக்கத்தில் மீண்டும் கணக்கெழுதும் சங்கல்ப்பத்தை ஏற்றுக்கொள்வோம். ஆனால் அதுவும் பாதியில் கைவிடப்பட்டுவிடும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். பெரியக்கா திருமணம் முடித்துத் தனிக்குடித்தனம் சென்ற முதலாவது நாளிலிருந்து அத்தானின் சம்பளப் பணத்தை வரவில் வைத்து ஒவ்வொரு சிறு செலவையும் கணக்குக் கொப்பியில் எழுதும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். தான் மறையும் வரையில் அவ் வழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தார். நான் இறுதியாக அவரை தேகாரோக்கியத்துடன் சந்தித்த 08.10.2018 அன்றுகூட அவரை அந்தக் கணக்குக்கொப்பியுடன் தான் தரிசித்திருந்தேன்.

யாழ்ப்பாணத்தில் நான் பணியாற்றிய வேளையில் புத்தகங்களுக்கு மட்டைகட்டும் பணியினையும் மேற்கொண்டு வந்திருந்தேன். பொழுதுபோக்காக ஆரம்பித்த இப்பணி காலப்போக்கில் போர்க்காலச் சூழலில் என் குடும்பத்துக்கான வருமானம் ஈட்டும் தொழிலாக என்வசப்பட்டது. அவ்வேளையில் பெரியக்கா தானும் புத்தகம் கட்டும் பயிற்சியை என்னிடம் விரும்பிப் பெற்றுக்கொண்டு வீட்டிலிருந்தவாறே எனக்குப் புத்தகங்கள் கட்டித் தந்ததுடன் அதனால் பெறப்பட்ட ஊதியப் பணத்தினை பத்திரமாகச் சேமித்து தனக்கு ஒரு சோடி தோடுகளை வாங்கியுமிருந்தார். தனது உழைப்பில் வாங்கியது என்ற பெருமையுடன் அடிக்கடி எனக்கு அதனைக் கூறிப் பெருமிதம் கொள்வார். இளம்வயதில் தான் ஒரு நேர்ஸ் ஆகவேண்டும் என்று கனவு கண்ட புதுமைப்பெண் அவர். அவரது கனவு ஏன் கைகூடவில்லை என்பதை என்னால் நினைவில் மீட்க முடியவில்லை.

இறுதிக் காலத்தில் தனது மாமனாரைப் பராமரித்து, பின்னாளில் தனது கணவரைப் பராமரித்து வரும் வேளையில், ஒரு தடவை என்னிடம் தான் அத்தானுக்கு முன்னர் சாகக் கூடாது. தான் இல்லாமல்

அவரை வேறு யாரும் பராமரிக்க விடுவதை தான் ஒருபோதும் விரும்பவில்லை என்றார். அதற்காகத் தன் உடம்பையும் கவனமாகப் பார்த்துக்கொள்வதாகக் குறிப்பிட்டார். ''ஒமேகா 3'' என்ற வில்லைகளை லண்டனிலிருந்து எடுப்பித்து அன்றாடம் அவர் உண்டுவந்தார். அவரது வைராக்கியமும் மனத்திடமும் அவரை இறுதிவரை தான் விரும்பிய வாறே தன் அன்புக் கணவரைப் பராமரிக்க வழிசெய்தது.

அவரது மூத்த மகன் பாபு லண்டனுக்குக் குடும்பத்துடன் வந்து குடியேறிய பின்னர் பல தடவைகள் தம்பதி சமேதராக பெரியக்காவும் அத்தானும் லண்டனுக்கு வந்திருந்தனர். அக்காலத்தில் இடைக்கிடையே அவர்களை அழைத்து 'ஊர் சுற்றிக் காட்டிய' நினைவுகள் மறக்க முடியாதவை. ஒவ்வொரு வரலாற்றுச் சின்னங்களையும் விபரித்து அவர்களுக்குப் புரியவைப்பது ஒரு இன்பகரமான அனுபவமாக இருந்தது.

அத்தானைத் தான் பராமரித்ததுபோல அவர் தன்னை மற்றவர்கள் பராமரிப்பதை என்றும் பெரியக்கா விரும்பியதில்லை. அவரது இறுதிக் காலத்தில் வாழும்வரை தானாகவே சுயமாக நடமாடி வாழவேண்டும் என்றும் நோயுற்று நொடிந்து படுக்கையில் வீழும் நிலை ஏற்படு வதைத் தான் என்றும் விரும்பவில்லை என்றும் அடிக்கடி எனக்குக் கூறிவந்தார். அவரது விருப்பம் போலவே அவரது மரணமும் மற்றவருக்குப் பாரமின்றி இறுதியில் அமைந்துவிட்டது.

தன் மரணச் செலவைக்கூட மற்றவர்கள் பகிர்ந்துகொள்வதை விரும்பாமல், தானே சிறுகச் சிறுகச் சேர்த்து அதனை வங்கியில் இட்டுவைத்தமையை அவரது பிள்ளைகள் வாயிலாக அறியநேர்ந்தபோது பெரியக்கா என் மனதில் ஒரு வைராக்கியம் மிக்க ஆளுமையாக விஸ்வரூபம் எடுத்துவிட்டார்.

28.11.1966 முதல் 22.4.2016 வரையான நாற்பதாண்டுக் காலத்தில் போர்க்காலகட்டத்தில் 1995-1997 காலகட்டத்தில் பெரியத்தான் பாபுவுடன் யாழ்ப்பாணத்தில் தங்கிய இரு ஆண்டுகளைத் தவிர்த்து, பெரியக்கா தன் இணையைப் பிரிந்து வாழ்ந்த காலங்களே இல்லை எனலாம். இத்தகைய தீவிரமான பிணைப்பின் பின்னதாக 22.4.2016இல் அத்தானின் மறைவு அவரிடம் பெரும் மனப்பாதிப்பை ஏற்படுத்தி யிருக்குமென்றே கருதுகின்றேன். அத்தான் மறைந்த இரண்டரை

ஆண்டுக்காலத்தில் தன் நிறைவான வாழ்வை வாழ்ந்து முடித்தபின் மீண்டும் அவருடன் பெரியக்காவும் சென்று சங்கமமாகிவிட்டார்.

இனிமேலும் அவரது மறைவை எண்ணிக் கலங்கியிராது, அவர் வாழ்ந்து சென்ற இனிய வாழ்வின் நினைவுகளைப் பகிர்ந்து மகிழ்வதே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

''கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க''

**என்.செல்வராஜா**
லண்டன்



## என்னவென்று சொல்வது?

பெரியபேபி! நீ, வார்த்தைகளால் மாலையிட முடியாத
உயர்ந்த தேசம்!
இது பேனா முனைகளால் தொட்டிட முடியாத
நிறைந்த சோகம்!

சாயல் மறைந்து காலை வெளிக்கும் தருணத்தில் - உமது
பிரிவுச் செய்தி கேட்டுப் பதறியது என் நெஞ்சம்!
நீர் பிரிந்தது போல் தெரியவில்லையே மச்சாள்!
இன்றும் என் கண்களும் உள்ளமும் உம் நினைவுகளுடன்!

கொழும்பு மாநகரத்தில் விமானம் பறந்து விளையாடும் நீர்கொழும்பு நகரத்தில் குடும்ப உறவுக்கும் அப்பால் சினேகிதிகளாய் சிறு வயதிலே ஒன்றாகப் பள்ளிக்கு கைவீசிச் சென்று பல வேடிக்கைக் கதைகள் பேசி நின்றோம்.

உள்ளத் தூய்மை, தன்னலமற்ற வாழ்க்கை என என்னோடு பழகிய அந்த நாட்கள்! இன்று உம்மை நினைத்து இரங்கல் கவிதைகூடப் பாட என் மனம் வலிக்கின்றது!



காலம் தவறாமல் என் பிறந்தநாளை நினைவுகூர்ந்து வாழ்த்துச் சொல்வீரே!
இவ்வாண்டு மட்டுமேன் காலம் மறந்து வாழ்த்திச் சென்றீர்?

மார்கழி ஆறு நான் பிறந்திருக்கினும் அதை நன்றே அறிந்த நீர் - இவ்வாண்டில் கார்த்திகை ஆறே வாழ்த்துக் கூறியிருந்தீர்?
முதுமையின் வழிவந்த மறதியென்று நகைத்தோம்!
கார்த்திகை முப்பதில் நீர் விழிமூடிக்கொண்டதும் தான் புரிகிறது.
பிறந்தநாள் வாழ்த்தினை மரணத்தின் முன்பே சொல்லிவிடத் துடித்தீர் என்று!

நீர் பேசிவந்த குரல் கேட்க, சிரித்துப் பேசிய முகம் பார்க்க - உம்மை கவர்ந்துசென்ற காலன்; உமக்கு உயிர் கொடுக்கானோ!
மீண்டும் காணத் துடிக்கின்றது என் இரு கண்கள்!

**திருமதி விமலாதேவி பரமரட்சகபாலன்**

# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத்தின் அன்புத் தெய்வம் இறைபதமடைந்த செய்தி கேட்டு பல வழிகளிலும் ஆறுதல் கூறி உதவி புரிந்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் அனுதாபச் செய்திகளைத் தொலைபேசி வாயிலாகவும், முகப்பு புத்தகம் மூலமாகவும் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், ஈமக்கிரியைகளை நிகழ்த்திய குருக்கள் அவர்களுக்கும், இன்றைய அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்

யாழ்ப்பாணக் குடாநாடு சார்ந்த பலவினக் கட்டுரைகள்

# அறிவின் தேட்டம்

# யாழ்ப்பாணத்துச் சமையல்

திருமதி லக்சுமி அவர்கள் தாமெழுதிய யாழ்ப்பாணத்துச் சமையல் என்னும் நூலுக்கு ஓர் அணிந்துரை தருமாறு என்னைப் பணித்தார்கள். ஆம் பணித்தார்கள். மூன்று வேளையும் ஏறக்குறையக் கடந்த 50 ஆண்டுகளாக எனக்குச் சமைத்துப் போடும் ஒரு வேலைக்காரிக்கு நான் இதையும் செய்யாவிட்டால், நான் என்ன மனுஷன்?

மனைவி வாசுகி மறைந்தபோது, ‘அடிசிற்கு இனியாளே’ என வாசுகியின் சாப்பாட்டை நினைத்துத் தான் வள்ளுவரும் கதறினார். காதலனின் இதய பீடத்தில் வீற்றிருக்க விரும்பும் காதலியே, அந்தப் பீடத்தை அவனின் வயிற்றூடாகச் சென்றடை, என்றுதான் ஓர் அறிஞன் கூறினான்.

எந்த வீட்டில் சமையல் அறையும், படுக்கை அறையும் ஒழுங்காக இருக்கிறதோ, அந்த வீட்டில் குடும்பம் சிறப்பாக நடைபெறுகின்றது என்று அர்த்தம்.

ஆம். இப்பொழுது எத்தகைய நவீன சமையலறைகள்! எத்தனை, எத்தனை சமையற் சாதனங்கள்! பெரிய குளிர்சாதனப் பெட்டி, காஸ் அடுப்பு, மின்சார அடுப்பு, மைக்ரோவேவ் அடுப்பு, அரிய, வெட்ட, இடிக்க, அரைக்க கலக்க, கரைக்க எல்லாம் கருவிகள். இன்னும் என்னென்னவோ வசதிகள்!

அப்படித்தான் படுக்கையறையும். ஒரு பொத்தனை அழுத்தினால், பஞ்சு மெத்தை ஆளைத் தூக்கித் தூக்கிப் போடுகிறது. காலை உயர்த்த வேண்டுமா, தலையை நிமிர்த்த வேண்டுமா? ஒரு பொத்தானை அழுத்த வேண்டியதுதான். தாய், குழந்தையை மடியில் இட்டுத் தாலாட்டுவது போலப் படுக்கை அசைந்து அசைந்து தாலாட்டுகிறது.

இன்னும் எத்தனை எத்தனை வசதிகள்! ஆனால், சமையலறைக்குப் போனால் சாப்பாடில்லை. படுக்கைக்குப் போனால் தூக்கமில்லை.

இந்த ஊரே ஒரு குளிர்சாதனப் பெட்டிதானே! இதற்குள்ளே ஒரு குளிர் சாதனப் பெட்டி. ஒரு நாளைக்குச் சமைத்தால் ஒரு மாதத்துக்குச் சமைக்க வேண்டாமாம். சூடாக்கிச் சூடாக்கிச் சாப்பிடலாமாம். உறைபனிப் பெட்டியில் மாமிசத்தை மாதக்கணக்காக வைத்துவிட்டு வெட்டி வெட்டிச் சமைக்கலாமாம். எவ்வளவு வசதி பாருங்கோ.

இந்த ஊரில் மனிதருக்கு எல்லாம் பழசுதான் பிடிக்கும். ஏனென்றால் இங்கே அதிகமாகப் புதிசு கிடைக்கிறது அருமை. இங்கே எல்லாரும் அப்படித்தான். இங்கே ஒருவரும் அதெல்லாம் பார்க்கிறதில்லை.

ஆம் இங்கே விழுமியங்கள் கூட விறைத்துப் போய்விட்டன. துய்ப்போம் எனிலோ தப்புந பல ஆதலாலும் பாத்தூண் மருவியவனைப் பசியென்னும் தீப்பிணி தீண்டல் அரிதாகலானும் ஐம்புலத்தாறு ஒம்புதல் கடமையாதலாலும்.

இல்லறத்துத் தமிழன் சமைத்து உணவைச் சேமித்து வைப்பதில்லை.

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை. கணவன் வளர்ந்த குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்ல மனைவி கைக்குழந்தையைக் காப்பகத்திற் சேர்த்து மாலையில் கையுணவோடு வந்து வாசற் கதவைத் திறக்கிறாள். இல்லறம் நடக்கிறது.

சமையலறை ஒழுங்காக இருந்தால்தான் படுக்கையறை ஒழுங்காக இருக்கும். பெருகிவரும் விவாகரத்துக்கள் எதனைக் காட்டுகின்றன? காரணம் என்ன? படுக்கையறை சரியில்லை. ஏன் நவீன படுக்கை யறையாச்சே, சமையலறை சரியில்லாததினால் படுக்கையறை சரி யில்லை. புரிகிறதுதானே.

என் தந்தை வீட்டில் வெள்ளி விதைத்துப் பொன்னே விளையினும் என் கணவன் இல்லில், குப்பைக் கீரை, உப்பின்றி வெந்ததை உண்டு வாழ்வது நன்றே தோழி, என் கணவன் வாழ்வே.

> *'ஒன்றன் கூறாடை உடுப்பவரேயாயினும் ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை'*

இத்தகைய ஒன்றிய இல்லறம் எங்கே போயிற்று?

எனவே சமையற் கலை என்பது இல்லறத்தின் மையம்.

இன்று அதனை இழிவாகக் கருதும் நிலை தோன்றிவிட்டது. இதற்குக் காரணம் ஆண்களே. சாதம் படைக்கவும், தெய்வச்சாதி படைக்கவும் பெண்களால் முடியும் என்னும் உண்மையை மறுத்து, சாதம் படைக்க, அடுப்பூதவே அவர் தகுதியானவர்கள் என்று கருதி மாதர் தம்மை இழிவு செய்த ஆண்களின் மடைமையினாலேயே, பெண்கள் சமையலை இழிவாகக் கருதும் நிலை தோன்றியது.

சமையலைத் தவமாகச் செய்த தாயார் உளர். அடுப்பை மெழுகி, உலை ஏற்றித் தீ மூட்டித் தீக்கடவுளை வணங்கி, சோறு சமைத்தார்கள். சின்ன மொட்டைக் கறுப்பன் நெல்லின் கைக்குத்தல் அரிசியை அவிய விட்டோ, கஞ்சி வடித்தோ சமைப்பார்கள். அவித்த சோற்றில் சத்து (விற்றமின் பி) வெளியேறுவதில்லை. கஞ்சி வடித்தால் அது இராச வள்ளிக்கிழங்கு நிறத்தில் கம கம என வாசம் வீசும். அதனைக் குடிப்பார்கள்.

வெந்த சோற்றை உடனே அடுப்பை விட்டு இறக்கமாட்டார்கள். நெருப்பை அவித்துத் தணலில் சோறு புழுங்க விட்டு வைப்பார்கள். சோறு புழுங்கி உள் வெந்து பதமானபின் இறக்குவார்கள். இது மண்பானையில் அடுப்பில் சமைக்கும் சமையல்.

சட்டி பானைகளை ஒன்றுக்கு மேல் வைத்திருக்க மாட்டார்கள். தைப் பொங்கலுக்கு முன்பே உடைத்துவிடுவார்கள். பொங்கலிலிருந்து புதுச்சட்டி பானை. இதற்கு விஞ்ஞான விளக்கம் உண்டு.

அடுப்பு எரிப்பதற்கு இன்ன விறகுதான் ஏற்றது என்னும் விதியுண்டு. கள்ளி, புளி போன்றவை விலக்கு. விறகின் தீக்கு ஏற்ப உணவின் சுவையும், சத்தும் மாறிவிடும்.

கள்ளி, புளி, பனை, தென்னை விறகுகள், உணவின் சுவையை மாற்றுவதோடு, அவற்றால் சமைக்கப்பட்ட உணவை உண்டவர்க்கு மூல நோய், இரத்தக் கடுப்புப் போன்ற நோய்களை உண்டாக்கும்.

இவையெல்லாம் சித்த வைத்திய நூல்களிற் கூறப்பட்டுள்ளன. ஆனால் படிப்பறிவற்ற நம் தாயார், இவற்றை முன்னோர் முறைபற்றி அனுபவத்தினால் செய்கின்றனர்.

அடுப்பு எரிவதே ஓர் அழகான காட்சி, தெவிட்டாத அழகுச் சுவாலை வீசி, கொழுந்துவிட்டுப் பல நிறங்காட்டிச் சுழன்று சுழன்று எரிவதைத் தாய்மார் பார்த்து அக்கினி வழிபாட்டால் தெய்வநிலை பெறுவர்.

எரிந்த தணலில் கத்தரிக்காயைச் சுட்டுத் துவையல் ஆக்கிக் கொள்வர். தேங்காய்ச் சொட்டைச் சுட்டுப் பத்தியக் கறிக்கு எடுத்துக் கொள்வர்.

இத்தகைய அடுப்பின் பயனையும் அது எரியும் அழகையும் இன்றைய காஸ் அடுப்பில், மின்சார அடுப்புகளில் பெற முடியுமா?

புது மண் சட்டியில் காய்ச்சிய பசுப்பாலின் சுவையோ சுவை. உலோகப் பாத்திரங்களில், கறி கொதித்து வேகுவதற்கு முன்னரே, பாத்திரம் கொதித்துவிடுகிறது. மண் சட்டி போலப் படிப்படியாகச் சூடேறிப் பக்குவமாகச் சமையல் செய்ய முடியாது.

குழம்பு, வெள்ளைக்கறி, தீயல், வதக்கல், வற்றல், பிரட்டல், துவட்டல் போன்ற பக்குவங்களுக்குப் பொருத்தமான சட்டிகள் இருக்கின்றன.

குழம்பு கூட்டும் போது சேர்க்கும் நீரை, துவட்டல் கறிக்குச் சேர்த்தால், கறி துவண்டு வருமா? இவற்றின் நீரில் அளவு எவ்வளவு என்பதை எழுதித் தெரிவிக்க முடியாது. அனுபவத்தால்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

உண்ணும்போது மாத்திரம் தேவையான நெய்யை எடுத்து உருக்கி உண்ண வேண்டுமே தவிர, முழுவதையும் அடிக்கடி உருக்கக்கூடாது. சரிசமமாக நெய்யும் தேனும் கலந்து உண்டால் அது நஞ்சாகும் என்பது பரிமேலழகர் சொல்லும் குறிப்பு. நீர் கருக்கி, நெய் உருக்கி, மோர் பெருக்கி உண்பவரது பேர் உரைக்கிற் போமாம் பிணி.

நெய்யை உருக்காது உண்ணக் கூடாது. கொதித்து ஆறிய நீரே குடிக்க வேண்டும். மோரை அதிகமாக குடிக்க வேண்டும். சின்னச்சீரகம் சேர்த்துக் காய்ச்சிய நீர் மாரி காலத்திற்கும் வெந்தயம் சேர்த்துக் காய்ச்சிய நீர் கோடைகாலத்திற்கும் ஏற்றது. சீரகம் வெப்பம் தந்து சளியை வெட்டும். வெந்தயம் குளிர்ச்சி தந்து உள் வறட்சியைப் போக்கும். இந்த தமிழ்ச்சாதிக்குச் சரியாக உண்ணத் தெரியாது. திருக் கோயில் வழிபாடு செய்யத் தெரியாது என்பதை அனுபவத்திற்கண்டு நெஞ்சு பொறுக்காத நாவலர் பெருமான், திருக்கோவில் வழிபாட்டு முறைகளையும் விதிகளையும் வினா-விடைகளாக எழுதி வைத்துள்ளார்.

ஒருமுறை வாயினுள் இட்ட கவளத்தை 18 முறை மெல்ல வேண்டுமென்பார். இன்றைய அவசர யுகத்தில் நாம் என்ன செய்கிறோம்?

உண்ணும்போது மனநிலை, உடல்நிலை எப்படி இருக்க வேண்டு மென்றும் முதலில் எதை உண்ண வேண்டுமென்றும் படிப்படியாக எவ்வெவற்றை உண்டு நிறைவாக ரசம், மோர் சேர்த்துக் கொள்ள

வேண்டுமென்றும் கூறுவார். இவற்றிற்கு விஞ்ஞான விளக்கங்கள் உண்டு.

நாம் பெரும்பாலும் இனிப்பு, உறைப்பு, புளிப்பு மூன்றையுமே விரும்பி அளவுக்கு அதிகமாக உண்போம். கசப்பும் ஒரு சுவை, அறுசுவையுள் ஒன்று என்பதை மறந்துவிடுகிறோம். இந்த மூன்றும் நமக்குத் தேவையான அளவு உணவைவிட அதிகமாக உண்ண நம்மைத் தூண்டுகின்றன.

அதிக இனிப்பு, நீரழிவு, இரத்த அழுத்தம், இருதய நோய்க்கும், அதிக உறைப்பும், புளிப்பும், மூல நோய், இரத்த கடுப்பு, குடற்புண் போன்றவற்றிற்கும் காரணமாகின்றன.

எனவே இவற்றைக் குறைப்பதோடு, பாவற்காய், வல்லாரை போன்ற கசப்பு உணவுகளையும் மூன்று வேளை உணவிலும் சேர்த்துக் கொள்ளவேண்டும். இது உணவுச் சமநிலையைக் கொண்டுவரும்.

வளி முதலாகிய மூன்றும் மிகினும் குறையினும் நோய் செய்யும் என்கிறார் வள்ளுவர். உடலிலுள்ள வாத, பித்த, சிலேற்பங்கள் இருக்க வேண்டிய அளவிலிருந்து மிகினும் குறையினும் நோயுண்டாகும். இதுதான் நோய்க்குக் காரணம் என்பது சித்த வைத்திய முடிவு. எனவே இம்மூன்றும் தேவை. ஆனால் மிகவும் கூடாது குறையவும் கூடாது.

வாதமென்பது உடலின் குளிர்ச்சித் தன்மை, பித்த மென்பது உடலின் வெப்பத்தன்மை, சிலேற்பம் என்பது உடலில் உலவும் காற்றின் தன்மை. (பத்துவகைக் காற்றுக்கள்)

இவை தம் அளவில் மாற்றமடைவதற்குக் காரணம் பல. அவற்றுள் முக்கியமானது நாமுண்ணும் உணவு. தயிர், வெண்டி, தக்காளி, பழவகைகள், ஆட்டிறைச்சி, முளைக்கீரை போன்றவற்றை அடிக்கடி அதிகம் உண்டால் உடலில் குளிர்ச்சி கூடும். அது தொடர்பான சளி பிடித்தல் முதலிய இதயம் சம்பந்தப்பட்ட நோய்களும், இடுப்புப் பிடிப்பு, கைகால் உளைவு போன்ற வாத நோய்களும் வரக்கூடும். அகத்தியிலை, கோழியிறைச்சி, பெரிய மீன் வகைகள், முருங்கைக்காய், முருங்கையிலை போன்றவற்றை அடிக்கடி அதிகம் உண்டால் உடலில் வெப்பம் கூடும். அது தொடர்பான உள்வறட்சி, குடற்புண், மூலநோய் முதலியன வரக்கூடும்.

கிழங்குவகைகள், பருப்புவகைகள் எல்லாமே வாய்வுப் பதார்த்தங்கள் என்று சொல்லப்படும். இவை உடம்பிலே காற்றை (வாய்வு-gas) மிகச் செய்யும். இதனாலேயே பருப்புக்கறிக்கு மிளகு, சீரகம், உள்ளி சேர்க்கப்படுகின்றன.

இவைதவிர, நண்டு, இறால் கணவாய் போன்ற இரத்தமில்லா மச்சங்கள் வாய்வை மிகுவிப்பதோடு, இவை எல்லாமே சீனியின் அளவையும் கொழுப்பின் அளவையும் கூட்டி வாய்வை மிகுவித்துச் செரியாமையை உண்டாக்கி மலச்சிக்கலிருந்து எல்லாவித நோய் களையும் உண்டாக்குகின்றன.

உணவின் ஏற்ற இறக்கத்தினால், இரத்தத்தின் சமச்சீர்குலைந்து ஏற்ற இறக்கம் தோன்றுகிறது.

இரத்தத்தில் சீனி கூடினாலும் நோய்; குறைந்தாலும் நோய்; கொழுப்புக் கூடினாலும் நோய்; குறைந்தாலும் நோய்வரும். எனவே மிகினும் குறையினும் நோய் செய்யும். மண் பரவு கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம். கருணைக் கிழங்கில் உண்மையான கருணை, சக்களத்திக் கருணை என மற்றொன்று உண்டு. சட்டிக் கருணை சக்களத்தியாகும். பொன்னாங் கண்ணி என்பது, இதனை உண்டால், உன் உடல் பொன் ஆம் காண். நீ இதைக் காண்பாயாக என்பது பொருள். இதிலும் சக்களத்தியுண்டு. கடைகளில் விற்பது சக்களத்தியே பொதுவாகக் காய்கறிகளிற் பிஞ்சுகளே உடல் நலத்திற்கு ஏற்றவை. மலிவு, பொலிவு பார்ப்பது தவறு.

உண்ணுதற்குரிய கோழி, கேராத பேடு, கூவாத சாவல் ஏனையவை மலிவாகவும் பொலிவாகவும் இருக்கலாம். உணவுக்கு ஏற்றவையல்ல.

காலையுணவு சத்துக் கூடி அளவு குறைந்தும் மதிய உணவு இரண்டும் சம அளவாகவும் இரவு உணவு இரண்டும் அளவிற் குறைந்தும் இருக்க வேண்டும்.

காலையில் மச்சம், மாமிசத்தைத் தவிர்ப்பது நல்லது. இரவில் தயிர், இஞ்சி, கீரை, பாகற்காய் உண்ணக்கூடாது.

எண்ணெய் தேய்த்துத் தோயும் போது, தயிர் முதலிய குளிர் உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. அன்று பகலுறக்கம் தவிர்க்க வேண்டும். மதிய உணவாக எல்லாவற்றையும் கொள்ளலாம்.

திருமுருகாற்றுப் படை ''நண்பகல் பலவுடன் கழிந்தவுண்டியர்'' என முருகன் அடியாரை வருணிக்கின்றது. நண்பகலுக்கு உரைவிளக்கம் தந்த நச்சினார்க்கினியர், எவ்வித உணவும் ஏற்றற் குரிய நல்ல பகற் பொழுது எனக் கூறினார். பகல் என்பது காலையையும் மாலையும் பகுக்கும் நேரமாகிய மதியமாகும்.

எண்ணெய் முழுக்குச் செய்தோர் பகலுறக்கத்தோடு உடலுறவையும் தவிர்க்க வேண்டும். இரவு உணவுண்டு 5 மணித்தியாலங்களுக்குப் பின்பே உடலுறவு கொள்ள வேண்டும்.

பொதுவாக வாழ்க்கை விதிகள், உணவு ஒழுங்குகள் எல்லோருக்கும் தெரியும். தெரிந்தும் பின்பற்றுவதில்லை. விதியை மீறியவர்களுக்குத் தண்டனை கிடைத்தே தீரும்.

உடலின் உள் உறுப்புகள், பொருந்தா உணவினால் செயல் குன்றுகின்றன. நாளடைவில் செயலிழக்கின்றன.

வாத, பித்த சிலேற்பங்களை மிகுவிக்கும் அதிக இனிப்பு, அதிக கொழுப்பு, அதிக உறைப்பு, அதிக உப்பு முதலிய உணவுகளைச் செரிக்கப் பண்ணுவதற்காக கணையங்களாகிய பைங்கிரியா, ஈரல், பித்தப்பை முதலியன நீரைச் சுரந்து களைத்துச் செயலிழக்கின்றன.

நோய் கண்ட நிலையில் ஆங்கில வைத்தியம் செயற்கை முறைகளால் தற்காலிக தீர்வைக் காண்கின்றது. இரத்தத்தில் தேங்கி நோய் செய்யும் இனிப்பு, கொழுப்பு, உப்பு முதலியவற்றை வெளி யேற்றமுடியாமல் இதயம் திணறுகின்றது. அவற்றை வெளியேற்றிச் சமன்படுத்த மருந்து உட்கொள்ளப்படுகிறது. மருந்து தற்காலத் தீர்வோடு பக்க விளைவுகளையும் ஏற்படுத்துகிறது.

நோய் கூடக்கூட மருந்தின் அளவையும் கூட்டவே வைத்தியர் வழிகாட்டுகின்றார்.

> *''நோய் நாடி, நோயின் முதல் நாடி அது தீர்க்கும்*
> *வாய்நாடி வாய்ப்பச் செயல்''*

என வள்ளுவர் காட்டும் சித்த வைத்தியத்தை யாரும் பின்பற்றுவ தில்லை.

நோயை ஆராய்ந்து அதற்கு மூல காரணம் எது என ஆராய்ந்து அந்த மூலகாரணத்தைத் தீர்க்கும் வழி எது என ஆராய்ந்து வாய்ப்பச்

செயற்பட்டால் நோய்தீரும். இதை விடுத்து நோய்க்கு வைத்தியம் செய்தால், மூலக்கூறு மற்றொரு வகையால் வந்து நோய் செய்யும்.

குளிரை மிகுவிக்கும் உணவாலும் வேறு காரணங்களாலும் உடலில் குளிர் மிகுந்த போது, மூக்கிலிருந்து நுரையீரல் வரை செல்லும் பாதையில் மூச்சுக் காற்றோடு செல்லும் ஒவ்வாமைப் பொருட்கள் இதயத்தையோ, நுரையீரலையோ அடையாதபடி தடுக்க இயற்கை யமைத்த சளி போன்ற திரவம் நுரைத்து, தும்மல், இருமல் தோன்றி, படிந்து ஒவ்வாமைகளைச் சளியோடு வெளியேற்ற முயல்கிறது.

நோயாளி, தும்மி, இருமி, சீறி மூச்சுத் திணறும்போது உடலில் வெப்பம் கூடுகிறது. தலையிடியும் காய்ச்சலும் தோன்றுகின்றன. இந்த நோயைத் துவக்கத்தில் சளியை வெட்டியெடுக்கும் மருந்தை விடுத்துக் காய்ச்சிவிடும் மருந்துகளைக் கொடுத்தால் நோயடங்கி, நுரையீரல், இதயம் எல்லாம் பரவி விடுகிறது. நோயாளி மூச்சுவிடத் திணறும் நிலை ஏற்படுகிறது.

ஆரம்பத்தில் பீனிசமாக இருந்த நோய், விரைவாக முற்றி விடுகிறது. இதற்கும் நோய் முதல் நாடி வைத்தியம் செய்யாமல் தற்காலிக வைத்தியம் செய்தால், குளிர் கண்டபோதெல்லாம், உதாரணமாகக் குளிர்பானம் தக்காளி, நண்டு, இறால் முதலியவற்றை அருந்திய போது கூடத் தொய்வு தொடங்கிவிடும். இது தொடர்ந்தால் அவ்வப்போது வந்த தொய்வு, ஆண்டு முழுவதும் இரவு பகல் வருத்தும் ஈளையாக மாறிவிடும். தொய்வின் மூலக்கூற்றை அறிந்து வைத்தியம் செய்யாவிட்டால், அந்த நீர், காலில் எக்சிமா எனும் கிரந்தியாக மாறிச் சொறியச் சொறிய நீர் சுரந்து வேதனை தரும். இல்லையேல், கண்ணில் படலமான அந்த நீர் படிந்து கட்டிராக் எனும் நோயாகத் துன்பம் தரும்.

சித்த வைத்தியத்தில் பத்தியம் என்பதும் ஒரு மருந்துதான். பத்தியம் இல்லையேல் மருந்தால் பயனில்லை. இச்சா பத்தியம் என்பது உடல் இச்சைகளை அடக்குவதுதான்.

பொரியல், தோசை முதலியவற்றைச் சாப்பிட்டால் தண்ணீர் குடிக்கக்கூடாது. வெந்நீர் குடிக்க வேண்டுமென்பதும் பத்தியம்தான்.

பத்தியக் கறி, உப்புக் கஞ்சித் தெளிவு, கொத்தமல்லித் துவையல் முதலியனவெல்லாம் பத்திய உணவுகள்.

தேங்காயில்லாமலும் ஒரு சமையலா?

நன்றாக முற்றின ஊர்த்தேங்காயில் கட்டிப்பால் பிழிந்து, கப்பிப் பாலில் கொழுத்த ஆட்டிறைச்சியைச் சரக்குகளோடு வேகவிட்டு, கட்டிப்பாலையும் சேர்த்து எண்ணெய் பிறக்க வேகவிட்டுத் துவட்டி எடுத்தால் என்ன சுவையாகயிருக்கும். பத்து வீட்டுக்கு மணக்கும். உண்ட கை பத்து நாளைக்கு மணக்கும். ஆட்டிறைச்சியிலும் கொழுப்பு, தேங்காய்ப்பாலிலும் கொழுப்பு எவ்வளவு கொழுப்பு, உடலுழைப்பு இல்லாத ஒருவன் இதனை அடுத்தடுத்து அதிகமாக உண்டால் அதனைச் செரிக்கப்பண்ண ஈரல் எவ்வளவு உழைக்க வேண்டும்? எத்தனை நாளைக்குத்தான் ஈரல் உழைப்பது? அது களைத்துப் போய்விடுகிறது. செரிக்காத கொழுப்பு, உடலில் சேர்ந்து உடல் பெருக்கிறது. இரத்தத்தில் சேர்ந்து இரத்த ஓட்டத்தைத் தடை செய்கிறது. இரத்த ஓட்டத் தடையை நீக்க, இதயம் வேகமாக வேலை செய்கிறது. அதுவும் களைத்துப் போகிறது.

மனிதனுக்கு மூன்று நேரமும் இறைச்சி இல்லாமல் சோறு இறங்காதே! காலையிலும் மதியத்திலும் புலால் சேர்ந்த பிஸ்சா, பேகர்களை யுண்டான். இரவு வீட்டுக்கு வந்தவுடன், உறைபனியில் கிடக்கும் ஆட்டிறைச்சியை அரிந்து, மிளகாய்த்தூளும் தேங்காய்ப்பாலும் சேர்த்து அவித்துச் சோற்றோடு ஒரு பிடி பிடிக்கிறான். மரக்கறி எதுவும் இல்லை. மரக்கறி என்றால் அதுவும் உருளைக்கிழங்கும் பருப்பும்தான்.

இத்தகைய உணவு, 30 வயதுக்கு முந்தியே ஒருவனை இருதய நோயாளியாக்குகிறது.

முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்று ஒரு பொருளைத் தப்பாமற் சார வேண்டிய இளைஞன், இருதய நோயாளியாகிறான்.

குழம்பில் தேங்காய், வெள்ளைக்கறியில் தேங்காய், தீயலில் தேங்காய், வற்றல், வதக்கல், பிரட்டல், துவட்டல், அரையல், துவையல், வறுவல் எல்லாவற்றிலுமே தேங்காய்தான்! சொதியா, பால்ச்சொதி.

நாக்கைத் தீட்டிக் கொண்டு தேவைக்கு அதிகமாக உண்டு உழைப்பின்றி வைத்தியரைத் தேடுகிறான் தமிழன்.

நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மாந்தரை (தமிழரை) நினைந்துவிட்டால் என்ற ஆதங்கத்தால் இந்த நூலை எழுதுமாறு நான் தூண்டினேன்.

ஊதுற சங்கை ஊதுவோம். விடியிற நேரம் விடியட்டும் என நான் ஊதின சங்குகள் பல.

புற ஆளுமையும் உள் ஆளுமையுமுள்ள, புற நாகரிகமும் உள் நாகரிகமுமுள்ள (External and Internal Personality and External and Internal Culture) பண்டைத் தமிழனை எண்ணிப் பார்க்கிறேன். இன்றைய தமிழனோடு ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.

நெஞ்சு பொறுக்குதில்லையே! நெருப்புச் சினந்தவிர்ந்தன்ன நிணந்தயங்கு.

கொழுங்குறை (சாம்பல் பூத்த தணல் போன்ற கொழுப்போடு கூடிய கொழுத்த இறைச்சித் துண்டுகள்) கொண்டு சோறு வேறென்னர் ஊண்துவை அடிசில் எனப்படும் புரியாணியை-புலவை 2000 ஆண்டு களுக்கு முன்பே உண்டவன் தமிழன்.

ஏலம், கருவா வணிகம் செய்யவந்த இஸ்லாமியர், தமிழினிடமிருந்து இந்த உணவின் செய்முறையைப் பெற்று தமது போற் காட்ட 'மொகல் றெஸ்ரூறன்டுகளில்' புலவ் (புலால் புலவு என்பன இறைச்சியை உணர்த்தும் தூய தமிழ்ச் சொற்கள்) பிரியாணி முதலியவற்றை வாங்கி நாம் உண்ணுகின்றோம்.

உடலுழைப்புள்ளவர் உண்ண வேண்டிய உணவை, இல்லாதவர் பழக்கத்தால் உண்டு, நோயாளியாகின்றனர். மேலும் 40 வயதுவரை உள்ள உணவுப் பழக்கத்தை 40 வயதிற்குப் பின்பும் பழக்கத்தால் தொடர்வதும் நோய்க்குக் காரணமாகும்.

குழந்தைகள், சிறுவர், இளைஞர், நடுத்தர வயதினர், முதியோர் அடங்கிய ஒரு குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் பொருத்தமான உணவு அளிக்கப்படவேண்டும்.

பெரும்பாலும் எல்லோருக்கும் ஒரே வித உணவே அளிக்கப் படுகிறது. பொருந்தாத இவ்வித உணவும் உடல் நலக் குறைவுக்கு ஒரு காரணமாகும்.

உணவுப் பொருட்களைச் சமைப்பதற்கு முன்பே, அப்பொருட்களுள் இனிப்பு, உறைப்பு, உப்பு, புளிப்பு முதலியன மாச்சத்து, புரதச் சத்து, உலோகச் சத்துக்களோடு விரவிக் கிடக்கின்றன. அவை உடலுக்குத் தீங்கு விளைவிப்பதில்லை. ஆனால் நாம் மேலும் சுவையூட்டுவதற்காக, உறைப்பு, உப்பு முதலியவற்றைச் சேர்த்துக் கொள்கிறோம்.

கருப்பஞ் சாற்றிலுள்ள இனிப்பு, தீமையற்றது. அதனை வெள்ளைச் சீனியாக்கி உண்ணும்போது உடலுக்கு நஞ்சாகிறது. தவிட்டோடு உண்ணும்போது, அரிசியிலுள்ள மாச்சத்து உடல் நலத்துக்கேற்றது. தவிடு நீக்கிய அரிசி, நோய்க்குக் காரணமாகிறது.

உப்பை வறுத்தும், தேங்காயைச் சுட்டும் புளிக்குப் பதிலாகக் கொறக்காய்ப் புளி சேர்த்தும் (சிங்களச் சகோதரரிடம் இது பரவலாக உண்டு) மோரைத் தாளித்து முறித்தும் உண்பதை யாழ்ப்பாணத்துச் சமையலில் காணலாம்.

தேங்காயில்லாமல் சமையலா? வாயிலே வைக்க முடியுமா? என்று கேட்பவர்களுக்கு இந்தச் சமையல் நூலை ஒரு சவாலாகத் திருமதி லக்சுமி எழுதியுள்ளார்.

பத்துப் பன்னிரண்டு தென்னைமரம் கேட்ட பாரதியார்போல், வளவெல்லாம் தென்னைமரம் காய்த்துக் குலுங்கும் ஈழத்தில் தேங்காய் வாழ்வோடு இரண்டறக்கலந்துவிட்டது.

தேங்காயால், இதய நோய் வருமென்பது, தாமுற்பத்தி செய்யும் எண்ணெய் வகைகளுக்குச் சந்தை வாய்ப்பைப் பெறுவதற்காகச் சில நாடுகள் செய்யும் பொய்ப்பிரச்சாரம் என்பது இலங்கை வாழ் பிரபல விஞ்ஞானி ஒருவரது கருத்தாகும்.

உடலுழைப்புக் குறைந்த நம்மவர் எதிலும் மிதமாக இருப்பது நல்லது. தேங்காயை முற்றாக விட முடியாவிட்டாலும் மிதமாக உட்கொள்ள முயலவேண்டும்.

இந்த நூலின் ஆசிரியை, இந்த வயதிலும், நீரழிவு, இரத்த அழுத்தும், இதய நோய் இன்றி இருப்பதற்குக் காரணம் அவரது உணவுப் பழக்கமேயாகும். உணவு ஒழுங்கினால் நோயற்ற வாழ்வு வாழும் ஒருவர் எழுதிய நூலுக்கு உணவு ஒழுக்கின்மையால் நோயுற்ற வாழ்வு வாழும் நான் அணிந்துரை வழங்கப் பொருத்தமானவன் எனக் கருதுகின்றேன்.

நூலாசிரியர் அனுபவ சமையற்குறிப்பெழுத, நானும் அனுபவ அணிந்துரை எழுதியுள்ளேன்.

ஈழத்தில் ஆட்சி செய்த வன்னியர் குலம், சூழ்ச்சியினால், ஆட்சியை இழந்தபின்னும் சித்த வைத்தியத்திலும் விவசாயத்திலும் சிறந்து விளங்கியது. தமிழினத்தைப் பொருத்தவரை, சித்த வைத்தியம்,

விவசாயம், சமையல், சமயம் எல்லாமே அனுபவத்தின் விளைவாகும். இந்தியாவில் செட்டிநாட்டுச் சமையல், நாடார் சமையல், உடுப்பிச் சமையல், ஐயங்கார் சமையல் என்பன போல் ஈழத்திலும் கிழக்கு மாகாணச் சமையல், வடக்குமாகாணச் சமையல் என்றும் வடக்கு மாகாணமாகிய யாழ்ப்பாணத்தில், பண்டாரங்களும் சைவங்களும் சமையற்கலையிற் தேர்ந்தவர்கள். மேலும் தீவுப்பகுதி, வடமராட்சி முதலிய பகுதிகளில் சமையற்கலை சிறந்தோங்கி வளர்ந்திருக்கிறது. தீவுப் பகுதியினர், இன்றும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் மிகச் சிறந்த உணவு விடுதிகளை நடத்தி வருகின்றனர்.

பலர் வெந்ததைத் தின்று விதி வந்த போது சாவோமென நினைத்த போதும் உண்டார் மேனியைக் கண்டால் தெரியுமென்பதற்கேற்பச் சிலர் சுவையுணவுப் பிரியராக வாழ்கின்றனர். அவர்களாலேதான் சமையற்கலை வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

'ஐந்தும் மூன்றும் சரியாயிருந்தால் அறியாப் பெண்ணும் கறி சமைப்பாள்' என்று சொல்வார்கள். பல வீடுகளில் ஐந்தறைப் பெட்டி யுண்டு. இரவு உணவுக்குப் பின் அக்கம் பக்கங்களிலுள்ள பெண்கள் ஒரு வீட்டு முற்றத்தில், நிலா வெளியிற் கூடியிருந்து சமையற் பக்குவங்களைப் பற்றி வாயில் நீரூறக் கதைப்பார்கள். அந்தக் காலத்து லேடீஸ் கிளப் இவைகளே.

ஒருமுறை நெடுந்தீவிற் சொற்பொழிவாற்றிவிட்டு, நள்ளிரவில் மோட்டார் படகில் புங்குடு தீவுக்கு வந்து, கரையில் நான் சென்ற காரில் திரும்பி வரும்போது, யாழ்நகருக்கு அண்மையிலுள்ள பண்ணைப் பாலத்தைக் கடக்க அக்கரையில் காத்து நிற்க வேண்டி யிருந்தது.

நேரம் விடிகாலை 5 மணியிருக்கும். பண்ணைக் கடலில் வலை வீசிய சில மீனவர், எமக்காகக் கடற்கரை மணலைத் தோண்டி, நீளவாக்கில் வெட்டிச் சுத்தம் செய்த மீனின் உட்புறத்தில் உப்பு, மசாலைத் தூள் தடவி, இலையினால் சுற்றி தோண்டிய கிடங்கில் இட்டு மணலால் மூடி, மேலே சிறு விறகில் தீமூட்டி எரித்தனர். சிறிது நேரம் ஆறவிட்டு, மணலைத் தோண்டி, பக்குவமாக வெந்த மீனை அந்தக் கங்கைக்கரை வேடன், அந்த இராமனுக்கு அளித்தது போல் எமக்களித்து உபசரித்தனர். அந்த விடிகாலைக் குளிர்காற்றில் இப்படியும்

ஓர் அமுத உணவா சுடச்சுட, காரசாரமாக, என்னே அன்பு! இந்த ஏழை மக்களிடம். ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் இன்று இவ்வித உணவு என்ன விலை விற்கிறது. அந்தச் சுவைக்கு இது ஈடாகுமா?

இன்ன காலத்தில் இன்னின்ன காய்கறிகள் சுவையானவை, உடல் நலத்திற்கேற்றவை என யாழ். வேளாளரும் (வேளாண்மை செய்வோர்) இன்னின்ன காலத்தில் இன்னின்ன மீன் வகைகள் சுவையானவை என யாழ். மீனவர்களும் எடுத்துச் சொல்வர். மேலும் தாய்மார்களுக்குப் பால் பெருக்கும் மீன்கள், கிரந்தி தரும் மீன்கள் இவை இவை எனக் கூறுவதோடு, கருவுற்றிருக்கும்போது இன்ன இன்ன காய்கறிகள், மீன்வகைகள் உண்ண வேண்டும் அல்லது உண்ணக்கூடாதெனவும் கூறுவர்.

வடகடற் சுறாவும், புன்னாலை இறாலும் ஓராவும், நகவாந்துறைக் கொய்மீனும் முல்லைத்தீவு ஊசிக்கணவாயும், மட்டக்களப்பு மட்டை இறாலும்,நாகர் கோயில் நெத்திலியும் என ஊர்ப் பெயரால் மீனும் சமையலும் புகழ் பெற்றுள்ளன.

வடமராட்சியிலுள்ளவர்கள், கணித வல்லுநர்களாய்ப் புத்தி சீவிகளாய்ப் பெரும்பதவி வகிப்பதற்குக் காரணம் அவர்கள் உண்ணும் மீன் உணவு, அதிலும் நெத்திலிமீன் என்று சிலர் சொல்வது வழக்கம்.

சுண்ணாம்புச் சத்தும் உலோகச் சத்தும், புரதமும் நிறைந்த நெத்திலி மீன் உணவு மூளை வளத்தைப் பெருக்குவதில் ஆச்சரியமில்லை.

தென்னிந்தியத் திருக்கோவில்கள், பிரசாதம் எனப்படும் சமையற் கலையை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. திருப்பதி லட்டு, சிதம்பரம் சர்க்கரைச் சாதம், திருவரங்கத்துப் புளிச்சாதம், பழநிப் பஞ்சாமிர்தம் முதலியன உலகப் பிரசித்தம்.

அமெரிக்க அரசாங்கத்தின் உதவித் தொகை பெற்ற சில வெள்ளை மாணவியர், தென்னந்தியத் திருக்கோயிற் பிரசாதங்களைக் கற்றுத்தேறிச் சென்றுள்ளனர்.

இங்ஙனமே ஈழத்துத் திருக்கோவில்களும் இறைவனுக்குச் சுவை யான பிரசாதங்களைப் படைத்துவருகின்றன.

முருகன் கோவில்கள், சிறப்பாகக் கதிர்காமக் கந்தன் கோவிலில் மாவிளக்கு என்னும் தேனும் செந்தினையும் சேர்த்துச் சுட்ட அப்பம், பிள்ளையார் கோவில்களில் கற்கண்டு, குங்குமப் பூ, ஏலக்காய்ப்

பொடி சேர்த்துச் செய்யும் மோதகம், வயிரவர் கோவில்களில் உரலில் இடித்துச் சுடப்படும் வடை மாலையும் நினைவிற் கொள்ளத்தக்கன.

சித்திரை மாதத்தில் எல்லாக் கோவில்களிலும் வார்க்கப்படும் சித்திரைக் கஞ்சியும் மிக்க சுவையான உணவாகும். இது எல்லாவித காய்கறிகளும் அரிசியும் சேர்த்துச் செய்யப்படும் நீர்த்த உணவாகும்.

கருப்ப நீர்க் கஞ்சியும், இலுப்பைப் பூ உருண்டையும் சிறுவர் விரும்பியுண்ணும் உணவாகும்.

இராசவள்ளிக் கிழங்கையும் மறந்துவிடமுடியாது - பனாட்டு, யாழ்ப்பாணத்தார் உணவில் முக்கிய இடம் பெற்று வந்துள்ளது. பாணிப்பனாட்டும், பனாட்டும், மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

யாழ்ப்பாணத்துச் சமையலின் சுவைக்கு அங்குள்ள கிணற்று நீர், முக்கிய காரணமெனச் சொல்லப்படுவதில் உண்மை இருக்கிறது. பனம்பழத்தைச் சுட்டுப் புளிக் காடியுடன் சாப்பிடுவதும் பழஞ் சோற்றைப் பனாட்டுடன் சாப்பிடுவதும் வழக்கமாயிருந்திருக்கிறது. கருவாட்டைச் சுட்டு, வெங்காயம், பச்சை மிளகாய், எலுமிச்சம்புளி சேர்த்துச் செய்யும் சம்பல் தொடு உணவாகப் பயன்படுத்தப்பட்டது.

புலோலி, பருத்தித்துறைப் பகுதிகளில் பிஸ்கட் போலவே செய்யப்படும் தட்டை வடையும், ஐந்து தொடு கறியோடு சுடப்படும் தோசையும், பாலப்பம், சர்க்கரை அப்பம், முட்டை அப்பம் முதலியனவும் சுவையான உணவுகளாகும்.

புலோலியில் வடிக்கப்படும் ஊற்றுப் பெட்டி எண்ணெயெனப்படும் நல்லெண்ணெய் பருவமடைந்த பெண்களுக்கு ஏற்ற உணவாகும். இவையேயன்றி, வடமராட்சியில், ஆலங்காய்ப்பிட்டு, உளுத்தங்களி, பொரிவிளாங்காய், எள்ளுமா, சில்லுக்களி என்பனவும் சிறந்த உணவுகளே.

நாங்கள் சிறுவர்களாயிருந்தபோது, மாலை நேரத்தில் நாங்களுண்ட சிற்றுண்டிகள், உளுத்தங்களி, பொரிவிளாங்காய், எள்ளுமா, எள்ளுருண்டை, சில்லுக்களி, இலுப்பைப்பூ இடித்த உருண்டை, பனங்கிழங்கு, உள்ளி, மிளகு சேர்த்து இடித்த உருண்டை, ஆலங்காய்ப் பிட்டு, பாசிப்பயறு அவித்துத் துவைத்த உருண்டை, புழுக்கொடியல் மாவுருண்டை, பனங்குருத்து, தென்னங்குருத்து, சுட்ட, அவித்த

பனங்கிழங்கு, சுட்ட, அவித்த மரவள்ளிக் கிழங்கு, பயற்றம் பணியாரம், சீனிஅரியதரம், பால் உறட்டி, வடை, முறுக்கு, சீடை, சிப்பி, இராச வள்ளிக் கிழங்கு, சிறு கிழங்கு, நுங்கு, பனாட்டு இப்படி எத்தனையோ, எத்தனையோ பணியாரங்கள்.

நுங்குகளைச் சிவித் தோண்டித் தோண்டிக் குடித்து ஆள்காட்டி விரல் வீங்கிச் சிவந்துவிடும். சீக்காய்களைக் கூடக் கடித்து விழுங்கி விடுவோம்.

மாம்பழக் காலத்தில் கறுத்தக் கொழும்பானும் அம்பலவியும் சாப்பிட்டுச் சாப்பிட்டு, சிறுவர்கள், இளைஞர்களின் கன்னங்கள் சிவந்து பொலிவுடன் விளங்கும். எத்தனை மாம்பழங்கள் சாப்பிட்டாலும் ஒரு மாங்கொட்டை சூப்பாது பத்தியம் தீராது. ஒரு மாம்பித்துச் சாப்பிட்டால், போதும் மாம்பழத்தால் ஒரு தீங்கும் வராது.

பெரிய கூழன் பலாப்பழத்தை 2,3 இளைஞர்கள் ஒரு மூச்சில் பிடித்துவிடுவார்கள். இதற்கும் ஒரு பலாக்கொட்டை சாப்பிட்டால் போதும்.

இங்ஙனம் விதம் விதமான சமையல்களையும் பணியாரங்களையும் படைத்து உண்ட கைகள், இன்று பாணுக்காக ஏங்குகின்றன. கோடை வெயிலைப் பயன்படுத்தி எத்தனை வித ஊறுகாய்கள் வடகங்கள், மோர் மிளகாய்கள் செய்து பானையிற் போட்டு மூடிக் கட்டி மாரி காலத்துக்காக வைத்திருப்பார்கள். இலந்தைப் பழத்தில் கூட வடகம் செய்வார்கள்.

அந்த யாழ்ப்பாணத்தையும் அந்தச் சமையலையும் இந்த நூல் என்னை எண்ணவைக்கின்றது.

வீரத்தின் விளைநிலமாக விளங்கும் ஈழம், தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தலைமை தாங்கும் நாள் வெகுதூரத்திலில்லை. அந்நாளில் ஈழம் உலகிற்கு வழங்கிய - வழங்கப்போகும் கலைகளில் சமையற்கலையும் ஒன்றாக இருக்கும்.

யாழ்ப்பாண உணவகங்கள் (Jaffna Restaurants) மாக்டொனால்ட்டு மாதிரி உலகைக் களிப்பூட்டும். சென்றதினி மீளாது, மாற்றமும் தவிர்க்க முடியாதது. திருமதி லக்சுமி தன் பங்களிப்பைச் செய்துள்ளார். விடுபட்டவை நூற்றுக் கணக்கானவை. தேங்காயை நீக்கிவிட்டதால்

நீங்கிவிட்ட சமையற்பாகங்கள் பற்பல. அடுத்து வரும் பதிப்புகளில் விடுபட்டவை நிரப்பப்படும் என நம்புவோம்.

நிறைவாக, உணவுக் கட்டுப்பாடே நோயற்ற வாழ்வுக்கு வழி என்பது வள்ளுவர் வழி.

நோய்களும் மருந்துகளும் அவற்றிற்கேற்ற உணவுகளும் பெருகிவிட்டன. ஆனால் நோய் குறையவில்லை, மாறாகப் பெருகுகின்றன.

தாய்ப்பாலின் மகத்துவத்தைக் குறை கூறிய வைத்திய உலகு இன்று பாராட்டுகிறது. தாய்ப்பால் நோயணுகா உடல் நலம் தருவதோடு, மகளிர்க்கும் ஆடவர்க்குமுரிய (மடம், அச்சம், ஆண்மை ஓர்ப்பு முதலிய) குண நலன்களைத் தருவதுமாகும். சிறப்பாக வீரம் சேர்ப்பது தாய் முலைப்பாலடா என்றான் பாரதி.

இன்று வைத்தியர்கள் பெரும்பாலும் வியாபாரிகளாகி விட்டார்கள். ஒரு காலத்தில் தொண்டாகச் செய்யப்பட்ட வைத்தியம் வியாபாரமாக மாத்திரமல்ல, கள்ள வணிகமாக மாறிவிட்டது. மருந்தும் கொடுத்து, குடிநீரும் போட்டுக் கொடுத்து, நேரமாகிவிட்டதால் உணவும் கொடுத்துத் தங்க இடமும் கொடுத்துக் காலையில் பஸ்சுக்குச் சில்லரையும் கொடுத்த சித்த வைத்தியனான என் தந்தையை இன்று நினைக்கின்றேன்.

''எந்த நேரமும் பசிக்கு உணவு கொடுக்கத் தயாராயிரு. எந்த நேரமும் நோய்க்கு மருந்து கொடுக்கத் தயாராயிரு. எந்த நேரமும் வறிய சிறுவரின் கல்விக்கு உதவத் தயாராயிரு'' என்று என் தாய்க்கு அறிவுறுத்திய என் தந்தையை நினைக்கிறேன். அவருக்கே இவ்வுரையை அர்ப்பணித்துத் தொடரும் நினைவுகளால் அலையும் மனதை அடக்கி அமைகின்றேன்.

பொறுமையைச் சோதித்துவிட்டேன். பொறுத்தருள்க.

**வித்துவான் க.ந.வேலன், இலண்டன்**

**(நன்றி: யாழ்ப்பாணத்துச் சமையல்: சைவ அசைவ உணவு வகைகள். லக்சுமி. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, தணிகாசலம் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, 2000).**

# முருகப் பெருமானின் விரதங்களும் விழாக்களும்

சமய வாழ்க்கையில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர்கள் எங்கும் முருகன் எதிலும் முருகன் என்ற நம்பிக்கையுடன் முருக வழிபாட்டில் ஈடுபடுவர். தேவர் குலமும், மனித குலமும் உய்வடைய முருகப் பெருமானின் தோற்றமும் விழுமிய துணையாக அமைந்தது. பண்டைய தமிழ் இலக்கியங்கள் முருகனைக் குறிஞ்சித் திணைக்குரிய தெய்வமாகப் போற்றினாலும் அப் பெருமான் உலகம் முழுவதும் நிரம்பியிருக்கிறான். அவனது திருவருள் எங்கணும் பரவி அருள் பாலிக்கின்றது. இயற்கை யழகுடன் கூடிய இடங்களில் அவனது கோயில்கள் எழுந்துள்ளன. காடு, மலை, சோலை, அரங்கம் எங்கணும் அவனுக்குக் கோயில்கள் உண்டு. அதுவே முருகனது தெய்வீகப் பெருமைக்குச் சான்று. மக்களுக்கு உயிர்த்துணையாக விளங்கும் கடவுள் முருகப்பெருமான், அம்மை அப்பனோடு எழுந்தருளி அருள் பாலிக்கும் அற்புதத் தெய்வம்.

## வாழ்க்கையும், விரதங்களும், விழாக்களும்

உலகில் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடி சைவத் தமிழ்க் குடி. நாகரீகத்திலும், பண்பாட்டிலும் ஒழுக்க நெறியிலும் தலை சிறந்தவர்களாக சைவத் தமிழ் மக்கள் வாழ்ந்தனர். புராதன காலம் தொட்டே கடவுள் வழிபாடும், சமய சடங்குகளும், விரதங்களும் அவர்கள் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து ஒன்றியுள்ளன.

மனிதனாகப் பிறந்தால் மட்டும் போதாது, பண்பாட்டோடு ஆசார அனுட்டானங்களோடு வாழ வேண்டும். அதற்கு வழிவகுப்பது விரதங்களும், விழாக்களுமாகும். யக்ஞம், தபஸ் முதலிய கர்மங்களை செய்ய முடியாதவர்களுக்கென்றே விழாக்களும், விரதங்களும் ஏற்பட்டன. தீய சக்திகள், தீய குணங்கள் ஒழி படவும், அமைதி, மனத்தூய்மை, தெய்வ வழிபாடு, மன ஒருமை, மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படவே விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள் கைக் கொள்ளப்பட்டன.

மனம், மொழி, மெய் மூன்றையும் கட்டுப்படுத்தி ஒருங்கு சேரச் செய்து இறை சிந்தனையை வளர்த்து இறைவன் அருகே எம்மை அழைத்துச் செல்பவை விரதங்கள். நமது வாழ்க்கையில் விரதங்களும், பண்டிகைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் அவ்விரதங்கள், பண்டிகைகள் பற்றி முறையாகத் தெரிந்து கொண்டவர்கள் மிகச் சிலரே. இவை பற்றிய விபரங்களை அறிய ஆர்வமிருந்தும் எங்ஙனம், எங்கிருந்து அறியலாம் எனத் தெரியாது தவிப்போர் பலர். விரத கதைகள் அநுஷ்டான முறைகள் நோக்கங்கள் முதலியன விபரங்களைக் கூறும் நூல்கள் இன்று கிடைப்பது அரிது.

விஞ்ஞான முறைப்படி பார்த்தாலும் குடும்ப நலம், உடல் நலம், பரம்பரை விசுவாசம், தன்னம்பிக்கை, துணிவு, பணிவு பக்தி ஆகிய வற்றை அதிகமாக்கி வாழ்வில் ஒழுக்கத்தையும், நேர்மையையும் இவை அதிகமாக்குகின்றன.

ஒவ்வொரு விரதமும், ஒவ்வொரு கோணத்தில் ஆயுள் விருத்தியையும், மனித உடல் நலத்தையும் ஆதாரமாகக் கொண்டி ருக்கின்றன. எல்லோராலும் எல்லா விரதங்களையும் ஏற்றுக் கொள்ள இயலாவிடினும், ஏற்றுக் கொண்டு பின்பற்றும் விரதங்கள் எப்படிச் செயலாற்ற வேண்டும், அதனால் ஏற்படும் தெய்வ நன்மைகள் என்ன அதனால் ஏற்படும் விஞ்ஞான நன்மைகள் என்ன என்பதையெல்லாம் நாம் அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மாருகக்குருட்டாம் போக்கில் பின்பற்றக் கூடாது. இன்றைய இளைய சமுதாயம் கேட்கும் கேள்விகளுக்கு நாம் விடை பகரக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

விரதங்களை மேற்கொள்வதால் தெய்வ நம்பிக்கை அதிகமாகிறது. ஒழுக்கமும் கட்டுப்பாடுகளும் ஏற்படுகின்றன. உடல் ஆரோக்கியம் பெறுகிறது. ஆயுள் அதிகமாகிறது பிரச்சினைகள் குறைகின்றன. தனிமனிதன் நன்மை பெறுவதனால் அவன் குடும்பம் நன்மை பெறுகிறது. இரக்க சிந்தனை, தருமம் செய்யும் குணம் ஆகியவை வளருகின்றன. விஞ்ஞான முறைப்படியோ, அஞ்ஞான முறைப்படியோ இருள்ஞான முறைப்படியோ ஆராய்ந்தாலும் விரதங்கள் நமக்கு ஒரு போதும் விரோதமான நிலைமைகளைத் தரவில்லை என்பது மட்டும் உறுதி.

விரதமென்றால் சங்கல்ப்பத்துடனும், உபவாச நியமங்களுடனும் கூடச் செய்யும் சத்கர்மா என்று பொருள். உபநயனத்தில் பிரம்மசாரிக்கு வேதமே விரதத்தைக் கூறுகிறது. ஸமாவர்த்த காலத்தில் வேதவிரதம் விதிக்கப்பட்டிருக்கிறது. யஞ்ஞத்தில் ஈடுபட்டவருக்கு சில விரதமுண்டு. இவை வேத விரதமாகும். நாம் ஆண்டு தோறும் அனுஷ்டிப்பது புராணவிரதமாகும். பண்டிகை என்றால் அதிக நியமமின்றி உற்சவ மாகச் செய்வதாம். விநாயக சதுர்த்தி முருகனின் தைப்பூசத் திருவிழா உற்சவமாகும். சங்கராந்தி (பொங்கல்) போன்ற சில பண்டிகைகளில் சூர்ய பூசை, தர்ப்பணம் முதலிய சில விரத நியமங்கள் உண்டு.

அவசியம் செய்தே ஆகவேண்டும் என்பது நித்யவிரதமாம். ஒரு பலனை நாடிச் செய்வது காம்ய விரதமாகும். சில நித்யமும், காமியமு மாகும். காம்யமென்றால் இத்தனை முறை விடாமல் செய்து உத்தியாயனமும் செய்ய வேண்டும்.

விரதங்களுள் சில நித்திய விரதங்கள் என்றும் வேறு சில காமிய விரதங்கள் என்றும் சொல்லப்படும். சில தேவைகளை முன்னிட்டு இறைவனிடம் நமது வேண்டுதல்களை முன்வைத்துக் குறிப்பிட்ட காலத்துக்கு அநுஷ்டித்து அதன் பின் உத்தியாபனம் செய்யப்படுவவை காமிய விரதங்கள். அவ்வாறு அல்லாமல் எதுவித பலன்களையும் எதிர்பாராமல் அமாவாசை, பூரணை (பறுவம்) முதலிய விரதங்களைத் தொடர்ந்து அனுஷ்டித்தல் நித்திய விரதங்களாகும்.

தாய் தந்தையர் இறந்த திதிகளாக ஆண்டுதோறும் வரும் அமாவாசை விரதம் புரட்டாதி மாதத்தில் வரும் மாயை சிரார்த்த தினவிரதம், சித்திரை ஐப்பசி மாதப் பிறப்புகளான விஷப புண்ணிய கால விரதங்கள் ஆடி, தை மாதப் பிறப்புக்களான அயன புண்ணிய கால விரதங்கள் என்பன பிதிரர் விரதங்களுள் சிறந்தவை. இவை கால எல்லை கருதாமல் அறிவு உள்ள வரை கடைப்பிடிக்க வேண்டிய விரதங்களாகும்.

பொதுமக்கள் பெரிதும் காமிய விரதங்களை விரும்பி அனுஷ்டிக் கின்றனரெனினும் உரிய முறைப்படி சரியான விதி முறைகளை அறிந்து கைக்கொள்வோர் மிகச் சிலரே.

இன்ன, இன்ன விரதங்கள் இன்ன இன்ன நோக்கத்துக்காக அனுஷ்டிக்கப்பட வேண்டும், இத்தனை வருடங்கள் கைக் கொள்ளப்பட

வேண்டும், இவ்வாறு கைக்கொள்ளப்பட வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகள் உண்டு. அவற்றை அறிந்து முறையாகக் கைக்கொள்வது அவசியமாகும்.

ஒரு விரதத்தை ஆரம்பிக்கும் முன் இன்ன நோக்கத்துக்காக இன்னமுறைப்படி இவ்வளவு காலம் அனுஷ்டிக்கப் போகின்றேன் என்று உறுதியாகத் தீர்மானம் செய்து (சங்கல்பம் செய்து) ஆலயம் சென்று சங்கல்பபூர்வமாக அர்ச்சனை வழிபாடுகள் செய்து ஆரம்பிக்க வேண்டும். குறிப்பிட்ட கால எல்லை வரை மாற்றமின்றி அவ்விரதத்தை ஒழுங்காகக் கைக் கொள்ளவேண்டும்.

உரிய காலம் முடிந்ததும் விரத உத்தியாபனம் செய்து விரதத்தை நிறுத்த வேண்டும். விரதத்துக்குரிய மூர்த்தியின் வடிவத்தைப் பொன் பிரதி மையாகச் செய்து வீட்டிலே வைத்து முறைப்படி கும்பங்கள் ஸ்தாபித்து சங்கல்ப பூர்வமாகப் புண்ணியாகவாசனம் முதலிய பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பித்து சமஸ்தோபசார பூசைகளையும் செய்து முடித்து அன்று முழுவதும் உபவாசமாயிருத்தல் வேண்டும். மறுநாள் அதிகாலையில் நீராடி நித்திய கர்மாநுஷ்டானங்கள் செய்து மறுபடியும் அவற்றுக்குப் பூசைகள் நடத்திய பின் கும்பப் பொருட்கள் பொன் பிரதிமையும் மற்றும் தானப் பொருட்கள் யாவும் சேர்த்து வேட்டி, சால்வை, அரிசி, காய்கறி, தாம்பூல தட்சிணைகள் பூசைகளைச் செய்வித்த குருவுக்கு வழங்கி முறைப்படி நான் கைக்கொண்ட இந்த விரதத்தை இன்று உத்தியாபனம் செய்து முடிக்கின்றேன். சாஸ்திரங்களில் சொல்லப்பட்டபடி இவ்விரதத்திற்குரிய பலன்களைத் தந்தருள வேண்டும் என்று பிரார்த்தனை செய்ய வேண்டும் தம்பதிபூசை, சுமங்கலி பூசை முதலியன குறித்து விரதத்துக்கு சொல்லப்பட்டிருந்தால் அவற்றையும் செய்து முடிந்தபின் மாஹேஸ்வர பூசை செய்து விடடுப் பாரணை பண்ண வேண்டும் பாரணை காலை எட்டரை மணிக்கு முன்செய்து முடிக்க வேண்டும் என்பது விதி.

இங்கு குறிப்பிட்ட விதத்தில் வீட்டிலே பூசைகளைச் செய்வதும் பொன் பிரதிமைகளைச் செய்து தானம் கொடுப்பதும் யாவருக்கும் எளிதானதன்று. இதனால் உத்தியாயனமே செய்யாது விடுவதும் முறை யன்று. எனவே உரிய காலத்தில் ஆலயம் சென்று விரத உத்தியாபனம் செய்யப் போகின்றேன் என்று குருமுகமாகச் சங்கல்பம் செய்து இயன்ற

வகையில் விசேஷ அபிஷேகம் பூசை அர்ச்சனை வழிபாடுகளைச் செய்து குருவுக்கு தாம்பூல தட்சணைகளும், தானங்களும் இயன்ற வரையும் வழங்கி விரதத்தை மனநிறைவோடு முடித்து இறைவனிடம் சமர்ப்பிக்கலாம்.

விரதங்கள் மக்களின் மன வலிமை அதிகமாகவும், நம்பிக்கைகளின் அடிப்படையில் அவர்களது வாழ்வில் வளமும், நலமும் மிகுவதற்கு பயன்படுகின்றன.

## விரத அநுஷ்டானங்களும் விதிமுறைகளும்

எல்லா விரதங்களுக்கும் பொதுவான விதிமுறைகள் யாவை என நாம் பார்ப்போமானால் அதிகாலையில் துயிலெழுதல், நீராடித் தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிதல், சந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மாநுஷ்டானங்களை (அநுட்டானம் பார்த்தல்) முறைப்படி செய்தல், ஆலய வழிபாடு செய்தல், காலை, மாலை வீட்டில் சுவாமி அறையில் விளக்கேற்றி வழிபட்டு இயன்றவரை திருமுறைப் பாடல்கள் மற்றும் தோத்திரப்பாடல்களைப் பாடுதல், விபூதி, உருத்திராக்கம் முதலிய சமய சின்னங்களை அணிந்திருத்தல், காலை உணவினை நீக்கி மதியம் ஒரு வேளை மட்டும் இன்னமும், இரவில் பால் பழமும், அல்லது பலகாரம் உண்ணல் என்பன எல்லாவிரதங்களுக்குமே முக்கியமாக வேண்டப்படும் கட்டுப்பாடுகளாகும். விரதம் இருக்கும் பெண்கள், அதிகாலை சூரிய உதயத்திற்கு முன்னால் குளித்துச் சுத்தமாக இருக்க வேண்டும். வீடு வாசல்களைக் கழுவி சுத்தப்படுத்த வேண்டும். இவ்விதம் விரதோத்தியாபனம் செய்பவர்களுக்காகவும், சாதாரணமாக பாரணை சமயத்தில் ஆலய தரிசனம் செய்வதற்காக வருபவர்களுக் காகவும், உபவாசவிரதங்களுக்கு மறுநாள் காலையில் ஆலயங்களில் நிகழும் விஷேட பாரணைப் பூசையை அதிகாலையிலேயே நிறைவேற்றி விரதம் அநுஷ்டிப்போர் எட்டரை மணிக்கு முன் தமது பாரணையை முடித்துக் கொள்ளும் வகையில் ஆலய நிர்வாகிகளும், குருமாரும் முன்வர வேண்டும்.

உரிய நேரத்தில் பாரணை பண்ணுவதற்குத் தடைகள் ஏற்பட்டால் பாரணைக்காக சமைத்த உணவைச் சாமிப்படத்திற்கு முன்படைத்து அதனை இந்த உரிய நேரத்தில் முகர்ந்து விடுதல் போதுமானது. பின்னர் இயன்ற பொழுதில் சாப்பிடலாம்.

சமையல் தயாரிப்பதிலும் தாமதம் ஏற்படின் சாமி படத்திற்கு முன் ஒரு சிறு பாத்திரத்தில் நீரெடுத்து வைத்து அதில் துளசியை இரண்டு அடியிலைகளுடன் கூடிய கதிராக எடுத்து அந்த நீரை உரிய காலத்தில் அருந்தி பாரணையை நிறைவு செய்யலாம். பின்னர் வசதி யான போது சாப்பிடலாம்.

ஒரு விரதத்தின் முடிவில் அதாவது பாரணை நாளில் இன்னொரு விரதம் வந்தால் இந்த முறையையே கடைப்பிடிக்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இரண்டாவது விரதமும், உபவாசமாக இருந்தால் முதலாவது விரதத்தின் பாரணையைத் துளசி தீர்த்தம் அருந்தி நிறைவேற்றி விட்டு இரண்டாவது விரதத்தை முறைப்படி உபவாசமாக அனுட்டித்து அதற்கு மறுநாள் பாரணை செய்ய வேண்டும்.

பெரும்பாலும் கேதாரகௌரி நோன்பின் மறுநாள் கந்தசஷ்டி விரதாரம்பம் அல்லது கந்தஷ்டி விரத முடிவில் அதாவது பாரணையன்று சோமவார விரதம் வருவதுண்டு. இச் சந்தர்ப்பத்தில் முதலில் நாம் பார்த்தவாறு தான் விதிமுறையைக் கைக்கொள்ள வேண்டும்.

சிலர் உதயத்திற்கு முன் விரதத்திற்குரிய பாரணையை முடித்து விடுவதுண்டு. ஆனால் சூரிய உதயத்திற்கு முன் பாரணை செய்தல் விதியன்று. விரத நியமனங்களை ஆரம்பத்திலேயே அளவுடன் கைக் கொள்வது நன்று. கடுமையான முறையில் ஆரம்பித்து பின்னர் அரை குறையாக நிறுத்துவது கூடாது. விரதத்தைக் கிரமப்படி அனுசரிக்க முடியாதவர்கள் தம்மாலியன்றளவு அனுசரிப்பதே தகுதி. தம்மளவுக்கு மீறி உடலை வருத்த நேரிடின் விரதத்தில் வெறுப்பு தோன்றும் இதனால் விரத பலன் இல்லாமல் போய்விடும் (திருமயிலை செ. வெ. ஜம்புலிங்கபிள்ளை)

இவ்விரதங்களை அனுஷ்டிக்கத் தகுதியானவர்கள் யார் தகுதி யற்றோர் யார்? என்றொரு கேள்வி எழுகிறது. சுத்த போசன முடையோராயும் தீட்சை பெற்றவர்களாகவும், ஆசார சீலர்களாகவும் இருப்பவர்களே விரதங்களைக் கைக்கொள்ளத் தகுதி உடையோர் என்று விரத நூல்கள் எடுத்துரைக்கின்றன.

நோயாளர்களும், அசௌகரியமுடையோரும் பாலகர்களும், மாதவிலக்கான பெண்களும் விரதம் அனுட்டிக்கும் தகைமை இல்லாதவர்கள். இவர்கள் விரதம் கைக்கொள்ள வேண்டுமாயின்

தமக்காக வேறு ஒருவரை வரித்துக் கொள்ளவேண்டும். பெண்கள் தம் கணவரை அல்லது மகனை வரித்துக் கொள்ளலாம். நோயாளர் பிள்ளைகளை அல்லது குருமாரைக் கொண்டு விரதத்தை நோற்றலாம். பாலகர்களுக்காகப் பெற்றோர் நோற்றலாம். ஆசார மில்லாதோர் அல்லது அசௌகரியமுடையோரும் குருமாரை வரித்துக் கொள்ளலாம். சமையல் பாத்திரங்கள் விரதத்திற்கு எனத் தனியாகப் புதிதாகக் கழுவி சுத்தமாக ஏற்கனவே சமைத்ததாகவோ, அசைவ உணவுகளைச் சமைத்த பாத்திரங்களாகவோ இருக்கக் கூடாது. முதல் நாள் சமைத்த உணவுகள் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும்.

விரதம் இருப்பவர்கள் பிறர் மீது கோபப்படுதல், பிறரைப் பற்றி தவறாகப் பேசுதல், பிறர் மனம் புண்படும்படி கேலி செய்தல், பிறரிடம் பேசாதிருத்தல், அதிகமாகப் பேசுதல் ஆகிய எதுவுமே செய்யக் கூடாது.

விரதம் என்ற பெயரை வைத்துக் கொண்டு அடிக்கடி நீராகாரம் சாப்பிடக்கூடாது. ஓய்வு தேவை என்று பகலில் படுத்துத் தூங்கக்கூடாது. நாம் விழித்திருந்து இறைவழிபாட்டில் நமது எண்ணங்களை சிந்தனையைச் செலுத்த வேண்டும்.

விரதம் இருப்போர் தாம்பத்திய உறவில் ஈடுபடுதல், தவறான உணர்ச்சிகளை உருவாக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தல், கேட்டல் கூடாது. விரதத்தின் போது அசைவ உணவுகளை சாப்பிடுதல், பிறருக்கு சமைத்துக் கொடுப்பது கூட தவறாகும். வெற்றிலை பாக்கு போடுதல், புகைப்பிடித்தல், மது அருந்துதல், சூதாடுதல் ஆகியவையும் கூடாது.

விரத நிபந்தனைகளை முழுமனதோடு ஏற்றுக் கொள்பவர்களாக இருக்க வேண்டும். விரதங்களுக்குத் தகுந்தபடி ஒருவேளை, இரண்டு வேளை மூன்று வேளையும் உபவாசம் இருத்தல் ஆகிய எதற்கும் தயாராக இருக்க வேண்டும்.

விரத பூசையின் போது ஒவ்வொரு முறையும் விநாயகருக்கு பூசை செய்த பிறகே விரதத்திற்கான தெய்வங்களுக்கு பூசை செய்ய வேண்டும். குறிப்பிட்ட விரதங்களில் குறிப்பிட்ட முறைப்படியே பூசை விதிகளையும், அனுட்டான முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். விதியில் குறிப்பிட்ட மலர்களே அத்தெய்வங்களுக்கு

பயன்படுத்த வேண்டும். மாற்று மலர்கள் பயன்படுத்தக் கூடாது. இது விரதங்களுக்குப் பங்கம் ஏற்படுத்தும் என்பது முன்னோர் நம்பிக்கை.

விரதங்கள் இருப்பவர்கள் ஆணாக இருந்தால் முதலில் குடும்பத்தாரின் அனுமதி பெற்றே விரதம் இருக்க வேண்டும். கன்னிப் பெண்களாயின் பெற்றோரின் அனுமதியுடனும், மணமான பெண்கள் கணவனின் தாயாரான மாமியாரின் அனுமதி பெற்ற பின்னும் விரதம் இருக்க வேண்டும். பிறருக்கு உடன்பாடு இல்லாத சூழ்நிலையில் இருக்கும் விரதங்கள் முழுப்பலனைத் தரா.

விரத சம்ஹிதை என்னும் நூல் நோயாளிகள் மிகவும் வயதான வர்கள், குழந்தைகள் இப்படி உள்ளவர்கள் விரதம் பூசைகளில் கலந்து கொண்டால் போதும் என்கிறது. பெண்கள் வீட்டுக்கு விலக்காகி எழு தினங்கள் ஆன பிறகே விரதம் மேற்கொள்ளலாம். மேலும் குழந்தை பிறந்து நாற்பத்து எட்டு தினங்களுக்குப் பிறகே குழந்தை பெற்ற பெண்கள் விரதம் அனுஷ்டிக்கலாம்.குடும்ப உறுப்பினர் எவரேனும் இறந்தால் அவர்கள் இறந்து மூன்று மாதங்களுக்குப் பிறகே குடும்பத்தி லுள்ள மற்ற உறுப்பினர்கள் விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவை விரத அனுஷ்டானங்களுக்கான பொது விதிகளாகும். இவற்றோடு சம்பிரதாய பூர்வமாக தமது பிரதேசங்களில் நிகழும் நடைமுறைகளையும் குருமூலமாக உபதேசிக்கப்பட்டவற்றையும் சேர்த்து முழுமனதான விரதங்கள் நம்பிக்கையோடு அனுசரிப்பதே முறையாகும்.

விரதம் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியவற்றை மனத்தில் உறுதியாகக் கொள்ளுவதையே விரதம் என்பார்கள். இவ்விதம் விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றபோது எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதனை சாஸ்திரங்கள் தெளிவு படக்கூறுகின்றன. இவற்றை நாம் முறைப்படி கைக்கொண்டால் விரதஅனுட்டான பயனைப் பெற்றக்கொள்ளலாம்.

## முருகப் பெருமானுக்குரிய விரதங்களும், விழாக்களும்

முருகப் பெருமானை ஆராதிக்கும் மூன்று முத்தான விரதங்கள் விரத நூல்களிலே சொல்லப்பட்டிருக்கின்றன. வார விரதம் ஒன்றும், (சுக்கிர வாரம் அல்லது வெள்ளிக்கிழமை விரதம்) திதி விரதம் ஒன்றும் (கந்த

சஷ்டி விரதம்), (நட்சத்திர விரதம் - கார்த்திகை விரதம்) என அவை அமைகின்றன.

முருகப்பெருமானை வணங்கி அருள் பெறுவதற்குரிய விரதங்களை சிறப்பாக ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்வோம். உயிர்களுக்கு வேண்டுவது மூன்று சுகம். இகம், பரம், வீடுபேறு இந்த மூன்று இடங்களிலும் காத்தருளும் தெய்வம் முருகன். அதனால் அப்பெருமான் மூன்று உகரங்களுடன் கூடிய முருகு என்ற சொல்லை உடைய தனிப்பெருந் தெய்வமாக விளங்குகின்றான்.

இந்த மூன்று நலன்களை வழங்க வல்ல தெய்வம் முருகவேள். பால் பாயசத்தை ஒரு கரண்டியைக் கொண்டு தானே படைக்கின்றோம். அது போல் இக நலனை வள்ளி தேவியைக் கொண்டும். பரநலனை தெய்வயானை அம்மையைக் கொண்டும், முக்தி நலனை வேலாயுதத்தைக் கொண்டும் நமக்கு அருள் புரிகின்றான் முருகன். எனவே முருகப் பெருமானை பயன்கருதாது மெய்யன்புடன் வழிபடுவோர் இகம், பரம், வீடு என்ற மும்மை நலன்களையும் பெற்று செம்மையுறுவார்கள். பாவம் நிறைந்த கலையில் கண்கண்ட தெய்வமாகக் கலியுகவரதனாக விளங்குபவர் கந்தவேள், முருகனை ஞானிகள் தமது ஞான வழியால் கண்டார்கள். அழகு உறையும் குன்றுகளிலெல்லாம் கோலக்குமரன் கொலுவீற்றிருப்பதாகக் கொண்டு ஆங்காங்கு அவனுக்கு விழாவெடுத்து வழிபடுகின்றோம்.

அழகுக் கடவுளாக உறையும் முருகனை தமிழ்க் கடவுளாக நாம் கொண்டோம். முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன் என்பர் அருணகிரியார். அத்தகைய பெருமையும்,அருளும் நிறைந்த முருகனுக்குரிய விரதங்கள் விழாக்கள் பற்றிச் சிறப்பாக நோக்குவோம்.

### சுக்கிரவார விரதம்

சுப்பிரமணியக் கடவுளை வேண்டி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கைக் கொள்ளப்படும் இந்த விரதம் ஐப்பசி மாத முதல் வெள்ளிக் கிழமையில் ஆரம்பிக்கப்படும்.

உபவாசமிருத்தல் உத்தமம். அது இயலாதவர்கள் பால் பழமாவது பலகாரமாவது இரவு ஒரு நேரம் கொள்ளலாம். அதுவும் முடியாதவர்கள்

பகல் ஒரு பொழுது போசனம் செய்க. மூன்று வருட காலம் அநுஷ்டித்த பின் விரத உத்யாபனம் செய்யலாம்.

## கார்த்திகை விரதம்

கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரம் முதலாக (திருக்கார்த்திகை) மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்தில் முருகப் பெருமானைக் குறித்துக் கைக்கொள்ளப்படும் விரதம் இது. உபவாசம், உத்தமம், இயலாதோர் இரவில் பால், பழம், பலகாரம் உண்ணலாம்.அதுவு மியலாதோர் பகலொருபொழுது போசனம் செய்க. பன்னிரண்டு வருடங்கள் இவ்விரதமநுஷ்டித்த பின் உத்யாபனம் செய்யலாம். திருக்கார்த்திகை விரதத்துக்கு இஸ்தமன வியாபகம் முக்கியம். அதாவது மாலை ஐந்து மணிக்கு மேல் கார்த்திகை நட்சத்திரம் இருக்கும் நாளே விரத நாளாகும்.

திருக்கார்த்திகைத் தீபம் என்று இத்தினத்தில் தீபங்களை ஏற்றிவைத்து சோதிவடிவில் இறைவனை வழிபடுவர். சிவராத்திரி நாளில் பிரமவிஷ்ணுக்களுக்குத் தமது சோதிவடிவை இறைவன் காட்டிய பொழுது அவ்வடிவைத் தமக்கு என்றும் காட்டியருள வேண்டு மென அவர்கள் வேண்டினர். அதற்கு இறைவன் திருக்கார்த்திகை நாளில் மீண்டும் இவ்வரவை காட்டுவோம் என்றார். அதனை நினைவு கூர்ந்தே கார்த்திகைத் தீபநாள் கொண்டாடப்படுகின்றது.

திருவண்ணாமலைத் தலத்திலே மலையுச்சியிலே பெருந்தீபம் ஏற்றப்படுகின்றது. பல ஊர்களிலுமுள்ள பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் இறைவனது சோதி வடிவைத் தரிசிப்பார்கள் குன்றின் மேலிட்ட தீபம் என்பதும் மலை விளக்கு ஆகிய மரபுச் சொற்றொடர்கள் நீண்ட காலம் இவ்வழக்கு இருந்ததைக் காட்டுகின்றன.

திருக்கார்த்திகை தினத்தில் ஆலயங்கள் தோறும் சொக்கப்பானை கொளுத்தி மகிழ்வர். சொக்கப்பானை பற்றி சைவசமய புண்ணியகாலம் என்ற தமது நூலில் த. சுப்பிரமணியர் அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்.

சுட்டப்பனை என்னும் சொற்றொடர் திரிந்து சொக்கப்பானை என வழங்குகிறது. சுட்கம் என்பது வரட்சி, உலர்ந்த தென்னை, பனை, கமுகு, வாழை இவற்றின் தண்டினைத் தீபதண்டமாகக் கோயில் சந்நிதானத்திலே நட்டு உலர்ந்த பனையோலை முதலியவற்றால்

விமானம் போல உயரமாக மூடிக்கட்டிய சொக்கப்பானையில் அக்கினி மூட்டி அது சுவாலித்தெரியும் போது சோதி சொரூபமாகவும், திருவண்ணாமலைத் தீபமாகவும் பாவித்து பக்தர் வழிபடுவர். இந்தச் சொக்கப்பானையின் நடுவே வாழைக் குற்றியொன்றை நட்டு அருகில் மாவிளக்குத் தீபம் ஒன்றையும் வைத்து சொக்கப்பானை எரித்து முடிந்த பின் அதனை எடுத்து நிவேதிப்பர். முருகன் ஆலயங்களில் அடியார்கள் பலரும் மாவிளக்கு இட்டு வழிபடுவர்.

செந்தினை மாவுடன் (கிடைக்காதவர்கள் அரிசிமாவில் செய்வர்) தேனையும், நன்கு கனிந்த வாழைப்பழத்தையும், சக்கரையையும் சேர்த்துப் பிசைந்து அம்மாவினால் ஒன்று, மூன்று, ஐந்து ஏழு என ஒற்றைப்படை இலக்கத்தில் அகல் விளக்கு வடிவத்தில் செய்து நெய்விட்டுத் திரியும் இட்டுத் தீபமாக ஏற்றுவர். இதனையே மாவிளக்கு என்பர்.

திருக்கார்த்திகை பற்றியும், சொக்கப்பானை பற்றியும் மாந்திரீக பூசணம் சிவஸ்ரீ க. சாம்பசிவக்குருக்கள் அவர்கள் சோதிடமலர் பத்திரிகையில் (1978 கார்த்திகை) எழுதிய கருத்து இது.

இறைவன் திரிபுர சம்ஹாரம் செய்த தினம் கார்த்திகை தினமாகக் கார்த்திகை நட்சத்திரமாகும். இறைவனின் புன்னகையே அக்கினியாகத் தோன்றித் திரிபுரங்களை எரித்த பாவனையைக் காட்டவே தீபோத் சவம் என்ற உற்சவம் நடத்தப்படுகிறது. கருங்காலி, தென்னை, பனை, வாழை முதலியவற்றிலொரு மரத்தைத் தீபஸ்தம்பத்தின் பொருட்டு 9 முதல் 25 முழம் வரை உயரமுள்ளதாக எடுத்துப் பூமியுள் எட்டி லொருபங்கு புதைத்து அதைச் சுற்றிப் பனை ஓலை, தென்னை ஓலை, கமுகோலை இவற்றினால் கூடுகட்டித் தெற்கு அல்லது கிழக்குப் பக்கமாக வாசல் விட்டு அதில் தீபம் வைத்துக் கொளுத்த வேண்டும். இதை நம்நாட்டில் சொக்கப்பானை என அழைக்கின்றனர்.

திருக்கார்த்திகை நாள் குமராலயதீபம் எனப்படும். முருகன் ஆலயங்களில் மேற்கண்டவாறு வழிபாடுகள் நிகழும் முதல் நாள் அல்லது மற்றநாள் அல்லது அதே தினத்தில் பௌர்ணமி தினத்தில் ஏனைய எல்லா ஆலயங்களிலும், வீடுகளிலும் சர்வாரய தீபம் என்ற பெயரில் கொண்டாடப்படுகின்றது.

வீடுகளில் மாக்கோலங்களையும், வண்ணக்கோலங்களையும் இட்டு அவற்றின் மீது அகல்விளக்குகளை ஏற்றிவைப்பர். சிறுசிறு பந்தங்களைத் தயார் செய்து அவற்றைத் தேங்காயெண்ணெய் அல்லது இலுப்பெண்ணெய் விட்டு ஏற்றி வீட்டுவளவிலும், வயல், தோட்டம் முதலிய இடங்களிலும் நாட்டி வைத்து எரிய விடுவர். வீட்டு வாசலில் வாழைக்குற்றியை நாட்டி அதன் மேல் தேங்காய்ப் பாதியை வைத்து அதனுள் திரிச்சீலை இட்டு எண்ணெய் விட்டு நீண்டநேரம் எரியச் செய்வர். நமிநந்தியடிகள், கலியநாயனார், கணம்புல்லநாயனார் ஆகியோர் திருவிளக்குத் தொண்டினால் முத்தி பெற்றோராவர்.

இவ்வாறு புறஇருள் களைந்து ஒளி சேர்க்கும் இந்தத் தீபோற்சவ நாளில் அக இருள் போக்கி ஞான ஒளி சேர்ப்பதும் நிகழ வேண்டுமெனப் பிரார்த்திக்க வேண்டும்

## ஸ்கந்த சஷ்டி விரதம்

கலியுகவரதனும், தமிழ்க் கடவுளுமாகிய கந்தக் கடவுளாம் சுப்பிரமணிய சுவாமிக்குரிய மூன்று விரதங்களில் மிகச் சிறந்தது ஸ்கந்தசஷ்டி விரதம். சைவசமயிகள் முக்கியமாகக் கந்தபுராண கலாசாரத்தில் திழைக்கும் ஈழத்துச் சைவத் தமிழ் மக்கள் மற்றெல்லா விரதங்களையும் விட இந்த ஸ்கந்தசஷ்டி விரதத்தை மிகவும் புனிதமாகவும் பக்தி பூர்வமாகவும் கைக்கொள்ளுகிறார்கள்.

ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையையடுத்த வளர்பிறைப் பிரதமை முதல் சஷ்டியீறாகவுள்ள ஆறு நாட்கள் ஸ்கந்தசஷ்டி விரதமாகும். சகல செல்வங்களையும், சுகபோகங்களையும் தரவல்ல இந்த விரதம் புத்திரலாபத்துக்குரிய சிறப்பான விரதமாகும். சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும் என்பது ஒரு பழமொழி. இதற்கு வெளிப்படையான சொற்பொருளை விட ஸ்கந்தசஷ்டியில் விரதமிருந்தால் அகப்பையாகிய கருப்பையில் கரு உண்டாகும் என்ற உட்கருத்துமுண்டு. பகல் பன்னிரண்டு நாழிகைக்குக் குறையாமல் பஞ்சமித் திதியும் அதன் பின் சஷ்டி வியாபகமும் இருக்கும் நாள் சூரன் போருக்குரியது. பிரதமைத்திதியில் ஆரம்பமாகும்.

முருகபக்தர்கள் ஒரு கடுந்தவமாகவே இவ்விரதத்தைக் கருதி ஆறு நாட்களும் முழுப்பட்டினியாக உபவாசமிருத்தல் வழக்கம். முதல்

நாள் அமாவாசையன்றே ஒரு நேர உணவுண்டு விரதமாக இருந்து மறுநாளைய உபவாசத்துக்குத் தயார் செய்து கொள்வர் பொதுவாகவே உபவாச விரதமநுஷ்டிக்கும் போது முதல் நாளும் மறுநாளும் ஒரு நேர உணவே கொள்ள வேண்டும்.

பிரதமையிலன்று அதிகாலை நீராடித் தூய ஆடையணிந்து கர்மாநுஷ்டானங்கள் முடித்து முருகன் ஆலயம் சென்று அங்கேயே ஆறு நாட்களும் அன்ன ஆகாரங்கள் எதுவுமின்றி இறைவழிபாடு, முருகநாம்பஜனை, நாமஜபம், புராணபடனம், புராணம் கேட்டல் என்றித்தகைய புனித காரியங்களுடன் அங்கேயே தங்கியிருப்பர். தண்ணீர் கூட அருந்தாது ஆலயத்தில் வழங்கப்படும் பானகம் (பானக்கம்) மட்டும் அருந்தியிருத்தல் உத்தமோத்தமமான விரதமாகும். பானகமென்பது சர்க்கரை, தேசிக்காய், இளநீர், முதலியன கலந்து தயாரிக்கப்படும் ஒரு நீராகாரம் ஆகும். பட்டினி கிடக்கும் வயிற்றினுள் வெளிப்படும் அதிக சக்திமிக்க வெப்பம், வாய்வு, பித்தம், இவற்றைத் தணித்து உடற்சமநிலையைப் பேணுவதற்கும், பசி, தாகம், இவற்றை ஓரளவு தணிக்கவும் இது உதவுகிறது.

ஆலயங்களில் ஆரம்ப தினத்திலேயே தர்ப்பையணிந்து காப்புகட்டி, சங்கல்பித்து ஆறு நாளும் நோன்பிருத்தல் முறை. இறுதி நாளில் கர்ப்பை அவிழ்த்துத் தர்ப்பையுடன் சேர்த்துத் தாம்பூல தட்ஷணைகளுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிப்பர்.

ஏழாம் நாள் அதிகாலையில் நீராடி நித்திய கர்மாநுஷ்டானங்களை நிறைவேற்றிப் பாரணைப் பூஜை என்று நடைபெறும் விசேஷ பூஜையையும் கண்டு வழிபட்டபின் மாஹேஸ்வர பூசை செய்து (அடியார்களுக்கு அன்னமிட்டு) பாரணை செய்ய வேண்டும்.

இவ்விதம் கடும் விரதம். அநுஷ்டிக்க முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் இரவு ஒரு பொழுது பால்பழம் அல்லது பலகாரம் உண்டு இறுதி நாள் உபவாசம் இருக்கலாம். அதுவும் முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் பகல் ஒரு பொழுது அன்னமும் ஆறாம் நாள் இரவு பால்பழம் அல்லது பலகாரமும் உண்டு விரதமிருக்கலாம்.

ஆறாம் நாள் சஷ்டித் திதியில் சூரசம்ஹாரம் முடிந்த அன்றிரவு முழுவதும் துயில் நீக்கி விழித்திருந்து முருகன் பெருமைகளையே பேசியும், வழிபட்டிருக்குமாறு பழம் நூல்கள் விதிக்கின்றன. சிவ

பிரானுக்குரிய சிவராத்திரியும், மஹாவிஷ்ணுவுக்குரிய வைகுண்ட ஏகாதசியும் போல முருகப்பெருமானுக்குரிய ஸ்கந்தசஷ்டியும் மிக விசேஷமான தினமாதலால் துயில் நீத்தல் பொருத்தமானதே. ஆயினும் அனைவராலும் இது கைக்கொள்ளப்படுவதில்லை. இயன்றவர்கள் கைக்கொள்க.

இவ்விரதம் ஆறு வருடங்கள் அல்லது பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்து கைக்கொள்ளப்பட வேண்டும். உபவாசம் அல்லது ஒரே நேர உணவு என்பது உணவு நியதி. ஆறு வருடமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். முறைப்படி சங்கல்பபூர்வமாக ஆரம்பித்து ஆறாவது வருடம் விரத முடிவில் விரதோத்யாபனம் செய்து பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

விரதோத்யாபனத்தின் போது முருகன் ஆலயம் சென்று விரத பூர்த்தி சமயத்தில் விரதத்துக்குரிய பலன்கள் எனக்குச் சித்திக்க வேண்டும் என்பதற்காக இந்த விசேஷ பூஜையை செய்கின்றேன் என்று சங்கல்பித்து விசேஷ அபிஷேகம் பூஜை, ஷண்முகார்ச்சனை அல்லது சஹஸ்ர நாமார்ச்சனை முதலியவற்றைச் செய்வித்து காப்பு தர்ப்பை இவற்றுடன் தாம்பூலம் தட்சிணை, வேட்டி, சால்வை, அரிசி, காய்கறி முதலிய தானங்களையும் சேர்த்து அர்ச்சகரிடம் சமர்ப்பித்து மகிழ்ச்சி யுடன் இந்தத் தானத்தை வழங்குகின்றேன். சாஸ்திரங்களில் சொல்லியிருப்பது போல இந்த விரதபலன்கள் எனக்கு உண்டாகட்டும் என்று பிரார்த்திக்க வேண்டும். ஸ்கந்தசஷ்டி விரத மகிமை பற்றிக் கந்தபுராணம் சிறப்பாகப் புகழ்ந்து பேசும் வசிட்டமாமுனிவர் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு உபதேசித்த பெருமையையுடையது இது. அரசர்கள், தேவர்கள்,முனிவர்கள் பலரும் இந்த விரதம் அனுஷ்டித்து பேறு பெற்றனர். இவ்விரதம் தொடர்பான புராணக்கதையை சிந்திக்கலாம்.

சூரன், சிங்கன் தாரகன் முதலிய அசுரர்கள் நெடுங்காலம் தேவர், மனிதர் முதலிய யாவரையும் துன்புறுத்தி அழிவு செய்து வந்தனர். பரமசிவன் இதற்கொரு முடிவு காணும் நோக்கில் தமது சக்தியையே முருகப் பெருமானாகப் பிறப்பித்தார். அந்த முருகப்பெருமான் இந்த சூரபன்மன் அசுரர்களுடன் ஆறு நாட்கள் போரிட்டு வென்றார். இந்த அருட்பெருங்கருணைச் செயலை வியந்து இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதலாறு நாட்களையும் விரத

நாட்களாகக் கொண்டு முனிவரும் தேவரும் கடைப்பிடித்து வந்தனர். இதுவே ஸ்கந்தசஷ்டி என்ற பேரில் பூலோக மாந்தரும் அநுஷ்டிக்கக் கிடைத்தது.

*''வேற்போடும் அவுணன்தன்னை வீட்டிய தணிவேற் செங்கை*
*அற்புதன் தன்னை போற்றி அமரரும் முனிவர் யாரும்*
*சொற்படு துலையின் திங்கட் சுக்கில பக்கந் தன்னில்*
*முற்பக வாதியாக மூவிரு வைகல் நோற்றார்''.*

*(கந்தபுராணம் கந்தவிரதப்படலம் 20)*

இக் கந்தபுராணக் கதையைச் 'சங்கரன்பிள்ளை சட்டியிலே மாவறுத்தார்' என்ற சொற்றொடர் மூலம் நகைச்சுவையாக வழங்குவர். சங்கரன் புதல்வராகிய முருகப்பெருமான் சஷ்டித் திதியிலே மாமரமாக வந்த சூரனைக் கடிந்தார் என்பது இதன் பொருள். வேறும் கதை சொல்லும் புராணமாகக் கந்தபுராணத்தை எண்ணலாகாது. சைவ சித்தாந்தப் பேருண்மைகளை உருவகப்படுத்திக் கதைவடிவில் சுவை படத்தரும் அருமையான நூல் இதுவாகும்.

ஈழத்தின் சைவாலயங்கள் பலவற்றில் இன்றும் தொடர்ந்து கந்தபுராணபடனம் செய்யப்படுகிறது. புராணபடனம் என்பது ஒருவர் புராணத்தைப் படிக்க இன்னொருவர் அதன் பொருளைத் தெளிவாக எடுத்துரைத்து விளக்கலாம். பலர் கூடியிருந்து இதனைச் செவிமடுப்பர். முழுப் புராணமும் படிக்க வசதியில்லாத இடங்களில் யுத்தகாண்டத்தில் சூரபன்மன் வதைப்படலம் மட்டுமாவது ஸ்கந்தசஷ்டி ஆறுநாட்களிலும் படிப்பது வழக்கம். புராணபடலத்தின் மூலம் ஒரே சமயத்தில் பலர் - கல்வியறிவாற்றல் குறைந்தவர்கள் கூட புராணக் கதைகளையும் அவற்றின் வாயிலாகச் சமயப் பேருண்மைகள் பலவற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது.

ஆறுநாட்போரும் ஆறுபகைகளை வெல்லுதலைக் குறிக்கும் சூரன், சிங்கன், தாரகன் மூவரும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் தேவர்கள் ஆன்மாக்களையும் முருகப்பெருமான் பரம்பொருளையும் உணர்த்தி நிற்கின்றனர். இவ்விதம் முப்பொருள் உண்மை விளக்குதலே இப்புராணத்தின் நோக்கமெனலாம். ஆன்மாக் களாகிய நாம் எம்மைத் துன்பத்துள் ஆழ்த்தி நிற்கும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறுபகைகளையும்

ஆணவாதி மும்மலங்களையும்வென்று ஆண்டவனைச் சென்றடைய வேண்டும் என்ற கருத்தையே ஸ்கந்தசஷ்டி விரதமும் கந்த புராணமும் வலியுறுத்துகின்றன.

நல்லைக் கந்தன் ஆலயத்தில் கருவறையில் வேல் காட்சியளிக்கிறது. அதற்குரிய வழிபாடு பக்தி பூர்வமானது பாதயாத்திரை செய்து கதிர் காமக்கந்தனை வழிபடும் மரபு சிறப்பானதொன்றாகும். இத் தலத்தில் விழாக்காலத்தில் கருவறையில் இருக்கும் புனிதப்பேழையே அலங்கரித்த யானைமீது பவனி வருகின்றது. நல்லையம் பகுதியில் விழாக்காலங்களில் வேல் பவனி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. கதிர்காம உற்சவத்தோடு கொழும்பு மாநகரில் உள்ள முருகன் ஆலயங்களில் வேல் விழா சிறப்பாக நடைபெறுகின்றது. மாவிட்டபுரம், நல்லூர், மண்டூர், செல்வச்சந்நிதி போன்ற ஆலயங்களில் தனிச்சிறப்பு வாய்ந்த வழிபாட்டு முறைகள் உள்ளன. கந்தனுக்கு மந்திரபூர்வமான வழிபாடும் மந்திரங்களின்றி பக்தி பூர்வமான வழிபாடும் உள்ளன. தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் வேலன் வழிபாடு சிறப்பாக உள்ளது. கதிர்காமத்தோடு ஒத்த பூசை முறை மட்டக்களப்பு மண்டூர் கந்தசுவாமி கோயிலிலும் செல்வச்சந்நிதியிலும் காணப் படுகின்றது.

எமது சமய வாழ்க்கை முறையிலே மனித வாழ்க்கை முழுவதும் இறைவழிபாட்டோடு பின்னிப் பிணைந்து காணப்படுகிறது. குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்ற ஆன்றோர் வாக்கிற்கு இணங்க குழந்தை உள்ள இடத்திலேதான் எப்போதும் கொண்டாட்டம் இருக்கும். கொண்டாட்டம் உள்ள இடத்திலேதான் குழந்தை மகிழ்ச்சியாக இருக்கும் இதே போலத்தான் தெய்வ சந்நிதியும் மகிழ்ச்சியாக இருக்கும் இருக்க வேண்டும்.

சமுதாயத்தில் நடைபெறும் வழிபாடுகளும், சடங்குகளும் சம்பிரதாயங்களோடு கலந்ததாகவே அமைகின்றன. அவையாவும் கொண்டாட்டங்களாகவோ அல்லது விழாக்களாகவோ அனுஷ்டிக்கப் படுகின்றன. விரதமிருத்தல் உடலை வருத்தி நேர்த்திக்கடன் இருத்தல் குறிப்பாக காவடியாட்டம், தீமிதித்தல், அலகிடுதல், அங்கப்பிரதிஷ்டை போன்றவை கூட மகிழ்ச்சி பொங்கும் மங்கள நிகழ்ச்சிகளாகவே அமைவது நமது சைவ சமயத்தின் தனிப்பெருஞ் சிறப்பாகும்.

ஆலயங்களில் நடைபெறுகின்ற உற்சவங்கள் இன்னொருவகை இவற்றைவிட புதுவருடப்பிறப்பு, தைப்பொங்கல், தீபாவளி, ஆடிப் பிறப்பு முதலியன மற்றொரு வகை.

இத்தகைய விழாக்களும், விரதங்களும் பண்டிகைகளும் நமது வாழ்க்கையிலே இடம்பெறுதல் இறை நம்பிக்கை பலமடைந்து நல்லதொரு ஆன்மீக வாழ்வை நாம் அமைத்துக் கொள்ள வழி வகுக்கின்றன. அதுமட்டுமல்லாமற் சமுதாய ஒருமைப்பாடும் உறவினர் நண்பர்களிடையே நட்புறவும் கலாச்சார ரீதியாக பண்பாட்டு வளமும் மேலோங்கவும் விழாக்களும் விரதங்களும் உதவுகின்றன.

**நன்றி: சாந்தி நாவுக்கரசன்**

## கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தானம்

### ஒரு வரலாற்றுக் குறிப்பு

இலங்கையின் வடபகுதியின் யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைநகர் யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய்-காரைநகர் பாதையில் (மானிப்பாய் வீதி) சுமார் 4 கி.மீ. தூரத்தில் ஆனைக்கோட்டை உள்ளது. இது யாழ்ப் பாணக் குடாநாட்டில் வலிகாமம் தென்மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஒரு ஊராகும். இதன் அயலில் மானிப்பாய், நவாலி, தாவடி, வண்ணார்பண்ணை ஆகிய கிராமங்கள் அமைந்துள்ளன. ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் பிரதான பாதையில் இருந்து பிரிந்து செல்லும் ''பழம் வீதியில்'' மேற்குப் புறமாக ஏறக்குறைய 150 மீற்றர் தூரத்தில் வயலும் வயல்சார்ந்த பூமியுமாகிய மருத நிலத்தை அண்மித்து உள்ளதே கரைப்பிரான் பிள்ளையார் கோவில் அல்லது கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தானமாகும்.

### பெருங்கற்காலக் குடியிருப்பு

1980-1983 காலகட்டப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் இப்பகுதியில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின் போது, கி.மு. 5000 வருடங்களுக்கு முந்தைய முதுமக்கள் தாழியும் பிற வரலாற்றாதாரங்களும் கிடைக்கப் பெற்றமையிலிருந்து இப்பிர தேசத்தின் வரலாற்றுத் தொன்மை எமக்குப் புலனாகும். இது வரலாற்றுக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது குடியிருப்பு மையம் என உலகின் புகழ்மிக்க வரலாற்றறிஞர்களால் கண்டறிந்து கூறப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரமாக இப்பிரதேசத்து மண்ணில் அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை, உரோமர்களது காலத்து மட்கலன்கள், லட்சுமி நாணயம் ஆகியவற்றைக் கொள்ளலாம். இவை 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக கண்டறியப்பட்டுள்ளன.

### ஆனைக்கோட்டை முத்திரை (Anaicoddai Seal)

இலங்கையின் ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங் கற்காலத் தமிழ்-பிராமி கல்வெட்டு முக்கியமானதாகும். ஆனைக்

கோட்டை முத்திரை (Anaicoddai Seal) என்பது ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள பிரதேசத்தில், 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இடம் பெற்ற அகழ்வாய்வு ஒன்றின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஒரு முத்திரை ஆகும்.

கரைப்பிரான் ஆலயத்தை அண்டிய பிட்டிப் பகுதியில் தோண்டி யெடுக்கப்பட்ட கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த ஒரு அடக்கக் குழி ஒன்றினுள் கண்டுபிடிக்கப்பட்ட முதுமக்கள் தாழியில் இடம்பெற்றிருந்த இம் முத்திரை ஒரு மோதிரத்தின் முன் பகுதியாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இந்த முத்திரை எதனால் செய்யப்பட்டது என்பது தொடர்பாக ஆய்வாளர்கள் மத்தியில் முரண்பட்ட கருத்துக்களே இருந்து வருகின்றன. பேராசிரியர் கா.இந்திரபாலா இந்த முத்திரையானது உலோக முத்திரை எனத் தமிழக இந்து பத்திரிகையில் 1981 இல் எழுதிய கட்டுரையில் கூறியிருந்தார். ஆனால், அவர் எந்த உலோகத்தால் செய்யப்பட்டது என்பதைக் குறிப்பாகக் குறிப்பிடவில்லை. பொ. இரகுபதி (1987) இந்த முத்திரையானது வெண்கலத்தினால் (Bronze) செய்யப்பட்டது என்றுள்ளார். அண்மையில் காலஞ்சென்ற ஐராவதம் மகாதேவனும் (2003), பேராசிரியர் சி. பத்மநாதனும் (2006), அது உலோகத்தால் ஆனது என்று தமது ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ள போதும், அது எந்த வகையான உலோகத்தினால் அல்லது உலோகக் கலவையால் ஆனது என்பதைக் குறிப்பாகக் கூறவில்லை. எதுவிதத்திலும் க.இந்திரபாலா 2006ஆம் ஆண்டில் எழுதியிருந்த நூலில், அது Steatite (Soapstone) ஆல் ஆனது என்றுள்ளார். முத்திரையின் கீழ் வரிசையில் மூன்று பிராமி எழுத்துக்களும், மேல் வரிசையில் மூன்று அடையாளங் களும் காணப்படுகின்றன. மேல் வரிசையிலுள்ள மூன்று அடையாளங் களுள் ஒன்று ரோம எழுத்தான C போன்ற அடையாளத்தின் வளைவு உச்சிப்புள்ளியில் ஒரு குற்றும் காணப்படுகிறது. மற்றைய இரண்டு அடையாளங்களும், ஒரேமாதிரியாகத் தோற்றமளிக்கின்றன.

### இப்பிரதேசம் பற்றிய கர்ணபரம்பரை கதைகள்

தென் இந்தியாவில் இருந்து வந்த சோழர்குலத்தின் திசையுக்கிர சோழனின் புதல்வியான இராஜகுமாரி மாருதப்புரவீக வல்லி தனக்கிடப்பட்ட சாபத்தினின்றும் விமோசனம் பெறப்பட்டு

(குதிரைமுகம் நீங்கப்பெற்று) மாவிட்டபுரத்தில் இருந்த காலத்தில் ஒரு நாளில், அவருக்குச் சேவை செய்துவந்த சலவைப் பணியாளர்கள் அவரிடம் சென்று தங்களுக்குத் துணிகளை உலர்த்த தகுந்ததொரு இடம் தந்துதவ வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். இராஜகுமாரி மாருதப்புரவீக வல்லியும் தனது பட்டத்து யானையை பாகர்களுடன் வடதிசை நோக்கி அனுப்புவதாகவும், அது செல்லும் பாதையில் எந்தக் கிராமத்தின் வழியாகச் செல்லும்போது பட்டத்து யானையின் பாதத்தில் மண் ஒட்டிக்கொள்ளாமல் விடுகின்றதோ, அந்த இடம் துணிகளை உலர்த்த உகந்த இடமாகும் என்றுகூறி யானையை முன்னே அனுப்பினாள். அதன் பின்னே வந்த சேவகர்களும், சலவைத் தொழிலாளர்களும் இப்பகுதியை அண்மித்தபோது யானையின் பாதங்களில் மண்ஒட்டாது இருந்ததைக் கண்டுணர்ந்து மீண்டும் இராஜகுமாரியிடம் சென்று பணிவுடன் இது பற்றிக் கூறினார்கள். அவரும் ''இந்தப் பகுதியையே உங்கள் தொழிலுக்கு ஏற்ற இடமாகப் பரிசாக வழங்குகின்றோம். நீங்கள் விரும்பும் பட்சத்தில் அந்த இடத்தை அண்மித்த பகுதிகளிலேயே வசிக்கலாம்'' என்று கூறினார் என்றும் ஒரு கர்ணபரம்பரைக்கதை உள்ளது. ஆனையின் காலில் மண் ஒட்டாத படியால் ஆனை + ஒட்டார் என்று கூறி நாளடைவில் அதுவே மருவி ஆனைக்கோட்டை என்று பெயர் வந்தது என்று கூறுவர்.

இதைவிட வேறுவிதமான சில செவிவழிக் கதைகளும் உள்ளன. எனினும் தற்போதும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு மகோற்சவ காலங்களில் இவ்வூரிலுள்ள தொழிலாளர்கள் சென்று சேவைசெய்து வருவது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமின்றி ஆலயத்தை அண்மித்த சுமார் 100 மீற்றர் தொலைவில் நிலத்தின் சில இடங்களில் இரண்டி லிருந்து மூன்று அடி வரையில் அகழ்கின்ற வேளையில் கடற் சிப்பிகளும் கடல்சார் படிமங்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. இதிலிருந்து இவ்விடம் முன்னர் கடற்பகுதியாக இருந்து காலப்போக்கில் நீர்மட்டம் குறைவடைந்து கடல் உள்வாங்கப்பட்டிருக்கலாம் எனவும், அதன்பின்னர் இந்நிலப்பரப்பில் படிப்படியாகக் குடியேற்றம் ஏற்பட்டி ருக்கலாம் என்றும் கருதலாம்.

தற்போதும் கரைப்பிரான் கோவில் பிரதேசத்தின் தென் புறத்தில் காணப்படும் வயற் பிரதேசத்தை அண்மித்து கடற்பிரதேசமே உள்ளது.

நீர் வற்றத் தொடங்கிய பின்னர் விவசாயத்தின் பொருட்டு மண்ணை அகழ்ந்து அந்த மண்ணை சிறுசிறு குன்றுகளாக அமைத்து நெற் பயிர்ச்செய்கை செய்திருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது. தற்போது மணற் குன்றுகள் வெட்டப்பட்டு மண்ணாக வீட்டுக் குடியிருப்புகள் கட்டுவதற்காக அப்புறப்படுத்தப்பட்டுள்ளதால் மணற்குன்றுகள் இருந்தமைக்கான சான்றுகளே அவ்விடத்தில் காணப்படுகின்றன.

இதைத் தவிர ஆலயத்தின் வடக்குப்புற வீதியில் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்ற அண்மைக்காலத்தில்கூட சுமார் ஐந்து அடி ஆழத்தில் சிறிய மண்சட்டிகள் மூன்று கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை யாவும் பல நாட்கள் குளிர்ச்சியுடன் காணப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இவை பின்னர் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைக்கு பாதுகாப்பின் பொருட்டும் மேலதிக ஆய்வின் பொருட்டும் வழங்கப் பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வழக்கிலுள்ள ஆனையிறவு, ஆனைப்பந்தி, ஆனை விழுந்தான், ஆகிய இடப்பெயர்களுடன் தொடர்புபடுத்தி, பண்டைய யாழ்ப்பாணக் காடுகளிலிருந்து ஆட்சியாளர்களின் வரிகளுக்காக காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு வழங்கவெனப் பிடிக்கப்படும் யானைகளை பராமரிக்கும் கோட்டையாக (கொட்டகையாக) விளங்கியதால் ஆனைக்கோட்டை எனப் பெயர் பெற்றதாகவும் இபபிரதேசத்தின் இடப்பெயருக்கான ஆய்வுக் குறிப்புகள் உள்ளன.

ஜே.பி. லூயிஸ் அவர்கள் 1889 ஜுலை 15 தொடக்கம் டிசம்பர் 14 வரை உதவி அரசாங்க அதிகாரியாக வன்னியில் பணிபுரிந்தவர். 19ஆம் நூற்றாண்டின் வன்னிப்பிரதேச நிர்வாகத்திற்கும், நீதி பரிபாலனத்திற்கும் பொறுப்பாக இருந்த ஆங்கிலேயர் தமது நாட்குறிப்புகளில் வன்னியைப்பற்றிக் குறித்து வைத்திருந்தார்கள். இதில் இப்பிரதேச மக்களின் வாழ்க்கை முறைகள், தொழில்கள், பழக்க வழக்கங்கள், சாதி, சமய வேறுபாடுகள், தொல்பொருட்கள், அரசியல் முதலியவற்றை அவதானித்து தமது நாட்குறிப்புகளில் பதிந்து வைத்திருந்தனர். ஜே.பி.லூயிஸ் அவர்கள் வன்னி மாவட்டக் கைநூலை எழுதுவதற்கு இவை பெரிதும் பயன்பட்டுள்ளன. ஜே.பி.லூயிஸ் எழுதிய ‘இலங்கையின் வன்னி மாவட்டங்கள்- ஒரு கையேடு’ என்ற

நூலில் யாழ்ப்பாணக் காடுகள், மரங்கள், விலங்குகள் பற்றிய அதிசயிக்கத்தக்க தகவல்கள் உள்ளன. ஆனைக்கோட்டை என்ற பெயருக்கான பொருத்தமான காரணம் என்னவென்பதை இந்நூலை வாசிப்பவர்களால் எளிதில் ஊகித்துக்கொள்ள முடியும்.

## கோவில் வரலாறு

கரைப்பிரான் ஆலயம், ஆரம்பத்தில் கடற்கரையை அண்மித்ததாக அல்லது பிற்காலத்தில் வயற்கரையை அண்மித்ததாக சிறிய ஆலயமாகக் கட்டப்பட்டிருந்திருக்கலாம். அதனால் கரைப்பிரான் என இவ்விநாயகரை வழிபட்ட நம் மூதாதையோரினால் காரணப்பெயர் சூட்டப் பெற்றி ருக்கலாம். ஆதிகாலம் தொட்டு இக்கோவில் இவ்விடத்தில் காணப் பட்டிருந்தமையால் ஆதி விநாயகர் எனவும் இக்கோவில் திருமூர்த்தி யான விநாயகப்பெருமான் அழைக்கப்பட்டிருக்கலாம்.

பழைமைவாய்ந்த முழுமையாக சுண்ணாம்பு கட்டிடமாக அமைக்கப் பட்டிருந்த பழைமைவாய்ந்த மணிக்கோபுரத்தில் காணப்படும் ‘கரைப்பிரான் 1901’ என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே இந்த மணிக்கோபுரமும் இக்கோவில் பழைமையானது என்பதற்குச் சான்றாகின்றது. இதன் காரணமாகவும் வெள்ளை வைரக் கற்களினால் அமைந்த கர்ப்பக்கிருக விமானம் மற்றும் கர்ப்பக்கிருகம், அதனை அடுத்த மகாமண்டபம் என்பன யாவும் பழைமைபேணும் நோக்கில் அதே நிலையில் மெருகூட்டிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இதன் தென்புறத்தில் சுண்ணாம்புக் கட்டிடமாக தீர்த்தக்கேணி இருந்தது. பின்னர் அவை தூர்ந்து போயிருந்த நிலையில் தூர்ந்த இடம் மாத்திரம் தற்போது புதுமெருகூட்டப்பட்டுள்ளது.

## ஆலயத்தின் மூர்த்தங்கள்

இவ்வாலயத்தின் பிரதான மூர்த்தி கரைப்பிரான் பிள்ளையார் ஆவார்.

பரிவார மூர்த்திகளாக விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமான், தட்சிணாமூர்த்தி சமேத ஸ்ரீதேவி, பூமாதேவி சமேத மஹாவிஷ்ணு, வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான், விஷ்ணு, துர்க்கை, ஜலகண்ட விநாயகர், நவக்கிரக நாயகர்கள், வைரவ சுவாமிப் பெருமான், சண்டேஸ்வரர் ஆகியோர் உள்ளனர்.

உற்சவ மூர்த்திகளாக பஞ்சமுக விநாயகப் பெருமான், விநாயகப் பெருமான், சதுர்த்திப் பிள்ளையார், இராஜராஜேஸ்வரி, வள்ளி, தேவசேனா, முருகப் பெருமான், மஹாலட்சுமி, சண்டேஸ்வரி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஆலயத்தின் தென்புரத்தில் விநாயகர் புஷ்கரணி என்னும் தீர்த்தம் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தின் தல விருட்ஷம் அரச மரமாகும்.

நித்திய நைமித்திய பூஜைகளுடன் மாதம் தோறும் வளர்பிறை, தேய்பிறை, சதுர்த்தி, தைப்பூசம், ஆனி உத்தரம், நவராத்திரி விரதம் ஆகியன காலந்தோறும் நடத்தப்பெறும் விழாக்களாகும். வரலட்சுமி விரதம், கேதாரகௌளரி விரதம் போன்ற தினங்களில் திருவிளக்குப் பூஜை நடைபெறுகின்றது. ஸ்கந்தசஷ்டி விரதம், சர்வாலய தீபம், விநாயக சஷ்டி விரதம், திருவெம்பாவை ஆகியனவும் சிறப்பாக விழாவெடுத்துக் கொண்டாடப்படுகின்றன.

சித்திரை மாத சுவாதி முதல், தொடர்ந்து பதினைந்து தினங்கள் கரைப்பிரான் பிள்ளையார் ஆலய மகோற்சவம் நடைபெறுகின்றது.

மேற்படி கரைப்பிரான் பிள்ளையார் கோவிலின் மூலம் வழங்கப் படும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களாவன:

1. திருவிழாக் காலங்களில் அன்னதானம் வழங்குதல்
2. விஷேட தினங்களில் அன்னதானம் வழங்குதல்
3. சமயச் சொற்பொழிவு இடம்பெறுதல்
4. பாலர் பாடசாலை அமைத்து மத வேறுபாடின்றி காலை சத்துணவு, பால் முதலியன வழங்குதல், இலவசக் கல்வி வழங்குதல்.
5. சிறுவர் முதல் இளைஞர் வரை (ஆண்கள், பெண்கள் உட்பட) திருவெம்பாவை காலங்களில் அயலில் உள்ள ஆலயங்களுக்கு பல்வேறு வீதிகளினூடாக திருப்பள்ளி எழுச்சி, கூட்டுப் பிரார்த்தனை செய்து வருவர்.
6. வருடந்தோறும் திருவெம்பாவை பூர்த்தி தினமன்று அதில் பங்குபற்றும் மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாசக்

கொப்பிகள், எழுதுகருவிகள் மற்றும் வசதி குறைந்த மாணவர் களுக்கு இலவசமாகக் கல்வி உபகரணங்களை வழங்கல்,

7. மஹோற்சவ கால பூர்த்தி தினமான பூங்காவன தினமன்று பாலர் பாடசாலை பிரதேச மட்டத்தில் பங்குபற்றி வெற்றிபெற்ற இளைஞர்களை கௌரவித்தல், அவர்களுக்கு பயிற்சி அளித்த ஆசிரியர்களைக் கௌரவித்தல்,
8. வருடம் தோறும் பாடசாலை மாணவர்களை ஆலயங்களுக்கும் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கும் இலவசமாக அழைத்துச் செல்லல்,
9. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில், க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த. உயர் தரம், பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்ற கிராமத்து மாணவர்களுக்குப் பதக்கம் அணிவித்து கௌரவித்தல்,
10. உற்சவ காலங்களில் நடைபெறும் சமய அறிவுப் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கல்,
11. தைப்பூசம், விஜயதசமி தினமன்று (ஏடுதொடக்குதல்) இளஞ் சிறார்களுக்குப் பயன்படும் கொப்பிகள், எழுது பொருட்கள் அன்பளிப்புச் செய்தல்,
12. காலம்தோறும் விழாக்கள், பண்டிகைகள் மற்றும் விரதங்கள் தொடர்பான விபரம் அடங்கிய தொகுப்பு நூல்களை வெளியிடுதல்,
13. வருடத்தில் தை மாத பூசை தினத்தை அண்மித்து கிராம ஊர்வலம் நடத்துதல்,
14. வருடத்தில் ஆசிரியர் தினமன்று பாலர் பாடசாலை ஆசிரியர் களை கௌரவித்தல்.

## நிறைவுரை

ஒரு பிரதேசத்தின் சமூக வரலாற்றை அடுத்துவரும் சந்ததியினருக்குக் கடத்திச் செல்வதில் ஆலயங்களின் பொறுப்பு மிக முக்கியமானதாகும். கட்டிடங்களை விருத்திசெய்வதில் அக்கறைகாட்டும் சைவக் கோவில்

நிர்வாகத்தினர் அக்கோவில்களின் வரலாற்றைப் பேணுவதில் அக்கறை கொள்வதில்லை என்பதை இன்று நாம் கண்கூடாகக் கண்டு வருந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. தமது வரலாற்றைப் பேணுவதில் கிறிஸ்தவ மத நிறுவனங்கள் மிகவும் தீர்க்கமாக உள்ளனர். அவர்கள் பேணிவரும் ஆவணங்கள் மிகுந்த பொருட்செலவில் காலம்தோறும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளதை ஆய்வாளர்கள் அனுபவரீதியாக அறிந்துகொள்வர்.

விதிவிலக்காக சைவக்கோவில்களின் வரலாறுகள், கர்ணபரம்பரைக் கதைகளாலும் மேம்போக்கான பதிவுகளினாலும் ஆக்கப் பெற்றுள்ளதையே காணமுடிகின்றது. இதற்கு விதிவிலக்காக, புராதன சைவாலயங்களை குறிப்பிடலாம். மேற்படி ஆலயங்களின்மேற் பாடப்பெற்ற பக்தி இலக்கியங்கள் அவ்வாலயங்களின் புராதன வரலாற்றையும் முக்கியத்துவத்தையும் ஒரு குறிப்பிட்ட வரையறை வரையில் தக்கவைத்துக் கொண்டுள்ளன. ஆனைக்கோட்டை ஆதி விநாயகர் கோவிலின் வரலாறு அப்பிரதேசத்தின் சமூக வரலாற்றுடன் தொடர்புபட்டது. எழுபதுகளில் சிறு கட்டிடமாக இருந்த அக்கோவிலை, அக்காலகட்டத்தில் இளைஞர்களாக இருந்த சோ.சிவகுமார சர்மா, பவளகுமாரன், ரத்தினகுமாரன், நந்தகுமாரன், செல்வராஜா, குணரத்தினம், செல்வநாயகம், மகேந்திரன், பாஸ்கரன், மனோகரன், சொர்ணா என ஒரு இளைஞர் கூட்டம் இந்து இளைஞர் சபை என்ற பெயரில் சபையொன்றினை எமக்குள்ளேயே உருவாக்கிக் கட்டி வளர்த்தோம். அக்காலகட்டத்திலேயே ஆலயத்தின் முதலாவது விக்கிரக ஊர்தியான சகடை செய்யப்பட்டது. அதற்கான பொருளாதாரத்தை சேர்த்துக்கொள்ள நாம் பட்டபாடு நாமே அறிவோம். சகடையை செய்து முடித்து, அதனை கோவிலடிக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு நிதி வசதியின்றி மானிப்பாயிலிருந்து அதனை பெருந்தெருவால் இழுத்துவந்த நினைவுகளும் வரலாறே. இன்று கோவில் வானுயர வளர்ந்து நிற்பதற்கான வியர்வையை எம்மைவிடவும் அதிகளவில் சிந்தியவர் அன்றும் இன்றும் கோவிலுடனேயே தன் வாழ்வை இரண்டறக் கலந்து நிற்கும் சிவத்திரு சோ.சிவகுமாரக் குருக்கள் அவர்களே. அவரது பரம்பரை வழியில் பராமரிப்புக்கு உட்படுத்தப்படும் கோவில் இது. தேவஸ்தான பரம்பரை வழியில் சுவாமிநாத ஐயர், பொன்னையா ஐயர், சோமசுந்தரக் குருக்கள் ஆகியோர் வழியாக இன்று இவ்வாலயத்தின் பொறுப்பு சிவகுமாரக் குருக்களிடம்

வந்தடைந்திருக்கின்றது. எதிர்கால சந்ததியினருக்கு இக்கோவிலின் வரலாற்றை ஆற அமர இருந்து சொல்வதற்கு எம்மில் எவருமே இருக்கப்போவதில்லை. நாம் இன்று விட்டுச் செல்லும் வரலாற்றுக் குறிப்புகள் மட்டுமே எதிர்காலச் சந்ததியினருக்கு பயன்படப்போகின்றன.

ஆலயத்தின் ஆவணங்களிலிருந்து இவ்வாலயத்தின் பூர்வீக வரலாற்றைத் தோண்டித் துருவி எடுத்து அதனை ஆவணப் படுத்தவேண்டிய பொறுப்பு இன்று சிவகுமாரக் குருக்களிடம் உள்ளது. பொருத்தமான அறிஞர்களை, ஆய்வாளர்களை அணுகி ஆலய வரலாற்றை ஆவணப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றேன். கரைப்பிரான் ஆலயம் தொடர்பாக இக்கட்டுரையை வரைவதற்கு எனக்கு உதவியாக இருந்த பிரசுரம் 'தீபபூஜையும் தோத்திரப் பாமாலையும்' என்ற நூலில் இடம்பெற்றுள்ள 'ஆலயம் தொடர்பான தகவல்கள்' என்ற பகுதியேயாகும். மேற்படி எமது ஆலயம் பற்றிய மேலதிக வரலாற்றுத் தகவல்களை எனக்கு வழங்க எவராயினும் முன்வருவார்களாயின் கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய வரலாற்றை மேலும் விரிவாகப் பதிவுசெய்யலாம்.

**என்.செல்வராஜா**